# சுதேசமித்திரன்

6—4—47

விலை 4 அணா.



SWADESAMITRAN ILLUSTRATED WEEKLY




க்ரைப் வாட்டர் இப்பொழுது மருந்து சாமான்கள் கட்டுப்பாடு அறிக்கையில் சேர்க்கப்பட்டிருக்கி...
... பயோகிப்பவரின் விலை பாட்டில் விலை ரூ. 2—2—0.



ஜோதிஷ வித்வான்

**V. S. சேஷாத்ரியாச்சாரியார்**

**45, பரோடா தெரு, தியாகராயநகர், சென்னை 17.**

ஒரு ஜாதகம் விவரமாகப் பார்க்க..................ரூ 5.
எதிர்காலத்தைப்பற்றிய மூன்று கேள்விகளுக்கு...ரூ. 1.
மேல் கேள்வி ஒன்றுக்கு.............................அணா 8.
ஜாதகத்துக்கு ஒரு வருஷ பலன் மாதவாரி எழுத ரூ. 5.
ஜாதகம் அல்லது கடிதம் எழுதும் நேரம் தேவை.
ஒரு ஜாதகம் கணிக்க.......................................ரூ. 3.
பிறந்த ஊர், தேதி. மணி தேவை. வி. பி. சார்ஜ் பிரத்யேகம்.

குழந்தைகள் விரும்புவது

**காஸ்டோபீன்**




ஏனெனில், சாக்லேட் மணமுள்ளது. இதர மலமிளக்கிகளின் துர்வாசனையால் அவற்றை வெறுக்கின்றனர். நல்ல ஆரோக்கியத்துக்கு சிறந்த உதவியளிக்கும். மலச்சிக்கலை ஒழிக்கும். தனி பழக்கத்தை உண்டுபண்ணுது

ஒரு புட்டி தயாராக வைத்துக் கொள்க.




**CASTOPHENE**

**CASTOR OIL CHOCOLATES**

**பாத்ருடுவின் "பால சஞ்சீவினி"**

(Regd.)

குழந்தைகளின் ஈரல், குலை, ஜுரக்கட்டி வியாதிகளை சொற்ப காலத்தில் நிச்சயம் குணமளிக்கும் சிறந்த மருந்து இது ஒன்றுதான். அசல் விஜயநகரம் மருந்து. போலிகளைக் கண்டு ஏமாறுதீர்கள்.

**Dr பின்னா பாப்பய்யா பாத்ருடு & பிரதர்,**
11, தெற்கு மாட வீதி, மயிலாப்பூர்.

| கும்பகோணம் கிளை:— | திருச்சி கிளை:— |
| --- | --- |
| 7, சாரங்கபாணி கோவில் கீழவீதி. | 15, புகழிய பிள்ளை தெரு, தெப்பக்குளம் போஸ்டு. |

கூந்தல் விருத்திக்கு சுலப சிக்கன முறை
உங்களுக்கு தேவையான எண்ணெயில் கலந்து கொள்க
காஷ்மீர் குஸும்
பிரேமலீலா

யுனைடெட் கன்ஸர்ன்,
54, பந்தர்தெரு, மதராஸ்.

★

நறுமண சரும ரக்ஷிணி
ஸாண்டல்க்ஸ்
முகப்பரு
தீப்புண்
காயங்கள்
சொறி
சிரங்கு
குணமடைய
முகக்ஷவர உதவி

ஏஜண்ட்ஸ்: யுனைடெட் கன்ஸர்ன்
54, பந்தர்தெரு, மதராஸ்.

★

ஆயுர்வேத வித்வான் B.V. பண்டிட்ஸ்
"சத்வைத்யசாலை, நஞ்சன்கூடு"
குடும்ப அவசியங்கள்
கஸ்தூரி மாத்திரை
கோரோஜனை மாத்திரை
பேதியாக மாத்திரை

ஏஜண்ட்ஸ்: யுனைடெட் கன்ஸர்ன்,
54, பந்தர்தெரு, மதராஸ்.





**பாண்டியன் இன்ஷ்யூரன்ஸ்**

**கம்பெனி, லிமிடெட்.**

(இந்தியாவில் ஸ்தாபிதம் 1933)

தலைமை ஆபீஸ் : மதுரை.

சிறந்த சேவை செய்து வருகிறது.

**நெருப்பு, மோட்டார், விபத்து**

முதலிய

சகலவித இன்ஷ்யூரன்ஸ் திட்டங்கள்.

மொத்த ஆஸ்திகள் ரூ. 62,00,000.

கிளைகள் : பம்பாய், அகமதாபாத், கல்கத்தா, ராவல்பிண்டி.

★

பிரதம ஏஜெண்டுகள் :

**எ. & எப். ஹார்வி லிமிடெட்.**

மதுரை Etc.

மிகவும் சிறந்தது

ஸ்தாபிதம் 1914.

மணி மார்க்

பட்டணம் பொடி.

★ காரமும்

★ குணமும்

★ மணமும்

உடையது

மணிமார்க் பொடி.

நாசிக்கு உகந்தது

நீங்கள் விரும்புவது

மணிமார்க் பொடியே

உங்கள் தேவைக்கு உங்களூர் ஏஜண்டிடம் எப்போதும் கிடைக்கும்.

ஆர். முகம் & கம்பெனி

5, ஓல்டு ஜெயில் தெரு, சென்னை 1.

# நரையை ஒழியுங்கள்

"போரின்" பெயர் பெற்ற மூலிகை வாசனை ஆயுர்வேத எண்ணெய் நரையை ஒழிக்கின்றது. தலை சுற்றுதல், தலை வலி, தலைமொட்டை முதலியவற்றை குணப்படுத்தும். கேசம் சுருண்டு பிரகாசமடையும்.

ஸாம்பிள், விலை ரூ. 2—8—0

பாதி நரைக்கு, விலை ரூ. 3—8—0

முழு நரைக்கு, விலை ரூ. 5—0—0

Shri Vishnu Ayurved Bhavan
No. 2, P.O. Warisaliganj
(GAYA)




ஒரிஸ்ஸா, நைஜாம், ஆந்திரா ஜில்லாக்களுக்கும், தமிழ் நாட்டுக்கும் ஏஜண்டுகள்:—

ஸீதாராமா ஜெனரல் ஸ்டோர்ஸ்,

பர்ஹாம்பூர்--செகந்திராபாத் பெஜவாடா — மதுரை.

தமிழ் முஸ்லீம்களுக்கொரு நற்செய்தி.

## ஸஹீஹ் புகாரீ

(தமிழில் புகாரீ சுருக்கம்)

"தாருல் இஸ்லாம்" ஆசிரியர் அல்ஹாஜ் பா. தாவூத்ஷா பி. ஏ. அவர்களால் தயாரிக்கப்பட்டிருக்கும் புகாரீ ஷரீப் என்னும் மாபெரும் ஹதீது கிரந்தத்திலிருந்து பொறுக்கி எடுக்கப்பட்ட அருமையான ஹதீதுகளின் அசல் மொழிபெயர்ப்பும், விரிவான வியாக்யானமும் நிறைந்த, சுமார் 600 பக்கமுள்ள தமிழ் நூல் வெளிவந்துவிட்டது. விலை ரூ. 7—8—0. முன்பணம் அனுப்புவோர்க்குத் தபாற் செலவு இனாம். வி. பி. பி. சில பிரதிகளே அச்சாகியுள்ளன. முந்துங்கள்.

ஷாஜஹான் புத்தகசாலை, 30, சாந்தோம், சென்னை 4.

## புதிய சாஸ்திரீக முறை



உங்களுக்கு இளமையின் தெம்பும் ஜீவசக்தியும் குன்றியுள்ளதா? உடனே டாக்டர் ஏ. ஜி. வால் அவர்களிடம் ஆலோசனை பெறுங்கள். ஆண், பெண் இரு பாலரின் தீராத நோய்களையும் எளிதில் தீர்க்கும் நிபுணர். அவரது விடாமுயற்சியுடன் நடத்திய ஆராய்ச்சியின் பயனைத் அனுசரித்து வரும் "புதிய சாஸ்திரீக முறை" உங்களைப் புதிய மனிதராக்கும். உடனே கீழ்க்கண்ட விலாசத்தில் அவரிடம் ஆலோசனை பெறுங்கள். பம்பாய் ஆஸ்பத்திரி, 1/71, பிராட்வே, ஜி. டி. மதராஸ். ஆலோசனை நேரம்:—காலை 9-மணிமுதல் பகல் 12-மணி வரை. மாலை 4-மணி முதல் 7-மணி வரை. ஞாயிறு காலை 9-முதல் 12-மணிவரை மட்டும். பதிலுக்கு ஸ்டாம்பு அனுப்பவேண்டும்.






# கால் வலி, ரணம் பித்தவெடி

முதலிய நோய்கள் எளிதில் குணமாகி சுகம் பெறலாம்

★

பிரதி வருஷமும் உலகம் முழுவதிலும் கோடிக்கணக்கான பேர்கள் ஜாம்பெக்கின் மூலம் கால் நோய்கள் நிவாரணமாகி சுகம் பெறுகின்றனர்.

இம்மெழுகிலுள்ள சுத்திகரிக்கப்பட்ட மூலிகை எண்ணெய்கள் ரணத் துவாரங்களுக்குள் சென்று சமனமூட்டி வலியையும் வீக்கத்தையும் குறைத்து பழுதடைந்த கால் தசைகளைப் பலப்படுத்துகின்றது. பருக்களை ஜாம்பெக் மிருதுவாக்கி எடுத்துவிட சுலபமாகும். உடைந்த கொப்புளம், சிரங்கு கட்டி இவற்றில் தடவினால் சீப்பிடிக்காமல் தடுத்து குணமாக்கும்.



Zam-Buk

உலகப் புகழ்பெற்ற மூலிகை மெழுகு.

மிருகக் கொழுப்பு சேராதற்கு உத்தரவாதம்.

மாதவிடாய் நின்று விட்டதா? எவ்வளவு நாள்பட்டதாயிருந்தாலும் சுலபமாகவும் ஹானியின்றியும் 24-மணியில் வெளிப்படுத்தும். "சம்பகிரேசனி" உத்தரவாதமானது. 30 வருஷம் புகழ்பெற்றது. கவர்ன்மெண்டு ரிஜிஸ்டர்ட். விலை ரூ. 2—12—0 தபாற் செலவு அணா 12.

கர்ப்பத்தடை நீங்கள் விரும்பிய விதம் கர்ப்பத்தடை செய்ய "தம்பதி சாகா" சிறந்த மருந்து. ஹானியற்றது. நிரந்தரம் ரூ. 4—4—0 தாற்காலிகம் ரூ. 1—8—0 தபாற் செலவு அணா 12 தனி.

ஆண்மை "மதன் விலாஸ் ரஸாயன்" அற்புத மருந்து வீர்யமின்மை நரம்புத் தளர்ச்சி, பசியின்மை கீல் வாயு, இருமல் முதலியவை ஒரே வாரத்தில் குணமாகும். வாழ்க்கையை நன்கு அனுபவிக்கலாம். ரூ. 2—8—0 தபாற் செலவு அணா 12.

**Kaviraj M. Kavyatirtha (S. W)**
70, Cornwallis Street, Calcutta 6.
Stockist: Milton & Miller, 157, Broadway, Madras.

அனைவருக்கும் திருப்தி யளிக்கக்கூடிய எல்லாவிதமான

நவீன பட்டு & நூல் ஜவுளி ரகங்களுக்கு

மாருதி கிளாதமார்ட்

டெலிபோன் 2246 தந்தி: கிளாவர் பீடி

(USE ALWAYS)
500 1st. Quality Spade Clover Beedies. 500
SPADE CLOVER
M. MOHAMED OOMER, 37, MANADY ST. MADRAS.

லேட் கான்சாகிப் M. முஹம்மது உமர்சாகிபுவின் குமாரரான முஹம்மத் நூருல்லா என்று பெயர்கொண்ட நான் இவ்வியாபாரத்தை மிகவும் அபிவிருத்தி செய்துள்ளேன். மிகச் சிறந்த புகையிலையையும் உயர்தரமான சரக்குகளையும் உபயோகித்தே

ஸ்பேட் கிளாவர் பீடிகள்

தயாரிக்கப்படுகின்றன. இந்த பீடிகளின் ரகமும், மணமும் குணமும் என் தகப்பனார் காலத்திலிருந்ததைப் போன்றே சிறப்பாக விளங்குகின்றது.

முகம்மது நூருல்லா
ஸோல் புரொப்ரைட்டர்
ஸ்பேட் கிளாவர் & ஆர்டீன் பீடிகள்
37, மண்ணடி, மதராஸ்.





வாழிய செந்தமிழ்! சுதேசமித்திரன் வாழ்க நற்றமிழர்!

வாரப்பதிப்பு

Vol. XVIII] வியஷு பங்குனி 24உ ★ 1947-ஞ ஏப்ரல் 6உ [No. 10


# ஆசிய ஜோதி

ஆசிய தீபத்தின் ஜோதி அகில உலகிலும் வீசி அடிக்கிறது! குடத்திலிட்ட விளக்குபோல ஒளிமங்கிக் கிடந்த காலம் மறைந்து புத்துணர்வு பெற்ற பகுதியாக இன்று ஆசியா கண்டம் மிளிருகிறது. நாகரிக உலகத்தைச் சமாதான அடிப்படையில் நிர்மாணிக்கும் பொறுப்பு தனக்கு உண்டென்ற உணர்ச்சியை சமீபத்தில் டில்லியில் கூடிய ஆசியப்பிரதிநிதிகளின் மகாநாடு அறிவுறுத்தியது. அம்மகாநாட்டில் கலந்து கொண்ட சுமார் 30 தேசப் பிரதிநிதிகளும் பாஷை, மதம், கலைப்பண்பு, முதலிய ஒவ்வொன்றிலும் வேறுபட்டவர்தாம். ஆயினும் இவர்களனைவரும் ஒரு விஷயத்தில் ஒருமுகமான லட்சியத்தைக் கொண்டவர்கள். பண்டித ஜவாஹர் மகாநாட்டில் பேசியதைக் கவனித்தோருக்கு இவ்வுண்மை தெள்ளெனத் தெரிந்திருக்கும். ஆசியாவின் அடிப்படை ஒற்றுமையை வற்புறுத்தி அதைச் செயல் மூலம் ஈடேற்றி வைக்கத் தற்போது நடக்கும் முயற்சியை ஆதரிப்பதென்பது மகாநாட்டின் பிரதிநிதிகளின் நோக்கம். இந்த லட்சியத்தின் கருத்தை ஐரோப்பிய நாடுகள் ஒதுக்கிவிடுவதற்கில்லை.

ஆசியாவின் பல்வேறு பகுதிகளுக்கும் கூடியவரை மத்திய ஸ்தலமாக விளங்குவது இந்தியா. இந்தியாவைப்போல் ஆசியாவுக்கு வழிகாட்டியாக விளங்கக்கூடியது வேறெதுவுமில்லை. ஆசிய தேசங்கள் பலவும் இவ்வுண்மையை ஒப்புக்கொண்டிருப்பது பெருமையளிக்கக்கூடியது. இவ்வளவு பெருமையளிக்கக்கூடிய ஒரு புனிதமான பொறுப்பை மேற்கொள்வதில் இந்தியாவிலுள்ள எல்லாத் தரப்புகளும் உற்சாகத்துடன் ஒத்துழைப்பதே முறை. ஆனால் முஸ்லிம் லீகினரோ ஒதுங்கி நிற்பதுமட்டுமில்லை; இதுவும் ஒரு காங்கிரஸ் சூழ்ச்சி என்ற வழக்கமான பாடத்தைப் படிக்கின்றனர். வெளியிலுள்ள முஸ்லிம் நாடுகள் பலவும் இம் மகாநாட்டில் கலந்துகொண்டிருப்பது இங்கு குறிப்பிடத்தக்கது.

சுருங்கச்சொன்னால் தற்போது மேனாடுகளிடம் இருந்து வரும் உலகத்தலைமைப் பொறுப்பு கீழ் நாடுகளிடம் மாறிவிடக்கூடும். பண்டித ஜவாஹர் எடுத்துக் காட்டியதுபோல் "யாரையும் கெடுக்கும் எண்ணம் ஆசிய நாடுகளுக்குக் கிடையாது; உலகம் முழுதும் உய்ய வழி காண வேண்டுமென்பதே அவற்றின் கருத்தெல்லாம்." ஆனால் ஐரோப்பிய நாடுகள் இதுவரை கையாண்டு வந்துள்ள முறை முற்றிலும் வேறு. மற்றவர்களை ஒடுக்குவதிலும், சுரண்டுவதிலுமே அவை அக்கரை காட்டி வந்திருக்கின்றன. பயங்கரமான யுத்தங்கள் பல மூண்டு, உலகம் கொடிய நாசத்துக்குள்ளானதும் அதன் பலன் தான். இன்னொரு யுத்தம் ஏற்பட்டால், உலகின் கதி என்னாகுமென்று சொல்லத் தேவையில்லை. விக்ஞான சாதனங்களை நிர்மாண வழிகளில் பயன்படுத்துவதன் மூலம் உலக முழுதும் செழிப்புறக்கூடும். அந்நிலையில் எல்லா மக்களும் இன்பமயமான வாழ்வு வாழ முடியும். எந்த நாடும் இன்னொன்றைச் சுரண்டிப்பிழைக்க வேண்டிய அவசியம் சிறிதுமிராது. ஆனால் ஆதிக்க வெறியில் மூழ்கிய பல மேனாடுகளுக்கு இந்தப்பட்டவர்த்தனமான உண்மை புலனாகவில்லை. அவை மீண்டும் உலகைப் படுகுழியில் இறக்குமுன், உலகத்தலைமை ஆசிய நாடுகளுக்கு மாறினால் எல்லோருக்கும் க்ஷேமமுண்டு.

—★—

# சென்னை மந்திரி சபை


சென்னை சர்க்காரில் இப்போது மொத்தம் 13-மந்திரிகள் இருக்கின்றனர். பிரதம மந்திரி ஓமந்தூர் ஸ்ரீ ரெட்டியார் முதலில் 8-பேர்களை நியமித்து மந்திரி சபையை நிறுவினார். இப்போது புதிதாக 5-பேர்கள் சேர்க்கப்பட்டுள்ளனர்.




ஸ்ரீ காளா வெங்கட் ராவ்
—ரெவின்யூ



ஸ்ரீ ஏ. பி. ஷெட்டி
—சுகாதாரம்




ஸ்ரீ கூர்மையா
—கிராமாபிவிருத்தி




ஸ்ரீ அவிநாசிலிங்கம் செட்டியார்
—கல்வி



ஸ்ரீ டேனியல் தாமஸ்
—மதுவிலக்கு



லண்டனிலிருந்து இந்தியாவிற்கு விமானத்தில் வந்திறங்கியவுடன் வைஸ்ராய் மவுண்ட் பாட்டனையும், லேடி மவுண்ட் பாட்டனையும் சேர்த்து எடுத்த படம்.




ஆசிய நாடுகளின் [மகாநாட்டுக்காகப் புதிய டில்லி வந்திருந்த] பிரதிநிதிகளுக்குப் பண்டித ஜவாஹர் விருந்தளித்தபோது எடுத்த படம்.




ஆசிய நாடுகளின் மகாநாட்டுப் பிரதிநிதிகளுக்கு வைஸ்ராய் மவுண்ட் பாட்டனும் அவர் தம் மனைவியும் சென்ற மாதம் 28-ந்தேதி டில்லியில் நடத்திய உபசரிப்பின்போது எடுத்த படம்.

## லாகூர் ஸ்திரீகள் சங்க ஆண்டுவிழா



லாகூர் தென்னிந்திய ஸ்திரீகள் சங்கத்தின் 11-வது ஆண்டு கூட்டம் சமீபத்தில் நடைபெற்றது. கழுத்தில் மாலைகளுடன் உட்கார்ந்திருப்பவர்களில் நடுவே இருப்பவர்தான் சங்கத் தலைவர் ஸ்ரீமதி டி. ஆர். லலிதாம்பாள்.




சமீபத்தில் டில்லியில் உணவு மெம்பர் டாக்டர் ராஜன்பாபு உணவு, உணவு சத்துக்கள் பொருட் காட்சியைத் திறந்து வைத்தார். நாட்டின் உணவு வசதிகளைப் பெருக்கி உபயோகத்தை மக்களுக்கு உணர்த்துவது இதன் நோக்கம். மேற்படி காட்சியில் ஒரு பகுதியை ராஜன் பாபு பார்வையிடுகிறார்.

## அட்டைப் படம்

★

அழகோவியம் கண்டு உள்ளம் ததும்புறும் வண்ண மலர்கள் இதழ் விரிந்து சிரிக்கும் இன்பகரமான காட்சிக்கு இணையே இல்லை. அந்த நல்ல மலர்ச் சிரிப்பை வஸந்தகாலத்தில் காணும்போது வருஷமெல்லாமே நித்திய வசந்தமாக விருக்கக் கூடாதா? என்ற பேராவலும் மனத்திடை உதிப்பது இயற்கை. அவ்வெண்ணத்தை உண்டுபண்ணும் மலர்ச்செடிகளின் தோற்றம்.




75

## ஞானோபதேசம்

**கல்லினால்வரு கல்முகில்
விலக்கிய
கரியமாமுகில் சொன்னான்**

[சுயோதனன் — துரியோதனன்: கல்முகில் - (இங்கே) கல் மழை. கரிய மாமுகில் - கருமை நிறமுள்ள சிறந்த மேகம் போன்ற கண்ணன்.]

அபிமன்யு கல்யாணத்திற்குப்பின் விருந்தினர்களெல்லாம் விராட சபையில் வந்துகூடி, இனி 'என்ன செய்யலாம்? விரைவில் நடவடிக்கை எடுத்துக் கொள்ள வேண்டுமே!' என்பது குறித்து ஆலோசனை செய்தார்கள். அச்சபையை விராடன் விருந்தினர்களின் தகுதிக்குத் தக்கபடி மணிகளாலும், மலர்களாலும் அலங்கரித்திருந்தான். மற்ற அரசர்களோடு பலராம கிருஷ்ணர்களும் தங்கள் தந்தை வசுதேவருடன் அச்சபையில் உட்கார்ந்திருந்தார்கள். இளைய சாத்தகியும் பலராமனுக்கருகில் வீற்றிருந்தான். துருபத புத்திரர்களும் திரௌபதி குமாரர்களும் சுபத்திரை மகனான அபிமன்யுவும் விராட புத்திரர்களான உத்தரன் முதலானவர்களுடன் வீற்றிருந்தார்கள். ஒரு முகூர்த்த காலம் பரியாலோசனை செய்தபின் பல அரசர்களும் கண்ணனை நிமிர்ந்து பார்த்தார்கள்.

### விவாதம்

கண்ணன் அவர்களுக்குச் சூதாட்டத்திலே பாண்டவர்கள் வஞ்சிக்கப்பட்டும், சத்திய விரதம் பூண்டு பதின்மூன்று ஆண்டுகள் சகிக்க முடியாத துன்பங்களுடன் கழித்ததை நினைப்பூட்டினான். பிறகு,

**'சொலலினால்ஒரு தூதினில்
அறியலாம்
சுயோதனன் நினை(வு)'என்று**

தூது அனுப்பித் துரியோதனனுடைய நினைவைத் தெரிந்துகொள்வோம் என்று கண்ணன் சொல்லியதைப் பலராமன் சிலாகித்து, "துரியோதனுதியரைமட்டும் குறை கூறுவதில் நியாயமில்லை. தர்மரும் பிடிவாதமாகச் சூதாடியே ஜயிக்கப்பட்டார். ஆகவே இன்சொல்லினால் ஒரு தூதன் போய்த் துரியோதனனோடு சமாதானம் பேசுவதுதான் போர் புரிந்து ராஜ்யத்தைக் கவர்ந்துகொள்வதைக் காட்டிலும்சிலாக்கியமானது" என்றார்.

உடனே சாத்தகி கோபத்துடன் சபையில் எழுந்து நின்று, "அண்ணா! உம்முடைய மேனி வெள்ளையாக இருந்தபோதிலும், ஹிருதயம் கறுப்பாகவே யிருக்கிறது; வார்த்தையோ வெள்ளைப் பேச்சு; வடிவைக் காட்டிலும் மிக வெள்ளையாக இருக்கிறது! துரியோதனனுக்குத் தூது விடுவதா? கலப்பையை ஆயுதமாகக்கொண்டவரே! நீர் இனி அரசர் நெறியை விட்டு விவசாயம் செய்யப் போகவேண்டியதுதான்! சூதாட்டத்தில் பயிற்சியில்லாத தர்மாத்மாவை வஞ்சித்தவர்களோடு இனி வாதாடப்போவது போர்க் கருவியல்லவா? தூதனுப்பி நாடு கேட்பதும் ஒருவகை யாசகந்தானே?" என்றெல்லாம் மடமட வென்று பேசினான்.

### தீர்மானம்

பாஞ்சால மன்னனாகிய துருபதன் சாத்தகியைப் புகழ்ந்து, "இன்சொல் சொல்லுகிறவனைத் துரியோதனன் சக்தியற்றவனாக நினைப்பான். இந்த விவகாரத்தில் போர்தான் முடிந்த முடிவு என்பது எனது அபிப்பிராயம். முதல் முதல் பல்வேறு அரசர்களுக்கும் தூதர்களையனுப்பி அவர்களைப் படைத்துணையாக வரவழைப்போம். திருதராஷ்டிர மன்னனுக்கும் தூது அனுப்பலாம். என்னுடைய புரோகிதர் நல்ல வித்துவான்; அவர் கௌரவர்களிடம் எப்படிப்பேசவேண்டுமென்பதை அறிவார். நாமும் அவரிடம் சொல்ல வேண்டியதைக் கண்டிப்பாகவும் தெளிவாகவும் சொல்லி அனுப்பிவிடலாம்" என்று சொன்னான்.

துருபதன்சொல்லைக்கண்ணன் பாராட்டி, "அப்படியே தூதர்களைப் பல அரசர்களுக்கும் கௌரவர்களுக்கும் அனுப்பி வைப்போம்" என்று சொல்லி விட்டு விடைபெற்றுப் பந்துக்களுடன் துவாரகை சென்றான்

## உலூகன் தூது

புலசாலிகளான அரசர்பலர் விராடநகரம் வந்து சேர்ந்தார்கள். பாண்டவர்களுடைய சேனை பெருகி வருவதைக் கேள்வியுற்றதுரியோதனனும், பூமியைச் சலிக்கச் செய்வது போல அவ்வளவு பெரும் படையைத் திரட்டலானான். துருபதனுடைய புரோகிதனும் விரைவில் அஸ்தினபுரம் வந்து சேர்ந்தான்.

உலூகன் என்ற அப்புரோகிதனை விதுரர், பீஷ்மர், துரோணர் முதலானவர்கள் எதிர்கொண்டு, "ஞானமுனியாகிய தாங்கள் வந்த காரியம் என்ன?" என்று கேட்டார்கள். உலூகன், அவர்களை நோக்கி, "வனவாசமும் அஞ்ஞாத வாசமும் செய்து பாண்டவர்கள் க்ஷேமமாக வெளிப்பட்டார்கள் என்பதுதான் உங்களுக்குத் தெரியுமே; இப்போது பாண்டவர்களுக்குள்ள பேராற்றலும் நீங்கள் அறிந்ததுதானே! புத்திசாலித்தனமாக இப்போதாவது தர்மத்தை அனுசரித்துக் கொடுக்க வேண்டியதைக்கொடுத்து விடுங்கள்" என்று புத்தி சொன்னான். மேலும் அப்புரோகிதன்,

அன்றியே அவருடன்
மலேகுவம் என
அழிவினைக் கருதாமல்
வென்றியோ நினைந்(து)
எதிர்த்திரேல்
உங்களால் வெல்லுதல்
அரிதம்மா!

[மலேகுவம் - போர்செய்வோம். வென்றி-வெற்றி].

என்றும் துருபதன் சொன்னபடியே கண்டிப்பாகப் பேசினான்.

## போய் வாரும்!

அதுகேட்ட துரியோதனன் மிகவும் கோபித்து, "நானை ஆண்மையையும் தோள்வலிமையும் போர்க்களத்திலே காணலாம். புரோகிதரே! வந்த வழியே போய்வாரும்" என்று அதட்டிப் பேசினான். உலூகன் பன்சிரிப்புடன் பீஷ்மரையும் விதுரரையும் நோக்கினான். பீஷ்மர் துரியோதனனை நோக்கி, "தெய்வானுகூலத்தால் உன் சகோதரரான பாண்டவர்கள் க்ஷேமமாய் இருக்கிறார்கள்; தெய்வானுகூலத்தால் சமாதானத்தையே விரும்புகிறார்கள். நீயும் தெய்வானுகூலத்தைப் பயன்படுத்திக்கொண்டு சமர்த்தனாக அவர்களுடன் சேர்ந்து வாழ வேண்டும் என்பதுதான் இவர் தூதின் நோக்கம்" என்றார்.

இவ்விதம் பீஷ்மர் பேசிக்கொண்டிருக்கையிலேயே கர்ணன் பெருங்கோபத்துடன், பாண்டவர்கள் வனவாசம் முதலியவற்றைச்சரியாக நிறைவேற்றவில்லை; மீண்டும் நிறைவேற்றினால் நாட்டைப்பெறலாம்! பயமுறுத்தித் துரியோதனனிடம் ஒருகாசுபெறத்தான் முடியுமா? புரோகிதரே போய் வாரும்" என்று கண்சிவந்து மீசைதுடிக்கப் பேசினான்.

கடைசியாகத் திருதராஷ்டிரன் உலூகனைநோக்கி, 'பெரியவரே! நீர் கோபிக்க வேண்டாம். பாண்டவர்களிடத்திலும் எனக்கபிமானம் உண்டு. என்தம்பி பிள்ளைகளைத் துவேஷிப்பதும் தூஷிப்பதும் எனக்குக் கொஞ்சமும் பிடிக்கவேயில்லை. கர்ணனும் துரியோதனனும் அவர்களோடு ஒத்துவாழத் தெரியாதவர்கள். புரோகிதரே! தாமதிக்கவேண்டாம், போய்வாரும். பாண்டவர்களுடைய தர்மபுத்தியை மேலும் தூண்டி அவர்களை இன்னும் அதிகமான பொறுமையுடன் இருக்கும்படியாகச் செய்வது ஞானமுனியாகிய உமது கடமை. நானும் ஆலோசித்துப் பாண்டவர்களிடம் புத்திசாலியான சஞ்சயனைத் தூதனாக அனுப்பிவைப்பேன்" என்று சொல்லி அவனை உபசரித்து விடைகொடுத்து அனுப்பினான்.

## சஞ்சயன் தூது

உலூகன் போனபின்பு திருதராஷ்டிரன் குருவுக்குச் சமமான சஞ்சயனையழைத்து, "நீ பாண்டவர்களிடம் போய் நான் க்ஷேமம் விசாரித்ததாகச்சொல்லு; தர்மபுத்திரனுடைய தர்மபுத்தியை நான் பெரிதும் பாராட்டுவதாகவும் சொல்லு. துரியோதனனுடைய சிறுபிள்ளைத்தனத்தை அவர்கள் பாராட்டாமல் மேலும் தர்மபுத்தியுடனும், தியாகபுத்தியுடனும் வாழ வேண்டுமென்பது சாகும் வயதில் கிழவரின் விருப்பம் என்பதாகவும்சொல்லி வா. இராஜ்ய ஆசையைவிட வனவாசம் கூட மேலானதுதான்! போரில் இரத்தம் சிந்தி வெற்றி பெறுவதைக்காட்டிலும் பொருளாசையை வென்று அடையும் வெற்றியே மேலானது. இது என் அந்தரங்க அபிப்பிராயம் என்று சொல்லி இன்னும் சமயோசிதமாக நமக்கும் அவர்களுக்கும் நன்மைதரும் ஞானோபதேசங்களைச் செய்துவா" என்று வேண்டிக்கொண்டான்.

திருதராஷ்டிரன் உள்ளத்தைத் தெரிந்துகொண்ட சஞ்சயன் விரைவில் பாண்டவர்களிடம் சென்று திருதராஷ்டிரன் சொல்லியனுப்பிய செய்தியைத் தெரிவித்துப் பின்வருமாறு ஞானோபதேசமும் செய்தான்;

உற்ற யோனிகள்
தம்மில் உற்பவியாமல்
மானுட உற்பவம்
பெற்று வாழுதல்
அரிது; மற்(று) அதுபெறினும்,
மாயைசெய் பெருமயக்(கு)
அற்று ஞானிகளாய்
விளங்குதல் அரிது
வீடும் அறிவுபின்
பற்றுமாறு அரி(து) இங்கு
உனக்கு இவை
பண்பினோடு பலித்தவே.

[உற்பவம்-பிறப்பு. வீடுறும்-மோட்சமடையும். பற்றுமாறு-பற்றும் வழி.]

மானுடஜன்மம் அரிது என்றும், அறிவும் மாயைப் பெருமயக்கையறுத்து ஞானிகளாய் விளங்குவது அரிதென்றும், ஞானிகளிலும் மோட்ச ஆசையுள்ள உத்தம ஞானிகள் அரியரென்றும் கூறியபின், தருமருடைய வழி மோட்ச மார்க்கமாகத்தான் இருக்க வேண்டுமென்றான்சஞ்சயன் போராசை, பேராசை முதலான பேராசைகளையெல்லாம்ஒழித்து மோட்ச ஆசையுடன் மீண்டும் வனத்தை நோக்குவது ஐவருக்கும் நன்மை, நூற்றுவருக்கும் நன்மை என்றான்.





## தருமர் கோபம்

இந்த உபதேசங்களைப் பொறுமையுடன் கேட்டுக்கொண்டிருந்த தருமரும் பொறுமையை யிழந்து விட்டார். தவசியின் தருமத்தை அரசன் மேற்கொள்வது தகாதென்றார்; துஷ்ட நிக்கிரகம் செய்து சிஷ்டபரிபாலனம் புரிவதே ராஜ தர்மம் என்றார். தங்களுடைய இந்திரப்பிரஸ்த ராஜ்யத்தைக் கொடுத்தால் சமாதானம் ஏற்படும்என்றும், இல்லாவிட்டால், கலகம் பிறந்துதான் நியாயம் பிறக்க வேண்டியிருக்கும் என்றும் சொன்னார்.

நின் அறத்தினின் நீர்மை தன்னை
விளங்குமாறு நிகழ்த்தினும்,
மன் அறத்தினை விட்டுநல்லற
மன்னரானவர் முயல்வரோ?

[நின்! அறம் - உன்னுடைய தர்மம் நீர்மை-தன்மை. மன் அறம்-ராஜ தர்மம். தெவ்வர்-பகைவர். இருவிசும்பு - பெரிய வானம்.]


சஞ்சயன் சாதுவானதால் தனக்குரிய தர்மத்தை ராஜ தர்மமாக மயங்கிச் சொல்லி விட்டான் என்று தர்மர் கருதினார். தம்முடைய தர்மம் துஷ்டப் பகைவர்களைப் பூமியில் வைத்துப் பாராமல் வானில் ஏற்றி விடுவதுதான் என்று தர்மரே கோபித்துப் பேசத் தொடங்கியதும் சஞ்சயன் திடுக்கிட்டான். அப்போது பீமனும் கோபத்தீயைக் கக்கும் கண்களால் சஞ்சயனை நோக்கி, "நீர் உம்முடைய சாது தர்மத்தையும் சரியாகப் பரிபாலிக்கவில்லை: கௌரவர்களிடம் பக்ஷபாதத்துடன் எங்களை மீண்டும் காட்டுக்குப் போகச் சொல்லும் நீரும் ஞானியா, சாதுவா?" என்றெல்லாம் இரைந்து விரைந்து பேசத் தொடங்கி விட்டான். அர்ச்சுனனும் பீமனை ஆதரித்து, "போர்க்களத்தை இரத்தக்காடாக்கித் துரியோதனாதியர்களை வதஞ் செய்வதே எங்களுக்குத் தவமும் தருமமும்!" என்றான்.

## கோபம் தணிந்தது

அப்போது உடனிருந்த கண்ணன் பீமனையும், அர்ச்சுனனையும் சமாதானப்படுத்திப் பிறகு சஞ்சயனை நோக்கி, "இந்தப் பிள்ளைகள் பெரியோருக்குஅடங்காத பிடாரிகளாய் போய் விட்டார்கள்! நாம் சொன்னால் கேட்பார்களா? நீ திரும்பிப்போ, சஞ்சயா! கௌரவபாண்டவ விஷயத்தில் எனக்குச் சமபுத்தி உண்டு என்பதையும், கூடுமானால் சமாதானம் செய்துவைக்க விரும்புகிறேன் என்பதையும், இதற்காக நான் அஸ்தினபுரம் வரச் சித்தமாயிருக்கிறேன் என்பதையும் கௌரவர்களிடம் தெரிவிக்க வேண்டும்" என்று சொன்னான்.

சஞ்சயன் யுதிஷ்டிரரிடம் விடை பெற்றுக் கொண்டான். அவர், பெரியப்பாவுக்கும், பீஷ்மர் முதலானவர்களுக்கும் வந்தனம் தெரிவிக்கச்சொல்லி, மறுபடியும் சஞ்சயனின் முகம் நோக்கி, "நீ என்னை மன்னிக்க வேண்டும்: பொறுமையிழந்து அனுவசியமாக உன்னிடம் கோபித்துக் கொண்டேன்; அந்தப்பெரும்பிழையைப் பெரியோனாகிய நீ மறந்து விடவேண்டும். கூடுமானால், எங்கள் விஷயத்தில் நீதி செலுத்திச் சமாதானம் செய்து கொள்ளும்படியாகத் துரியோதனனுக்குப் புத்தி புகட்டுவாய்" என்று வேண்டிக்கொண்டார்.

சஞ்சயன் திரும்பி இரவில் ஹஸ்தினபுரி அடைந்து நடந்ததைச் சொன்னதும், அன்றிரவு திருதராஷ்டிரனுக்குக் கவலையால் உறக்கம் பிடிக்கவில்லை.




62

## ஆளுடைப் பிள்ளை

அரிமர்த்தனனுடைய அருமைப் புதல்வன், அழகிற் சிறந்தோன் ஆகிய ஜகந்நாத பாண்டியன் மணி முடி தாங்கி மாட்சியுடன் ஆண்டு மகத்தான கீர்த்தியை அடைந்தான். அவனுக்குப் பிறகு அரசாண்டவர் பலர். அவரும் தம் நாட்டுக்குச் சுடர்விளக்குகள் போலப் பிரகாசித்தவண்ணமாகவே வாழ்ந்தனர்.

பின்னர் கூன்பாண்டியன் என்பான் கிரீடத்துடன் நாட்டுச் சுமையையும் தாங்கலானான். அவன் புஜபல பராக்ரமம் நிறைந்தவன். பகைவர்களைச் சிங்கம் போல எதிர்த்து நின்று ஜயக்கொடி நாட்டிய சூரன். தன் மூதாதையர்களின் மகத்தான கீர்த்தியில், தனக்கும் பங்குண்டு என்பதை உலகத்துக்கு அறிவித்த அசகாய சூரன். ஆனால் ஓர் உடற்குறையும் மற்றொரு மனமாசும் அவனை அடைந்திருந்தன. பூர்வ ஜன்ம கர்மவினையால் உடல் கூனடைந்திருந்தது. சமணர்களின் மாயா ஜாலங்களின் பொய்ம் மயக்கம் உள்ளத்தில் புகுந்திருந்தது!

பாண்டிய வம்சம் பாழ்படுவதற்கு அவனுடைய உள்ளத்தின் களங்கம் ஒன்றே போதுமல்லவா? எந்த வம்சம் சைவ மதத்தின் ஆணிவேராக விளங்கியதோ, எந்த வம்சம் சைவத் தவமுறையை இகயத்தில் ஏந்திப் போற்றி வந்ததோ, அந்த வம்சத்தின் வழிமுறைத் தீபமான அவன் சமண மதத்தைப் பின்பற்றியொழுகினுல் என்றால் அதை எவரால் சகிக்கமுடியும்?

ராணி மங்கையர்க்கரசி சைவ ப்ரேமை கொண்டவள். அமைச்சர் குலச்சிறையாரும் சிவத்தொண்டு புரியும் சீலர். இவ்விருவரும் அரசனுக்கு ஆனமட்டும் அறிவுபுகட்டிப் பார்த்தார்கள். ஆனால் பலன் இல்லை. இறைவி மீனாட்சியிடம் முறையிட்டாள் ராணி. ஆதிதேவனின் திருப்பாதத்தில் வீழ்ந்து பிரார்த்தித்தார் அமைச்சர். எப்படியாயினும் மன்னன் சிவபெருமானின் சௌந்தர்யத்தில் ஈடுபட வேண்டும் என்பதே அவர்களுடைய பிரார்த்தனைக்குக் காரணம். ஆனால் அதற்குக்காலம் வரவில்லை. கலங்கினார்கள்; ஏங்கித்தவித்து உருகிப் போனார்கள்.

ஒருநாள் மன்னன் தனியே உட்கார்ந்திருந்தான். அவன் அப்போது சமணர்களின் நூலில் தன் மனத்தை ஈடுபடுத்தி ஆழ்ந்திருந்தான். ராணி அங்கேவந்து நின்றாள். கையிலே சமண நூலை வைத்துக்கொண்டிருந்த மன்னனைக் கண்டதும், அவள் அடைந்த துயரத்திற்கு அளவேயில்லை.



"நாதா!..." என்று தீனக் குரலில் தன்னை அழைத்த தேவியை நோக்கினான் மன்னன். அவளுடைய மலர் போன்ற வதனம் மங்கி மாசுபட்டிருப்பதைக் கண்டு 'ஏன், என்னமோபோல் நிற்கிறாய்?" என்று கொஞ்சும் பாவனையில், கேட்டான் மன்னன். அப்போது அவள் கண்களிலிருந்தும் நீர்த்துளிகள் சிந்தின. ஏனோ அவள் பேச்சுக்கு அப்போது தடை பிறந்துவிட்டது. கலங்கிய நிலைமை மாறுமலேயே அவ்விடத்தைவிட்டு அகன்றாள். மன்னனும் ஒன்றும் புரிந்துகொள்ள முடியாமல் நின்றான். அச்சமயத்தில் யாரோ ஒருவர் சமண முனிவர் வந்திருப்பதாகச் செய்தி வர அவரை நாடி வெளியே சென்றான்,

மன்னனிடம் பேச முடியாமல் திரும்பிய ராணி அமைச்சருடன் இறைவனுடைய ஆலயத்திற்குச் சென்றாள்.

"இறைவனே இன்னும் எத்தனை நாட்கள் இந்தச் சோகத்தீயால் எங்களைச் சுட்டு வருத்தப் போகிறாய்? உன் திருவுள்ளத்திலே கருணை ஏன் பிறக்கவில்லை?" என்று மனம் நொந்து வேண்டிக் கொண்டார்கள்.

அங்கே அருகே நின்ற அந்தணன் ஒருவன் அவர்களின் நிலையைக் கண்டு இரங்கி மேலும் நெருங்கி வந்து விசாரித்தான். "அந்தணரே! தாங்கள் எங்கிருந்து வருகிறீர்? உம்முடைய ஊர்யாது? அவ்வூரில் உள்ள விசேஷங்களைச் சொல்க!" என்று கேட்டனர் இருவரும். உடனே அவ்வந்தணன் கூறலானான்:" பெரியவர்களே! யான் சோழ நாட்டான். எங்கள் நாட்டிலே சீர்காழி என்றதொரு சிறந்த பதியுண்டு. அங்கே சிவபாதவிதையர் என்னும் மறையவர் பலகாலம் நோற்றதன் பயனாகப் பிள்ளை ஒன்றை அடையும் பேற்றினைப் பெற்றார். அப்பிள்ளை சாமான்யமான பிள்ளையில்லை. குமரக்கடவுளே அவருக்கு மகனாக வந்து அவதரித்துள்ளார். அக்குழந்தை மூன்று வயதே ஆகியிருக்கும்போது தந்தையாரின் தோள்மீது அமர்ந்து ஆலயத்திற்குச் சென்றது. தடாகப்படிக் கட்டிலே குழந்தையை அமர்த்திவிட்டு நீராடினார் சிவபாத விதையர். அப்போது அக்குழந்தை அழத் தொடங்கியது. உடனே இறைவன் தேவியுடன் தோன்றி அருள்பாலித்தார். உமாதேவி பொற்கிண்ணத்திலே பால்சுரந்து அக்குழந்தைக்கு ஊட்டிவிட்டு, வானத்திலே இறைவனுடன் தோன்றினாள். சிவபாதவிதையர் உண்மையை உணர்ந்து ஆடி மகிழ்ந்தார். குழந்தையோ முற்றுந் துறந்த மகான்போல பரிபூர்ணஞான சம்பன்னராய் விளங்கியதுடன் பாசுரங்கள் பலவற்றையும் பாடத் தொடங்கியது. தேவியின் கருணையால் ஞானசம்பந்தம் பெற்றதால் ஞானசம்பந்தர் என்று எல்லோரும் அக்குழந்தையை அழைக்கலாயினர்; நாளடைவில் தக்க வயசானதும், அப்பெருமான் எல்லாத் தலங்களுக்கும் எழுந்தருளி அருள் செய்துகொண்டு வருகிறார். அவர் இறைவனுக்குப் பாமாலை சாற்றுவார். இறைவனே அடியவர் மூலம் அவருக்கு முத்துச் சிவிகை, படிக்காசு, பொன் தாளங்கள் முதலியவற்றைப் பரிசாக அளிப்பார். இவ்வாறே அற்புதமான செயல்களைப் புரிந்து கொண்டு வருகின்ற அப்பெருமான் இம்மதுராபுரிக்கும் வரமாற் போகார்" என்று கூறி முடித்தான் மறையவன்.

அவ்வார்த்தைகளைக் கேட்ட அமைச்சரும் ராணியும் மனம் பூரித்துப் போனார்கள். தெய்வத்தையே பார்த்துவிட்டதுபோன்ற ஓர் ஆனந்த உணர்ச்சி உண்டாயிற்று. அந்த மறையவன் கையிலே ஒரு திருமுகத்தை எழுதிக் கொடுத்து ஞானசம்பந்தரிடம் சேர்க்குமாறு கூறியனுப்பினார்கள். பிறகு இருவரும் இறைவனை வணங்கிவிட்டு இல்லம் சார்ந்தனர்.

எல்லாமறிந்த முழுமுதற் கடவுள் பேரில் எள்ளளவேனும் பக்தி கொள்ளாத பாண்டியனின் செயல்களுக்கு முடிவும் பிறந்துவிட்டது. ஓலையை எடுத்துச்சென்ற மறையவன் ஞானசம்பந்தர் என்ற தவச் செல்வரிடம் அதைக் கொடுத்தனன். பெற்று மகிழ்ந்த பெருமான் உடனே மதுரைக்கு வரலானார். குலச்சிறையார் பரிவாரங்களுடன் எதிர் சென்று வரவேற்றனர். சம்பந்தர் ஒரு மடத்தில் தங்கினார்.

இரவு வேளை. சமணர்களின் மனத்திலே ஒரு போராட்டம் மூண்டது. திருநீறு பூசிய ஒரு மறையவன் மடத்திலே வந்து தங்கியிருக்கிறான் என்பதைக் கேட்கக்கூட அவர்களுக்குச் சகிக்கவில்லை. ஓர் அபிசார ஓமம், செய்து அக்கினியை எழுப்பி மடத்திலே ஏவினார்கள். சம்பந்தரைக் கொன்றுவிட்டோம் என்ற பூரிப்புடன் ஆரவாரம் செய்தனர். ஆனால், சம்பந்தர் இறந்தாரா? தெய்வத்தின் தூதருக்கு மரணமா? வானமே வெடித்தாலும், பூமியே நிலைகலங்கினாலும் சமணரால் சைவர் இறப்பதுஎன்பது நடவாத காரியமல்லவா?

தீயைக்கண்டார் மறை ஜோதி ஞானசம்பந்தர். பதிகம் பாடினர். தீ மன்னனிடம் சென்றது. உடனே அவன் சுரநோய்பற்றி வருந்தினான். சம்பந்தர் ஜகத் ஜோதியாக, ஒருவித மாசுமின்றி விளங்கினார்.

மன்னனுக்குச் சுரம் என்றால் வைத்தியர்களுக்குக் கேட்க வேண்டுமா? பலர் வந்தனர். பற்பல மூலிகைகளைப் பிழிந்தனர்; பலன் தானில்லை. சமணர்களின் மணி மந்திர ஔஷதாதிகள் யாவும் பிரயோகிக்கப்பட்டன. குணம் அணுவேனும் கிட்டவில்லை. தேவி மங்கையர்க்கரசியும் அமைச்சரும் அரசனின் அருகே வந்தனர்.

'மன்னரே! இந்த வியாதியைப் போக்கவல்ல பெரியார் ஞானசம்பந்தரே!" என்று கூறினர். வியாதி நீங்கினால் போதும் என்ற நிலை வரவே, அரசனும் அவரை அழைத்து வர இணங்கினான். உடனே குலச்சிறையார் விரைந்து சென்று கண்டார் சம்பந்தரை.

"கேள்வியால் தங்களை இதுகாறும் அறிந்தோம். இப்பொழுதோ பார்வையால் பூரித்தோம். இனித் தங்களுடைய அருளை எதிர்பார்க்கிறோம்! எ மன்னர் சுரநோயால் சுடப்பட்டு வருந்துகிறார். சமண மத மாய வலையில் சிக்கித் தவிக்கிறார். எல்லாத் துயரையும் அகற்றி அவரை உமக்கும் இறைவனுக்கும் நல்லாராக்கிக் கொளல் வேண்டும்" என்று வேண்டினார் குலச்சிறையார். அதற்கு அன்புடன் இணங்கினார் சம்பந்தர். குணமென்னும் குன்றேறி நின்ற அப்பெரியார் அரண்மனைக்குள் நுழைந்து அரசனருகில் அமர்ந்தனர். அவரைக்கண்டதும் ஓர் உணர்ச்சி பாயப் பெற்ற மன்னன் "பாவியேன் பிணி தணித்து எனைப் பணி கொண்மின்" என்று அடக்கத்துடன் வேண்டிக்கொண்டான். அப்போது அருகிலிருந்த சமணர்கள் சம்பந்தரை உற்று நோக்கி விழித்தனர். அவர்களுடைய உள்ளத்தில் பெரிய ஈட்டிகள் பல ஏககாலத்தில் பாய்ந்தன் போன்ற உணர்ச்சி மிகலாயிற்று.

"அரசே! தங்களுடைய வலதுபுறத்து நோயை அவரையும் இடதுபுறத்து நோயை எம்மையும் நீக்குவிக்குமாறு ஆணையிட வேண்டும்' என்றனர் அவ்வமணர்கள். மன்னவனுக்கு அது சம்மத

மாகவே பட்டது. அவ்வாறே செய்ய இசைந்தான்.

சைவத்தவச்செல்வர் முன்னிலையில் அமணர்களின் ஆர்ப்பாட்டம் எவ்வளவு நேரம்தான் நிலைத்து நிற்க முடியும்? கையிலே பீலியை ஏந்திக்கொண்டு அருகக்கடவுளை வேண்டிக்கொண்டனர். அப்பீலியாலேயே அரசனது உடலைத் தடவிப்பார்த்தனர். நீரைத் தெளித்தனர். நோய் அதிகமானதுதான் கண்ட பலன்! உடனே சம்பந்தர் திருநீற்றை எடுத்துத் தெளித்தார். அச்சமயத்தில் பொருமைத் தீயால் பொசுங்கிய அமணர்கள் 'இந்நீறு மாயநீறு; அதனை இடுதல் கூடவே கூடாது!'' என்றனர். இதைக் கேட்டபோது சம்பந்தருக்குச் சிரிப்புண்டாயிற்று. ''அப்படியானால் சோமசுந்தரரது திருமடைப்பள்ளியிலிருந்தும் திருநீறு எடுத்து வாருங்கள்!''என்றார். அவ்வாறே கொண்டுவந்தனர் குருக்கள். அதைக் கையிலே வாங்கி, ''மந்திரமாவது நீறு'' என்ற தலைப்பினைக்கொண்ட உயர்ந்த பதிகத்தை இனிய இசையுடன் பாடித் தேவனைத்தொழுது, பாண்டியன் மேனியில் பூசினார். ஆதவனைக் கண்ட பனிபோல, லட்சுமியைக் கண்ட வறுமைபோல அச்சுரம் அதிவிரைவில் அகன்றோடியது, இடது புறத்திலும் தடவிப் பூரண நலனைக் கொடுத்தார் சம்பந்தர்.

சுரம் நீங்கியது பெரிதன்று; கூனும் நீங்கியது. கூன் பாண்டியன் சுந்தர பாண்டியனாக மாறினான். களங்கமற்ற மதி ஒன்று இருப்பின் அதுவேபோலத் திகலொளியுடன் காட்சியளித்தான் காவலன்.

அவனுடைய திருமுடி. இளம்பிள்ளையும், அறிவு, பக்தி ஆகியவற்றின் கரைகண்ட பக்தருமான சம்பந்தரின் பாதத்தில் படிந்தது. கைகளால் தூக்கி நிறுத்தி ஆசியருளினார் மறைபவர். ''என் கலிதீர்த்த கருணைக்கடலே! என்னை ஆட்கொண்ட அடியவரே!''என்று அரசன் அவரைப்போற்ற, அவரோ 'என்னை அடிமைகொண்ட இறைவனே! என் பாடலுக்கிசைந்து நோயையும், கூனையும் அகற்றியருளிய தேவனே!''என்று சுந்தரப்பெருமானைப் போற்றலானார்.

மங்கையர்க்கரசியும். குலச்சிறையாரும் கொண்ட ஆனந்தம் கரையில்லாமல் பெருகியது. ''எல்லாம் ஆளுடைப்பிள்ளையின் அருளல்லவா?'' என்று அவர்களுடைய நாக்கள் கூறிக்கொண்டன.

63

## கனல்வாதும் புனல்வாதும்

அன்றுமுதல் நாட்டில் அருள் வெள்ளம் பெருகியோடியதில் வியப்பில்லை. குற்றம் நீங்கிக் குணத்தையுற்ற காவலனது கரத்திலே தாங்கப்பெறும் செங்கோல் எண்திசையும் நீதியைச் செலுத்துவதில் தடையிருக்க முடியுமா? சுந்தரபாண்டியன் ஞானசம்பந்தர் என்ற அந்தப் பிரமசாரியாரின் பரம பக்தனாக மாறினான். அவருடைய சொற்கள் அவனுக்குக் கருப்பஞ்சாறு போலினித்தன. அவர் தம் பாதம் முருகக்கடவுளின் கமலப்பாதம் தான் என்புது அவனுக்குத் தெரியாது. ஆனால் அப்பாதம் அடைந்தவரை ஆட்கொள்ளும் அருட்சக்தி கொண்டவை என்பதை அரசன் நன்கு புரிந்துகொண்டுவிட்டான். இத்தனைச் சக்தியும் தமக்கு இருப்பது குறித்துத் துளியேனும் அகங்காரம் கொள்ளாத—கொள்ளக் கருதாத தூய மறைச்செல்வர் இறைவனது கழலிணையையே எப்போதும் போற்றி வந்தார்.

'சமண மதத்தை அடியோடு அகற்றிவிடவேண்டும்' என்று மங்கையர்க்கரசி வேண்டிக்கொண்டாள். அன்று வாய்மூடி மௌனியாக விருந்த மன்னன் இன்று தேவியின் சொல்லமுதத்தைச் சுவைத்துப் பருகினான். "ஆம்! அப்படியே செய்துவிடலாம். சம்பந்தரைக் கேட்கவேண்டும்!'' என்று கூறி மன்னன் நாயனாரிடம் சென்று விஷயத்தைத் தெரிவித்தான். அவர் இறைவனுடைய கருத்தைக் கேட்டுக்கொண்டுதான் முடிவு கூறவேண்டுமெனச் சொல்லிக் கோயில் குறுகினார். பின்னை தேவி, மன்னன், அமைச்சன் எல்லோரும் சூழ்ந்துவர இறைவன் முன்னிலையை எய்தினார் அடியவர்.

"இறைவனே சமணமதத்தைத் தொலைத்துவிடத் தேவரீர் திருவுள்ளம் யாதோ?'' என்று கேட்டார் நாயனார். "அம்மதத்திற்கு அழிவு காலம் நெருங்கிவிட்டது. ஆகையினால் அதை அழிக்க உமக்குச் சம்மதமானால் எமக்கும் சம்மதமே!'' என்ற ஒரு தெய்வக் குரல் அப்போது ஒலித்தது. எல்லோரும் அதைக் கேட்டுப் பரவசமாய் நின்றனர் சிலநேரம். பிறகு அவரவரிடத்திற்குச் சென்று சேர்ந்தனர். உலகத்தில் ஒன்று அழிய வேண்டுமானால் அதைப் பிறர் அழிக்க வேண்டியதில்லை. காலம் வந்துவிட்டால் அதுவாகவே அழிந்துவிடுவது உறுதி! ஆகவே சமணர்கள் கூடியாலோசித்துத் தம்மை அழித்துக் கொள்ளத் தாமே வழியைத் தேடிக்கொண்டனர். சம்பந்தருடன் வாதாடித் தோற்கடித்து விடுவது என்பதுதான் அவர்களது தீர்மானம். தீர்மானம் சரிதான்! அதன் பலன் மாறிப்போகும் என்பது அந்த அவிவேகிகளுக்கு எங்ஙனம் தெரியப்போகிறது? முயற்சியிலும் இறங்கிவிட்டனர். அதிவிரைவிலே கோயிலிலிருந்து திரும்பி வந்துகொண்டிருக்கும் குணக்கடலாகிய சம்பந்தரை வழியிலே மறித்துக்கொண்டு "மழலை மொழி மாருத மைந்தனே! ஏதோ மன்னனால் கொண்டாடப்பட்டுவிட்டதற்காகச் செருக்கடைய வேண்டாம். காக்கையேறப் பனம்பழம் விழுந்த கதையைப்போல் நீர் நீறு தெளிக்கச் சுரம் நீங்கியது! உமது மந்திரத்தை ஓர் ஏட்டில் புறத்தே எழுதும். நாங்கள் எங்கள் மந்திரத்தை ஓரேட்டில் எழுதுகின்றோம். இரண்டையும் அக்னியில் இடுவோம் எது வெந்து போகாமல் இருக்கிறதோ அதுவே உயர்ந்த மந்திரம், அதை எழுதியவர் மதமே உயர்ந்த மதமாகும்! இதற்கு ஒரு நிபந்தனையும் உண்டு. இக்காரியத்தைச் சிவனுறைகின்ற பதிகளில் செய்தல் கூடாது. ஏனெனில், அச்சிவன் உமது பக்கலில் இருந்து துணையாற்றுவான். அது ஆகாது எமக்கு! வேறு இடம் செல்வோம்; பார்ப்போம் முடிவை. உம் எண்ணம் யாது?'' என்று துளியேனும் மானமில்லாமல் கேட்டனர். உண்மையில், அவர்கள் தம் மானத்தைக் காக்கவே கேட்டனராயினும் முறையின்றிக் கேட்டது அவர்களது மானபங்கத்தையே காட்டியது. ஒருமுறை தோற்றது தம் ஆயுளுக்கெல்லாம் போதுமென்பதை அறியாதது



அவமானம்தானே! அந்த அறியாமை எழுப்பிய ஆர்வம் மறுமுறையும் அவமானத்தைத் தந்தாலொழியச் சிந்தை மாறப்போவதில்லை. இவ்வாறே எண்ணிய சம்பந்தர், 'இறைவன் பேரில் சுமையைச் செலுத்திவிட்டோம்; நாம் அதற்கு உடந்தையே!'' என்றார்.

ஊருக்கு வெளியே ஓரிடத்தில் ஓர் அக்னி குண்டத்தைச் சிருஷ்டித்தனர் சமணர்கள். அதனுள்ளே எரியை மூட்டினர். அவர்களுடைய உள்ளத்தே எரிந்த எரியைவிடக் கொடியதாக இல்லை அவ்வக்னி குண்டத்து எரி! சம்பந்தப் பெருமானை அழைத்துச் சென்றனர். பாண்டியன், ராணி, அமைச்சன் எல்லோரும் அங்கே அதிசயத்தைக் காணச் சென்றனர். சூட்சுமமான சரீரத்துடன் சென்று அங்கே விளங்கினார்கள் ஆதிதேவனும், அருமறைச் செல்வியும்!

பச்சையோலையொன்றில் மந்திரத்தை எழுதித் தீயில் இட்டனர் அமணர்கள். இட்டமாத்திரத்தில் அது எரிந்து கரிந்து போயிற்று. அமணர்களுடைய முகங்களும், கருகிய மொட்டுக்கள் போலக் கவினற்றுக் கிடந்தன. சம்பந்தர் தமது சுவடிக்கட்டின் ஓர் ஓலையை எடுத்தார். அவ்வோலையில் 'போகமார்த்த பூண்முலை' என்னும் தேவியின் திருநாமம் பூண்ட திருநள்ளாற்றுப் பதிகம் எழுதப் பெற்றிருந்தது. அதை ஓர் ஏட்டில் எழுதித் தீயில் இட்டனர். ஏடு வெந்துபோகவில்லை; பசுமையாகவே பிரகாசித்தது. சமணர்கள் முகத்தில் மேலும் கரி பூசப்பட்டதுபோல் நடந்த இச்செயலைப் பாண்டியன் கண்டு வியந்தான். 'தம்மைத்தாமே குறைத்துக்கொள்ளக்கூடாது' என்ற அவர்களுடைய பழமொழிக்கிணங்கி. வந்த அவமானத்தை அலட்சியமாய் வரவேற்றவராய் ஞானசம்பந்தரை நோக்கினார்கள் சமணர்கள். ''நீர் உமது மந்திரத்தால் அக்னியைக் கட்டுப்படுத்திவிட்டீர்! நாம் ஓர் ஏடும், நீர் ஓர் ஏடும் எழுதி வைகையாற்றில் இட்டு முடிவு காண்போம். எவர் ஏடு எதிர்த்துச் செல்லுகின்றதோ அவருடைய மதமே மேலாகும்!'' என்று மீண்டும் பந்தயங் கூறினர்.

சம்பந்தர், 'அப்படியாயின் இதற்கு ஒரு உறுதி தரவேண்டும். எம் ஏடு எதிர்த்துச் சென்றால் நீவிர் கழுமுனையில் குத்துப்பட வேண்டும். உம் ஏடு எதிர்த்தாலோ நாம் அவ்வாறே செய்யப் பின் வாங்கமாட்டோம்!'' என்றார். விதி வலிது என்பதை யார் அறியாதவர்? அவ்விதியின் வலிமையாலேயே சமணர்கள் இதற்கு ஒருப்பட்டனர். கழு முனைகள் பல கொண்டுவரப்பட்டன. மன்னன் சம்பந்தரின் வார்த்தைகளைப் பொன்போலப் போற்றியதற்கு இதுவே சான்று. சம்பந்தருக்கு இளகிய மனம்! சமணர்களைப் பார்த்து. 'இப்போதேனும் சைவ மதத்தைச் சார்ந்து சைவ வேடம் புனைந்து கொள்ளுங்கள்; அநியாயம் புரிந்து அழிய வேண்டாம்'' என்று எச்சரித்தார் மறுமுறையும். அப்போது நாகம்போல் சீறிக்கொண்டே சமணர்கள் ஏட்டை நதியில் இட்டனர். நீர் அடித்துக் கொண்டு போயிற்று அதிவேகமாய்! சம்பந்தர், "வாழ்க அந்தணர், வானவர், ஆனினம்" என்ற முதலடியோடு தொடங்கும் பதிகத்தை எழுதி அவ்வேட்டை இட்டபோது அது எதிர்த்துச் சென்றது. தேவர்கள் பூமாரி பொழிந்தனர். முனிவர்கள் எல்லோரும் வாழ்த்துக் கூறினார்கள். அடியவர்கள் ஆனந்த நீர் பெருக்கினார்கள். மன்னனும் மடந்தையும் மட்டற்ற களிப்பினை உற்றனர்.

சமணர்கள், "நாங்கள் தோற்றோம்!'' என்று கூறி முகத்தைப் புதைத்துக் கொண்டனர். பின்னர் கழுமுனையில் தங்கள் பார்வைச் செலுத்தி பயமில்லாமல் நெருங்கினார்கள். சாவுக்கு அஞ்சாத அச்சமணர்களைக் கண்ட சம்பந்தர் நீதியோடுரைத்தார்சிலவார்த்தைகளை. ''சமணர்காள்! எம்மிறைவர் தாயினும் தண்ணளியுடையார்! சபதம் வேண்டாம். சைவநெறியை நம்பி இனியேனும் திருந்தி வாழ்வீர்! ''என்றார். ஒருசிலர் அவ்வார்த்தைக்குக் கட்டுப்பட்டனர்.. பலர் அதைமறுத்துக் கழுமுனையில் ஏறி உயிரைவிடுத்தனர். அறிவின்மை அழிவையே தரும் என்பது உண்மையாவதற்கு அவர்களே உதாரணமானார்கள்! சம்பந்தர் பெரிதும் பரிதாபங்கொண்டார்.


★

பாண்டியன், 'சுவாமி! தாங்கள் இட்ட ஏடு இப்போது எங்கே காணக்கிடைக்கும்?'' என்றான். உடனே இறைவனைத் துதித்த வண்ணமாய்க் காததூரம் மேற்றிசையை நோக்கிக்கடிந்துசென்றார் சம்பந்தர். அங்கே சில மாட்டிடையர்கள் காணப்பட்டனர். ''இங்கே ஏட்டினைக்கண்டீரா?'' என்றார். அவர்கள் 'இல்லை' என்றுகூறி அடியவரைப்பணிந்தார்கள். உடனே அருகிருந்த வில்வவனமொன்றிலே எழுந்தருளியிருந்த இலிங்கத்தைக் கண்ட சம்பந்தர் ஒரு பதிகம் பாடினார்.

இலிங்கத்தினின்றும் ஒரு முதிய அந்தணர் வெளித்தோன்றி 'மகனே! உன் மனக்கலக்கம் யாது?'' என்றார். சம்பந்தர் பணிந்து "ஏடு வேண்டும்" என்று சொல்ல இறைவனாகிய அந்தணர் அதைக்காட்ட அடியவர் எடுத்துக் கொண்டார். 'குழந்தாய்! இன்னும் சில காலம் இருந்து பின் எம்மையடைக!'! என்று கூறி மறையலானார் மகேசர்.

பாண்டியன் இறைவனுடைய பாதத்தில் வீழ்ந்து பணிபவன். போல் சம்பந்தரைப் பணிந்தான். ஏடு கிடைத்த இடத்தில் ஒரு திருக்கோயிலை அமைத்தான். அவ்விடம் திருவேடகம் என வழங்கப்பட்டது. சம்பந்தர் எல்லோரிடமும் சொல்லிக்கொண்டு புறப்பட்டார்.

கனல்வாதும் புனல்வாதும் புரிந்து சமணரை வென்ற பக்தரின் பிரிவைப் பாண்டியனால் தாங்கமுடியவில்லை. "வலியவந்தாட் கொண்ட வள்ளலே!'' என்று புகழ்ந்தவண்ணமாய் அவர் உருவம் மறையும் வரையிலும் அவரையே நோக்கிக் கொண்டு நின்றான் பாண்டியன்.






அன்புள்ள அம்மாவுக்கு
அலமு அநேக தண்டம்
ஸமர்ப்பித்த விஞ்ஞாபனம்.

## 49

உன் கடிதம் கிடைத்தது. உண்மையாகவே இப்பொழுதுதான் தலையிலிருந்து ஒரு பெரிய பாரத்தைக் கீழே இறக்கி வைத்த மாதிரி இருக்கிறது. இனிமேல் சொல்வதற்கென்ன? வாஸ்தவமாகவே ஒளிவு மறைவின்றி சொல்கிறேன். உனக்கும் இந்தமாதிரி பழையபடி புத்தி திரும்பி, நாலு பேர் நம்மைப்பற்றி சிரிக்காமல், கௌரவமாய் இருக்கக் கூடிய காலமும் வரப்போகிறதா என்ற விசாரம் என் மனதை அரித்தது பகவானுக்கல்லவோ தெரியும்! இப்பொழுதாவது தெரிந்ததா கோண்டு வாத்து மாமியின் சிநேகம் எவ்வளவு ஆபத்து நிறைந்ததென்று? பாவம் எதிராத்து எச்சுமு எவ்வளவு நல்ல பெண். ஏதோ கொஞ்சம் படபடவென்று பேசி விடுமேயொழிய, பொய், புனைசுருட்டு, திருடு முதலிய துர்க்குணங்கள் அதனிடம் கொஞ்சங்கூடக் கிடையாது. அப்படிப்பட்டதை நடுச் சந்தியில் சிரிக்கவைத்து என்ன பாடுபடுத்தி விட்டாள் பார் இந்தக் கோண்டு வாத்து மாமி! எச்சுமுவின் பிரிய நாத்தனார், நகையை ஸ்நான அறையில் கழற்றி வைத்து விட்டு மறந்து விட்டு வந்திருக்கிருள். அப்பொழுதுதான் எச்சுமுவின் தம்பி அங்கிருந்து இங்கு வந்திருக்கிறுன். உடனே எச்சுமுவின் நாத்தனார், கழுத்தில் செயினைக் காணுமேயென்று ஸ்நான அறைக்கு ஓடியிருக்கிருள். அங்கே செயினைக் காணோம். ஆனால் அங்கே செயினைக் கழற்றி வைத்தது மாத்திரம் நன்ருக ஞாபகம் இருக்கிறதென்று சொல்கிருள். நகை எங்கே போய் விடும்? 'எச்சுமுவின் தம்பி செலவுக்குப் பணமில்லை என்று அத்திம்பேரைக் கேட்பதற்காக அங்கே போயிருக்கிருன். இரண்டு நாள் இருந்தால் நெல் போட்டு பணம் கொடுப்பதாய் அத்திம்பேர் சொல்லியிருக்கிருர், அதற்குள் பரிட்சை அவசரம். தாமதிப்பதற்கில்லை. எச்சுமு கொடுத்த இரண்டு ரூபாயை வாங்கிக்கொண்டு இங்கே வந்திருக்கிருன். காக்கை உட்காருவதற்கும் பனம் பழம் விழுவதற்கும் சரியாய் இருந்தது என்று சொல்வார்களே அது மாதிரியாக அவன் பணத்திற்காக அங்கே போனதற்கும், இரண்டு நாள் இருக்கச் சொல்லி இராமல் உடனே திரும்பிவிட்டதற்கும், அதே சமயம் நகை காணுமல் போய்விட்டிருப்பதற்கும் எவ்வளவு பொருத்தம்! இனி சந்தேகமென்ன? அவன் தான் எடுத்துக்கொண்டு போயிருக்க வேண்டுமென்ற எண்ணம் தோன்றுவது சகஜந்தானே. ஆனால் எச்சுமுவின் நாத்தனாராலோ, மாமியாராலோ இந்த மாதிரியான முடிவுக்கு அவ்வளவு சீக்கிரத்தில் வந்துவிட முடியவில்லை. கோண்டுவாத்து மாமி, 'நான்தான் பார்த்தேனே, அந்தப்பிள்ளை புறப்பட்டுப் போனபோது. எவ்வளவு சந்தோஷத்தோடு போயிற்று தெரியுமா? அத்திம்பேர் பணம் கொடுக்கவில்லையென்ருல் வருத்தத்தோடு போயிருக்க வேண்டிய பையன் சந்தோஷத்தோடு போகிறதென்ருல் இதில் ஏதோ மர்மம் இருந்தாக வேண்டுமென்று எனக்கு அப்பொழுதே ஒருவித' சந்தேகம் தோன்றிவிட்டது. அத்துடன் எஸ்.எஸ்.எல். ஸி பரிட்சைக்கு இரண்டு நாளில்லை. அதற்குள் இங்கே வந்து போவானேன்! இது ஏதோ முன்னேற்பாட்டுடன்தான் நடந்திருக்கிறது. இதில் எச்சுமுவும் சம்பந்தப்பட்டிருக்க வேண்டும். அவன் போகும்போதே கையுங்களவுமாகப் பிடித்துக் கொடுத்திருப்பேன். நமக்கேன் அனுவசியமாகக் கெட்ட பெயர். இதைச் சொல்வானேன், நாளைக்கே எச்சுமுவின் வாயில் நிற்பானேன்' என்ற எண்ணத்தினுல் தயங்கிவிட்டேன்—இருந்தாலும் நீங்கள் படும் கஷ்டத்தைப் பார்த்துச் சகிக்காமல் உள்ளதைச் சொல்லிவிட்டேன் என்று எச்சுமுவின் மாமியாரிடமும், நாத்தனாரிடமும் கலகமூட்டி வீட்டில் பிரமாத ரகளையை உண்டுபண்ணிவிட்டாளாமே. எச்சுமுவின் ஆம்படையான் அம்மா, அக்கா பேச்சைக் கேட்டுக்கொண்டு எச்சுமுவைப் போட்டு அடி அடி என்று அடித்துவிட்டானுமே!

இதற்கேற்றமாதிரி இன்னொரு வேடிக்கை பார்! அந்தப் பிள்ளை இங்கே எதிர் வீட்டு மெத்தையில் தானேரூம் வைத்துக்கொண்டு, ஹாஸ்டலில்



சாப்பிட்டுக்கொண்டு வாசித்துக்கொண்டிருக்கிறது! அதனுடைய கணக்கு வாத்தியார் இங்கே நம்ம பக்கத்து அகத்தில் இருக்கிருர். அந்தக் கணக்கு வாத்தியார் நேற்று இவரிடம் பேசிக்கொண்டிருக்கையில் சொல்கிருர். 'என்ன ஸார்! ஒரு நாளும் வராத பையன் (எச்சுமுவின் தம்பி) பாதி ராத்திரிக்கு வந்து தடதடவென்று கதவை இடித்து நல்லதூக்கத்திலிருந்து என்னை எழுப்பி, 'ஸார், மன்னித்துக் கொள்ள வேண்டும். இந்தக் கணக்குகள் தெரியவில்லை. இவைகளைக் கொஞ்சம் போட்டுத் தரவேண்டும். தூக்கத்தில் தொந்தரவு கொடுப்பதற்கு மன்னிக்கவேண்டும்' என்று சொல்லி ஒரு பத்து, பன்னிரண்டு கணக்கைக் கொண்டு வந்து கொடுத்தான். பார்த்தால் ஒரு பரிட்சையில் கேள்வி கேட்கிற பாணியில் அமைந்திருந்தது அந்த வரிசை. எனக்கு மாத்திரம் முதலில் கொஞ்சம் சந்தேகமாய்த்தானிருந்தது. ஆனால் வருஷா வருஷம் பசங்கள் இதே மாதிரி தான் ஏதாவது 'புருடா' விட்டுக்கொண்டிருப்பார்கள். இந்த வருஷமும் அதே மாதிரி விட்டிருக்கிருர்கள். அதைக் கேட்டுக்கொண்டு இந்த அசடு வந்திருக்கிறது என்று எண்ணிக் கொண்டு கணக்கைப் போட்டுக் கொடுத்தேன். பிறகு பரீட்சையில் பார்த்தால் அதே கணக்குகள் வந்திருக்கின்றன என்றுர்.


......எச்சமு......

நீ நகை தொலைந்த விஷயமும், இந்தப் பிள்ளையின்மேல் ஏற்பட்டிருக்கிற சந்தேகத்தையும்பற்றி எனக்கு எழுதினுயோ இல்லையோ. இங்கே எஸ். எஸ். எல். ஸி பரீட்சை கேள்வித்தாள் அம்பலமாகிவிட்டது. சிலர் சொன்னுர்கள்: பிள்ளைகளெல்லாம் சேர்ந்து, தலைக்குக் கொஞ்சம் பணம் கொடுத்து கேள்வித் தாள்களை இரகசியமாய் வாங்கிக்கொண்டு வந்து விட்டார்கள்' என்று. அதற்குத் தகுந்த மாதிரி இந்தப் பிள்ளை பணத்திற்கு அங்கே வந்ததா? அத்திம்பேர் பணம் இல்லை என்று சொன்னதற்கும், நகை காணுமல் போய்விட்டதற்கும், அந்தப் பையன் அவசர அவசரமாய் வந்துவிட்டதற்கும், கோண்டு வாத்து மாமி சொல்கிறமாதிரி 'சரி, சரி, தன் பங்குக்குண்டான பணத்தைக் கொடுப்பதற்காக செயினைத் தூக்கிக் கொண்டு வந்துவிட்டது என்று தான் நானும் தீர்மானித்து விட்டேன். ஆனால் இன்று உன்னுடைய கடிதத்தில் நகை ஸ்நான அறையில் எலிவளையில் இருந்ததாக எழுதியிருக்கிருய். என்ன வேடிக்கை! கோண்டு வீட்டு மாமிக்கு ஏன் இந்த வீண் வேலை! எச்சுமு அகத்து விஷயம் எப்படியானுல் அவளுக்கென்ன? ஒரு நிமிஷத்தில் எந்த மாதிரி ஒரு குடும்பத்தில் மனஸ்தாபத்தை உண்டு பண்ணி விட்டாள் பார்! இப்பொழுதாவது கோண்டுவாத்து மாமியின் உண்மை ஸ்ரூபத்தை நீ தெரிந்து கொண்டதற்கு நான் ரொம்பவும் ஸந்தோஷப் படுகிறேன். ஸந்தோஷப்படுவதோடு மாத்திரமல்ல. இந்த மாதிரி உனக்கு ஒரு நல்ல புத்தி ஏற்படும்ஸந்தர்ப்பத்தை பெருந்தேவித் தாயார் தான் உண்டு பண்ணியிருக்க வேண்டும். அதற்காகத் தாயாருக்கு ஒரு வெள்ளிக்கிழமை உத்ஸவம் செய்யவும் தீர்மானித்து விட்டேன்.



"......நமக்கேன் அனுவசியமாகக் கெட்ட பெயர். இதைச் சொல்வானேன், நாளைக்கே எச்சுமுவின் வாயில் நிற்பானேன்" என்ற எண்ணத்தினுல் தயங்கிவிட்டேன்......

என்னமோ, இனிமேலாவது பிறத்தியார் கலகப்பேச்சைக் கேட்காமல் நன்ருக நடந்துகொள்.

ஆமாம். முக்கியமான ஒரு விஷயம் எழுத மறந்துவிட்

டேன் பார்த்தாயா? புதிய மந்திரிசபை நம்மமாகாணத்தில் ஏற்பட்டிருக்கிறதோ வியோ? அதில் 'இவருக்கு' ஒரு பார்லிமெண்டரி செகரிட்டெரி வேலை கொடுக்கப்போகிறார்களாம். 'இவர்' தனக்கு வேண்டாமென்கிறார். சிரோமணி சொல்கிறது, 'என்ன இப்படி ஒன்றுந்தெரியாமல் இருக்கிறீர்களே' அவரவர்கள் பதவிக்காகப் போடுகிற ஒரு போட்டியைப்பார்த்தால் 'கிடுகிடாய்'க்கிறது' அப்படியிருக்கதாகை, ஒரு பதவி நம்மைக்தேடிக்கொண்டு வந்தால் யாராவதுவேண்டாமென்று சொல்லுவார்களா? பேசாமல் ஒப்புக்கொள்ளுங்கள். தைரியமாய்ப் பதவியை ஏற்றுக்கொண்டு புகாருக்கு இடங்கொடுக்காமல்ஒழுங்காய் வேலைபார்த்து பின்னால் வருகிறவர்களுக்கு ஒருவழிகாட்டியாய் இருந்தால் எவ்வளவு கௌரவம் தெரியுமா? பதவியை ஏற்றுக்கொண்டு விட்டதாலேயே கெட்டபெயர் வந்துவிடவேண்டுமா. என்ன? நல்லபெயர் வருவதற்குவழியே இல்லையா?'' என்று. ஆகவே 'இவர்' வேலையை ஒப்புக்கொள்ளத்தீர்மானித்து விட்டார்.


முன்பு ஒரு கடிதத்தில் நான் எழுதியிருந்தேனே' ஞாபகம் இருக்கிறதா? 'இவர்'ஒருகாலத்தில் ஒரு எம். எல். ஏ. வாகவோ ஒருமந்திரியாகவோ வரலாம் என்று. அந்தக்கடிதத்தைப் பார்த்துவிட்டு அப்பாகூட உன் பெண்ணினுடைய ஆசைதான் என்ன பார்த்தாயா?' என்று பரியாசம் செய்ததாகச் சொன்னாயே. அது இப்பொழுது காரியத்தில் நடைபெறப் போகிறது. 'எம். எல். ஏ. கூட இல்லையே இந்தப் பதவி எப்படிக் கிடைக்கும் என்று இவரைக் கேட்டேன். அதற்கு ஏதோ உபாயம் இருக்கிறது என்று சொல்லுகிறார்.

எல்லாம் பெருந்தேவித் தாயாரின் அனுக்ரகம்தான்.

இப்படிக்கு,

உன் அன்புள்ள,

அலமு.




சமீபத்தில் குன்றக்குடியில் பாண்டிய நாடு நடு மண்டலம். 24 நாட்டு குலாலர் சங்க முதலாவது மகாநாடு நடைபெற்றபோது எடுத்த படம்.



# மனித வாழ்வு

(ச. செந்தில் நாயகம்)

★







பிள்ளைப் பிராயத்திலே—தெருமணல்
அள்ளி எறிந்தோடி
உள்ளக் கவலையின்றிக்—கன்றுபோல்
துள்ளி விளையாடி
பள்ளிப் படிப்பினிலே—கலந்து
பாலப் பருவமதை
மெள்ளக் கழித்ததன் பின்—வாலிப
மதை தனையடைந்து
வல்லி யிடையழகில்—வனிதையர்
வதனத் தில்அரும்பும்
முல்லைச் சிரிப்பினிலே—மயங்கி
மோக வலையிற் சிக்கி
கொட்டு முழக்குடனே—ஓரிளங்
கோதை தனை மணந்து
மட்டில் மகிழ்ச்சியுடன்—காதல்
வாழ்க்கை நடத்தியபின்
மக்கள் பல பயந்து—முதிர்ந்த
மனைவி தனை வெறுத்து
துக்கம் மிகவடைந்து—உலகைத்
துன்ப மெனமதித்து
பற்க ளெலாமிழந்து—ஊரார்
பார்த்துப் பரிகசிக்க
நிற்கவும் சக்தியின்றி—படுக்கையில்
நீளக் கிடந்தொருநாள்
மக்கள் மனைவியெலாம்—அலற
மாண்டு பிணமாகி
தக்க மணலுடனே—மனிதன்
தானுங் கலப்பனடா!
மனித வாழ்விதுவே—இவ்வுடல்
மண்ணில் கலப்பதன் முன்
புனிதனும் இறைவன்—தனது
பொன்னடி போற்றிடுவோம்.




## மேஷ ராசி

(அச்வனி, பரணி, கிருத்திகை முதல்பாதம் முடிய.)

மேஷ ராசிக்காரர்களுக்கு இம்மாதம் மிக மும்முரமாகவிருக்கும். உத்தியோக விஷயத்தில் முற்போக்கை நாடியும், புத்திரரின் க்ஷேமாபிவிருத்தியை நாடியும் விசேஷமாகக் கவனம் செலுத்த நேரும். செலவு அபாரம் இந்த ராசிக்காரர்கள் சிறு வயதினராயிருந்தால் தேகாரோக்கியம் ரொம்ப சாதாரணமாகவிருக்கும். முதியவர்களானல் கடுமையான உடல் கோளாறு ஏற்படுவதற்கான அறிகுறிகள் தோன்றலாம். அகாரணமாக உறவினர்கள் ஆத்திரமேற்படும் வகையில் தூற்றுவார்கள். சில இனங்களில் ஏற்கனவே நடத்திய கடிதப் போக்குவரத்து பிரதிகூலமான பயனைக் கொடுக்கும். மூன்றும் மனுஷ்யர்களோடு தகராறு வைத்துக்கொள்ளக் கூடாது. ஏனெனில் இம்மாதத்தில் இத்தகைய நிலைமைகளில் எதிராளியைச் சமாதானப்படுத்துவது சாத்யமாகவிராது. சிலருக்கு இந்த கட்டத்தில் ஒரு பிரயாணம் சம்பவிக்கலாம். பண விவகாரங்களில் நிலைமை திருப்திகரமாயிருக்கும். இரண்டாம் பகுதியில் குடும்ப சுகம் சற்று திருப்திகரமாயிருக்கும். ஏப்ரல் மாதம் 21-ந் தேதி வாக்கில் செய் முயற்சியில் திரவிய லாபம் கிடைக்க வழி உண்டு. மேலதிகாரி ஒருவருடைய உதவி கிட்டும். ஏப்ரல் 23-ந்தேதி வாக்கில் ஊழியர்களாயிருப்பவர்களுக்கு உத்தியோகத்தில் கவலைகள் இருக்கும்.

ஏப்ரல் 17, 21, 27, மே 1 10 11, 13 தேதிகள் இவர்களுக்குச் சிறந்த நாட்கள்.

## விருஷப ராசி

(கிருத்திகை 2-ம் பாதம் முதல் ரோஹிணி, மிருகசீரிஷம் 2-ம் பாதம் முடிய.)

இந்த மாதம் விருஷபராசிக்காரர்களுக்கு உகந்ததாகவிருக்கும். அபிவிருத்திக்கான சந்தர்ப்பங்களை இந்த ராசிக்காரர்களின் முன்பாக நிறுத்தும் வகையில் கிரஹங்களின் அமைப்பிருந்து வருகிறது. ஏப்ரல் 21-ந் தேதி வாக்கில் செய்தொழிலில் மகிழ்ச்சிகரமான மாறுதல் ஒன்று ஏற்படலாம். புதிய சிநேகங்கள் ஏற்பட்டு அவற்றால் விசேஷமாக அனுகூலத்தை அடையவும் கூடும். சிலருக்கு இச்சமயத்தில் விவாஹம் நடக்கலாம். வியாபாரிகளாயிருப்பவர்களுக்குப் புதிய கூட்டாளிகளைச் சேர்த்துக்கொள்ளும்படியிருக்கும்; இது துரிதமாக வியாபாரம் செழிக்கவும் உதவி செய்யும். ரொக்க வியாபாரத்தில் உள்ளவர்களுக்கு கால நிலைமை ரொம்ப சாதகம். இதில் அவர்களுக்கு அமோகமான வெற்றி உண்டு. குடும்பத்தில் ஏதேனும் சுபகாரியங்கள் நிகழும். இப்போது இருக்கும் வீட்டைப் பொறுத்து கவலைகள் ஏற்படலாம். ஆயினும் இம்மாத முடிவுக்குப் பின்னர் எல்லாம் சரியாகிவிடும்.

ஏப்ரல் 17, 21, 27, 30 மே 6, 11, 13 தேதிகள் இவர்களுக்கெல்லாம் உத்தமமான தினங்கள்.

1947-ம் ஸ்ரீ ஏப்ரல் மீ 15உ முதல் மே மீ 15உ வரையில் பொதுவாக ஒவ்வொரு ராசிக்காரர்களுக்கும் பலன்கள் கொடுக்கப்பட்டுளது. ராசியைத் தெரிந்துகொள்வதற்கு உதவியாக முறையே நக்ஷத்திரங்களும், பாதங்களும் பிரசுரிக்கப்பட்டிருக்கின்றன.

## மிதுன ராசி

(மிருகசீரிஷம் 3-ம் பாதம் முதல் திருவாதிரை, புனர்வஸு 3-ம் பாதம் முடிய.)

போன மாதத்தைவிட இந்த மாதம் மிதுன ராசிக்காரர்களுக்கு மிகவும் விசேஷமாயிருக்கும். 9, 10 11 இடங்களிலுள்ள கிரஹங்கள் இந்த ராசிக்காரர்களுக்கு விரோதமாகவுள்ள கிரஹங்களின் பலனை எதிர்த்துச் சமாளிக்கும் நிலையில் இருக்கின்றன. ஏப்ரல் மாதம் 21-ந்தேதியிலிருந்து எடுத்த காரியம் யாவிலும் வெற்றி கிட்டும். பணவிஷயத்தில் கவலையின்றி நிம்மதி ஏற்படும். இதுவரை இருந்து வந்த நிச்சயமற்ற நிலைமை நீங்கும். முதலாளிகள், அதிகாரிகள். உறவினர்கள் இவர்களால் உதவி ஏற்பட்டுக் குடும்பத்தில் சந்தோஷம் நிலவும். உறவினர்கள் மூலமாகவோ அல்லது சகோதரர்கள் மூலமாகவோ ஆர்ச்சர்யகரமான சம்பவங்கள் ஏதேனும் ஏற்படலாம் குடும்பத்தில் மாறுதல் ஏற்பட இடமுண்டு. தேகாரோக்கியம் ஓரளவு பாதிக்கப்படும். ஹேஷ்ய விவகாரங்களில் ஈடுபட்டவர்களுக்கு இம்மாதம் வரவேற்கத்



தக்கதாயிருக்கும். நேர்மையற்ற கண்டிராக்டு வேலைகளில் ஈடுபடக் கூடாது. ஏனெனில் புதன் இருக்கும் இடம் உற்சாகமளிப்பதாயில்லை. எழுத்து பூர்வமாயுள்ள இனங்களில் எல்லாம் மிகவும் உஷாராயிருத்தலவசியம். காதலர்கள் முக்கியமாக இம்மாதத்தில் மிகவும் உல்லாஸமாயிருப்பார்கள். இதுவரையில் வாழ்க்கை நடப்பு விவகாரங்கள் மங்கியிருக்குமாயின் இனி அவையெல்லாம் பிரகாசமுறும். விவாக விஷயமாக முயற்சி செய்து வந்தவர்களுக்குக் காரியம் கைகூடுவது திண்ணம். அதற்கான சந்தர்ப்பம் இப்போது வாய்த்திருக்கிறது. குரு, சனி இவர்கள் இப்போதுள்ள நிலைமையினால் பணமுடை ஏற்படும் என்றாலும் செவ்வாய்க்கும் குருவுக்கும் பரிவர்த்தனை யோகமிருப்பதால் இந்த நிலைமையை வெகுவாகச் சமாளித்துக்கொண்டுவிடலாம்.

ஏப்ரல் 17, 27 மே 5, 11, 13 தேதிகள் இந்த ராசிக்காரர்களுக்கு நல்லவை.

## கடக ராசி

(புனர்வஸு கடைசி பாதம் முதல் புஷ்யம், ஆயில்யம் முடிய)

இந்த ராசிக்காரர்களுக்கும் சென்ற மாதத்தைவிட இம்மாதம் நன்மை பயப்பதாய் அமைந்திருக்கிறது. சூழ்நிலைமை கொந்தளிப்பை உண்டு பண்ணுவதாயிருப்பினும் நிதானம் தளர்வடையாது. பண விஷயத்தில் அதிருஷ்டமேற்படுவதால் சென்ற மாதத்தில் ஏற்பட்ட ஏமாற்றங்கள் மனதிலிருந்து மறையும். ஊதிய உயர்வு ஏற்படவேண்டும்: இல்லையானல் உத்தியோகத்தில் ஒரு சிறுமாறுதல் ஏற்பட இடமுண்டு. எஜமானரின் ஆதரவு கிட்டுவது இம்மாதத்தின் பிரத்யேகாம்சம். இந்த ராசியில் சிலருக்கு ஜலமார்க்கமாக யாத்திரை செய்யும் சந்தர்ப்பம் ஏற்படலாம். குழந்தைகளைப் பொறுத்துத் திருப்திகரமான நிலைமை நிலவும். வயிற்றுக் கோளாருலோ அல்லது வேறு கொடிய வியாதியினலோ தேகாரோக்கியம் பாதகமடையலாம். முதல் பகுதியைவிட இம்மாதம் இரண்டாம் பகுதி இவர்களுக்கு மகிழ்ச்சிகரமானது. வியாபாரிகளுக்கு இம்மாதம் சிரேஷ்டம். ஏதேனும் ஒரு பழைய வியாபாரம் பூர்ணமான திருப்தி தரும் வண்ணம் உருவடையும், அல்லது பொதுவாக வியாபாரத்திலுள்ள கஷ்டங்கள் விலகி சுமுகமான நிலைமைப் பிறக்கும். இம்மாதத்தில் கடைசி மூன்று நாட்களில் கண்மூடித்தனமாக எவ்விதமான ஹேஷ்யங்களையும் செய்துகொண்டு செயலில் இறங்கக் கூடாது.

ஏப்ரல் 22, 27, மே, 2, 11, 13 தேதிகள் இவர்களுக்குச் சிலாக்கியம்.

## ஸிம்ம ராசி

(மகம், பூரம், உத்திரம் முதல் பாதம்முடிய.)

எட்டாவது இடத்திலுள்ள கிரஹங்கள், 12-வது இடத்திலுள்ள சனி இவற்றைக் கவனித்துக் கூறவேண்டுமானல் ஸிம்ம ராசிக்காரர்களின் விவகாரங்கள் இம்மாதத்தில் திருப்திகரமாயிருக்குமெனத் தோன்றவில்லை. வெற்றி கிடைக்குமென்று எண்ணும் இனங்களில் ஏமாற்றம் ஏற்படக்கூடும். இந்த ராசியில் சிலருக்குக் காரியங்கள் தாமதமாகும். சிலருக்கு. தூரதேசப் பிரயாணம் ஒன்று நேரலாம். கலவரம், வெறுப்பு இவ்வுணர்ச்சிகள் இருந்து வருமாயினும் வாழ்க்கை நம்பிக்கையுள்ளதாகவே இருக்கும். இது தற்காலிகமானதே. பணமுடையால் மனச்சுணக்கமேற்படும். இம்மாத இரண்டாம் பகுதி திருப்திகரமாயிருக்கும். அக்கட்டத்திலிருந்து பண வசதிகள் அபிவிருத்தியடையும். செலவு உச்சத்தை அடையும். குடும்ப சுகம் குறைவு. தேகாரோக்கியமும் திருப்திகரமாயிராது. உறவினர்கள் நண்பர்கள் இவர்களின் தூற்றலுக்குப் பாத்திரமாகாமல் பாதுகாத்துக்கொள்ள வேண்டும். உத்தியோகத்தில் மனநிம்மதியிராது. மகிழ்ச்சி ஏற்பட முடியாதபடி செய்யும் வேலையில் ஏதேனும் மாறுதல் ஏற்படும், இலாகாவிலிருந்து ஆதரவை நாட இதுவல்ல சமயம். பொறுமையாயிருந்தால்தான் பயனை அடையலாம்.

ஏப்ரல் 21, 27, மே 4 10, 13 தேதிகள் இந்த ராசி உள்ளவர்களுக்கு திருப்திகரமான தினங்கள்.

## கன்யா ராசி

(உத்திரம் 2-ம்பாதம் முதல் ஹஸ்தம், சித்திரை 2-ம் பாதம் முடிய.)

சென்ற மாதத்தைக் காட்டிலும் கிரஹங்களின் நிலைமை ஓரளவு மாறுபட்டிருப்பினும் அவை இந்த ராசிக்காரர்களின் கடினமான காலப்போக்கை மாற்றிக் கட்டுப்படுத்தக்கூடிய பலத்தோடு அமையவில்லை. முன்னேற்றத்துக்கு முட்டுக்கட்டை போடும் வகையில் கிரஹங்களின் அமைப்பிருக்கிறது. பிடிவாதத்தை விட்டு கட்டுப்பாட்டோடும் அடக்கத்தோடும் இருப்பதுதான் இப்போது நல்லது. எதிரிகள் கை ஓங்கி, சூழ் நிலைமை விரோதமாகவிருக்கும். இரண்டாம் பகுதியிலிருந்து தேக ஆரோக்கியத்தைச் செவ்வையாகக் கவனித்துக்கொள்ள வேண்டும். எவ்வளவு அவசரமாயிருப்பினும் தூரதேசப் பயணங்களை மேற்றுக்கொளளக்கூடாது. எதிர்பாராமல்; மனம் நொடியும் வண்ணம் ஏதேனும் ஒரு சம்பவம் நிகழலாம். இதனால் அவதிப்படும்படி நேரும். பிறருக்குச் செய்யும் சகாயங்களுக்கு தப்பு அர்த்தம் கற்பிக்கப்படும். சொந்தக்காரர்களே இந்த ராசிக்காரர்களை நிஷித்தம்செய்வார்கள். கோர்ட்டு விவகாரங்களில் ஈடுபடாமல் இருப்பது நலம். பழைய நண்பர்கள் உதவிக்கு முன் வருவர். மொத்தத்தில் இம்மாதத்தில் அதிருப்தியும் அமைதியின்மையும் குடிகொண்டிருக்கும். ஆனல் இவை அனைத்தும் இன்னும் சொற்ப காலத்துக்குத்தான்.

ஏப்ரல் 17, 18 23 24, மே 5 10, 14 தேதிகள் இவர்களுக்குச் சிரேஷ்டம்.

## துலா ராசி

(சித்திரை, 3-ம் பாதம் முதல், சுவாதி, விசாகம் 3-ம் பாதம் முடிய.)

இந்த மாதம் துலா ராசிக்காரர்களுக்குப் போன மாதத்தை விட உற்சாகமானது. நண்பர்கள் அல்லது கூட்டாளிகள் இவர்கள் மூலமாகப் பண விஷயத்தில் லபம் கிடைக்கலாம். வியாபாரிகளுக்கு

நன்மைகரமானதுதான். என்னுவதைவிட அதிகமாக லாபம் கிடைக்கும். எதிர்கால வியாபாரத் திட்டங்கள் அதிக லாபத்தைத் தரும் வண்ணம் அமையும். பழைய வியாபாரத் தொடர்பு புத்துயிர் பெறும். செய்யும் முயற்சிகளுக்கான பலன் தாமதிக்கும். முன்னதாகத் தகவல் தெரியாமல் ஏதேனும் ஒரு பழைய சக்தி வேலை செய்யும். முதலாளிகள் தங்கள் ஊழியர்களை நடத்தும் விஷயத்தில் பழைய முறைகளைக் கையாளுவர். சிலருக்குப் புதிய கூட்டாளிகள் ஏற்படுவர். வாஹன வசதிகள் திருப்திகரமாயிருக்கும். குடும்பத்தில் மாறுதல்கள் ஏற்படலாம். கொஞ்சநாளைக்குப் புத்திரரின் விவகாரங்களைப் பொறுத்து விசாரமாகவிருக்கும். இம்மாத ஆரம்பத்திலே அல்லது முடிவிலோ மனைவியின் தேக சுகம் பாதிக்கப்படும்.

ஏப்ரல் 18, 19, 21, 27 மே, 6, 10, 13 தேதிகள், இவர்களுக்குத் திவ்யமான தினங்கள்.

## விருச்சிக ராசி

(விசாகம் 4-ம் பாதம் முதல் அனுஷம், கேட்டை முடிய)

விருச்சிக ராசிக்காரர்களுக்கும் இந்த மாதம் சென்ற மாதத்தை விட அபிவிருத்தி அடைவதற்கான வசதிகளுடன் அமைந்ததுதான். குடும்ப விவகாரங்களில் இந்த ராசிக்காரர்களுடைய மகிழ்ச்சிகரமான அனுபவங்கள் பயன்படும். உத்தியோகத் துறையில் உவகை தரும்படியான மாறுதல் ஏற்படும். அல்லது ஊதிய உயர்வு உண்டாகலாம். இதுவுமில்லையானால் தற்போது நடக்கும் தசா பலத்துக்கு அனுசரணையாக செய்யும் அன்றாடத் தொழிலிலேனும் ஒரு மாறுதல் ஏற்படக்கூடும். இந்த ராசிக்காரர்களில் சிலருக்கு மனைவி கருப்பம் தரிக்கலாம் வியாபாரிகளுக்கு இம்மாதம் ஏற்றது. வியாபார இனங்களில் திடீரென்று திரவிய லாபம் கிடைக்க வழி உண்டு. இம்மாதம் பண விஷயத்தில் அதிகமாக அபிவிருத்தியிருக்குமென்று தோன்றுகிறது. இருந்தாலும் குடும்பத்தில் மனஅமைதியிராது. ஜல ராசியில், உள்ள பெரிய கிரஹங்களினால் தேகாரோக்கியம் பாதிக்கப்படும். காதலர்களுக்கு நூதனமான அனுபவமுண்டு. குழப்பமாயிருப்பினும் நிலைமை சீக்கிரம் சரிப்பட்டு விடும்.

ஏப்ரல் 17, 27, 30, மே 9, 10, 13 தேதிகள் இவர்களுக்குத் தரமானவை.

## தனுர் ராசி

(மூலம், பூராடம், உத்திராடம் முதல் பாதம் முடிய.)

இந்த மாதம் தனுர் ராசிக்காரர்களுக்கு ஓரளவு நன்மைகரமானது. பொதுவாக முன்னேற்றத்தைத் தடுத்துவந்த தடைகள் விலகுவது தெரியவரும். பணம் சுலபமாகக் கிடைக்கும். செலவு வழக்கம்போல அதிகமாகத்தானிருக்கும். குடும்பத்துறையில் பொதுவாகத் திருப்திரிருக்குமென்று சொல்வதற்கில்லை. உறவினர் ஒருவரால் (ஸ்திரீயாலோ அல்லது புருஷராலோ) கவலைகள் உண்டாகலாம். கவலைகளின்றி வியாபாரம் நன்மையைத் தராது. தேக சுகமும் அடிக்கடி பாதிக்கப்படும். மேலதிகாரியின் ஆதரவு உண்டு. புத்திரர்களில் ஒருவரைப்பற்றி ஏதேனும் கவலையிருந்து வரும். பணத்தைப் பொறுத்தவரையில் இம்மாத முதல் பகுதி விசேஷம். உத்தியோகத் துறையில் அபிப்ராய பேதம் ஏற்படாமல் பார்த்துக்கொள்ளவேண்டும். அபூர்வமான விருந்தாளிகள் வீட்டுக்கு வருவார்கள். பண விஷயத்தில் உறவினர் ஒருவருடன் அபிப்ராய பேதமேற்படும். ஹேஷ்ய பூர்வமான காரியங்களில் இம்மாதம் இறங்குவது நல்லதல்ல. இந்த ராசியில் சிலருக்கு மூத்திராசயக் கோளாறு ஏற்படலாம்.

ஏப்ரல் 21, 30 மே 3, 10, 11 தேதிகள் இவர்களுக்கு விசேஷமானவை.

## மகர ராசி

(உத்திராடம் 2-ம் பாதம் முதல் திருவோணம், அவிட்டம் 2-ம் பாதம் முடிய.)

இந்த மாதம் மகர ராசிக்காரர்களுக்கு லாபகரமாகவும், பயன்தரத்தக்கதாயுமிருக்கும். வியாபாரம் லாபகரமாகச் செழிக்கும். கடிதப் போக்குவரத்து ஊக்கமடைந்து அதிக வருவாயைத்தரும். சூர்யன் 4-வது இடத்தில் உச்சத்திலிருப்பதால் குடும்ப விவகாரங்களால் கிலேசமேற்பட்டு, வீட்டிலும், ஆபீஸிலும் அமைதியில்லாமல் போராட்ட உணர்ச்சி அதிகரிக்கும். முதலாளிகளானால் ஊழியர்களின் நலனை அபிவிருத்தி பெறச் செய்வர். வியாபாரத்தில் கூட்டாக விருப்பவர்கள் வியாபாரத்தை யொட்டி ஒரு சிறு மாறுதலைச் செய்ய நேரும். பல விஷயங்களை ஏற்க நேரிடுவதால் மனம் மிகவும் தீவிரமாக முனைந்து பளுவடையும். ஹேஷ்ய இனங்களில் முன்னையும்விட அதிக சிரத்தை இருந்து வரும்; ஆனால் அடுத்த அக்டோபர் மாதம்வரையில் முரட்டுத்தனமான ஹேஷ்யங்கள் பயனை அளிக்காது. நெற்றி வியர்வை நிலத்தில் விழ உழைத்து எதிர்கால வாழ்வை நிர்மாணிக்க முயற்சி செய்ய நேரும்.

ஏப்ரல் 17, 19, 20, மே 8, 10, 11 13 தேதிகள் இவர்களுக்குப் பயன் தரும் நாட்கள்.

## கும்ப ராசி

(அவிட்டம், 3-ம் பாதம் முதல் சதயம், பூரட்டாதி 3-ம் பாதம் முடிய.)

கும்பராசிக்காரர்களுக்கு இம்மாதம் நம்பிக்கை ஊட்ட வல்லது. நடவாமல் நின்று போயிருக்கும் காரியங்கள் எல்லாம் கைகூடும் கட்டம் இது. சுபிட்சகரமான காலம் எதிர் நோக்கியிருக்கிறது. அதற்கான அடையாளங்கள் இப்போதே பிரகாசமாக, தெளிவாகத் தெரியும். செய்யும் புதிய காரியங்கள் அனைத்திலும் சகாயம் உண்டு. கல்யாணமானவர்கள் களிப்போடு வாழ்க்கை நடத்துவர். விவாகமாகதவர்கள் இப்பிரச்சினையைப் பற்றி தீவிரமாக ஆராய்வர். பலருக்கு இது கல்யாணத்துக்கு யுக்தமான காலம். வியாபார ஸ்தாபனங்கள் செழிப்படையும். கோர்ட்டு வியாஜ்ஜியங்கள் ஏதேனுமிருப்பின அவை வெற்றிபெறும் கட்டமிது. மேலதிகாரிகள் இந்த ராசிக்காரர்களின்



சேவையைப் புகழுவார்கள். ஏற்கனவே அதிகமாகவுள்ள காரியாலய அலுவலோடு அதிகப்படியாகச் சில வேலைகளையும் கவனிக்க நேரிடும். நண்பர்கள் முக்கியஸ்தர்களாக விருப்பர். பொதுவாக இந்த ராசிக்காரர்களின் நலன்களை அவர்கள் அபிவிருத்தி பெறச்செய்வார்கள். பண வசதி அதிகரிக்கும். குடும்பத்தில் சச்சரவு வைத்துக் கொள்ளாமல் பார்த்துக் கொள்ள வேண்டும். சாதாரணமான பேச்சுகள் சச்சரவாக மாற இடமுண்டு. இந்த ராசிக்காரர்கள் புருஷராயிருந்தால் பெண் மூலமாகவும், பெண்ணாயிருந்தால் ஆண்மூலமாகவும் லாபம் அடைய இடமுண்டு.

ஏப்ரல் 17, 27, 30, மே 8, 11, 13, தேதிகள் இவர்களுக்கு நலமானவை.


## மீன ராசி

♓ (பூரட்டாதி, 4-ம் பாதம் முதல், உத்திரட்டாதி, ரேவதி முடிய.)

இம்மாதம் மீன ராசிக்காரர்களுக்கு நல்லது. கிரஹ சக்திகள் இவர்களை முன்னணிக்குக்கொண்டு வருகிறது. ஏற்கனவே யிருந்த விபரீத நிலைமை மாறுதலடைகிறது. செல்வ விஷயங்களில் மகிழ்ச்சிகரமான நிலைமை நிலவும். திடீரென்று அதிகப்படியாகப் பணம் வரும்; சிலர் பழைய கடனைத் தீர்ப்பார்கள். புதிய ஏற்பாடு ஒன்றின்படி கடன் வாங்கவும் நேரும். இது ஒரு நிலையான பயனைத் தரும் மாதமாக விராது. குதிரைப் பந்தயங்களிலோ அல்லது போட்டிப்பந்தயங்களிலோ ஓரிரு தடவை ஈடுபட்டால் லாபம் கிடைக்க ஹேது உண்டு. உத்தியோகத்தில் ஏதேனும் ஒரு கவலை இருந்துகொண்டேயிருக்கும். இன்னும் சிலருக்குக் கடுமையாகவில்லாவிட்டாலும் கூட கொஞ்சம் பார்வை உபத்திரம் உண்டாகும். கடலிலோ அல்லது ஆற்றிலோ நீராட இறங்குவது உசிதமல்ல. தூர பந்துக்களில் ஒருவரைப்பற்றி விரஸமான வதந்தி உலவுவதைக் கேட்க நேரிடும். சூழ்நிலைமை விஷயத்தில் உஷாராயிருக்கவேண்டும். இல்லையானால் இதில் சிக்கி அவதியுற நேரும்.

ஏப்ரல் 21, 23 மே 3, 12, 13 தேதிகள் இவர்களுக்குச் சிறந்த நாட்கள்.

— ஸ்ரீ P. V. ராவ்,
29-ஏ, தேவராய முதலித் தெரு,
(ஊசிகுமேடு)
திருவல்லிக்கேணி, சென்னை.



புதிய வைஸ்ராய் மவுண்ட் பாட்டன் பிரபு புதிய டில்லி வந்ததும் அவரை இடைக்கால சர்க்கார் மெம்பர்கள் வரவேற்றனர். பொக்கிஷ மந்திரி ஜனாப் லியகத் அலிகான் அவரை கைகுலுக்கி வரவேற்ற போது எடுத்த படம். பக்கத்தில் பண்டித நேரு.



# குழந்தைக் கலை

ஆர். லக்ஷ்மி அம்மாள்

[குழந்தைகளுக்கு இசைந்த முறையில் அறிவுப் பசிக்குப் பாலூட்டுவதும் அன்னமிடுவதும் ஓர் அருங்கலை. துள்ளித்திரியும் குழந்தைகளைத் துடுக்கடக்கிப் பள்ளிச் சிறையில் போட்டு வைப்பது பழைய முறை என்பதும் குழந்தைகளை அறிவிலே வளரவிட வேண்டும் என்பதும் டாக்டர் மாண்டிஸாரி முதலான குழந்தைக் கலைஞர்களின் தேர்ந்த கருத்து. இத்தகைய குழந்தைக் கலை இன்றும் குழந்தையாகவே யிருக்கிறது. எனினும் வளர்ச்சிக்குரிய அறிகுறிகள் தென்படுகின்றன. மேலை நாடுகளில் மானஸ சாஸ்திர ரீதியாகப் பல ஆராய்ச்சிகள் இத்துறையில் நடைபெற்று வருகின்றன. இவற்றின் ஸாரமான சில பகுதிகளைத் திரட்டி நமது வாசக நேயர்களுக்கு வழங்க ஸ்ரீமதி ஆர். லட்சுமி அம்மாள் முன் வந்திருக்கிறார்.

இவர் சென்ற பதினைந்து ஆண்டுகளாகக் குழந்தைக் கலைத்துறையில் தக்க பயிற்சியும் அனுபவமும் ஆராய்ச்சித் திறமையும் பெற்றிருக்கிறார். உலகப் புகழ் வாய்ந்த டாக்டர் மாண்டிஸாரி அம்மையாருடன் நெருங்கிப் பழகும் வசதியும் பெற்றவர். இவர் வாரந்தோறும் எழுதும் கட்டுரைகள் வாசக மித்திரர்களுக்கும் முக்கியமாகப் பெற்றோர்களுக்கும், மூலாதாரக் கல்வி ஆசிரியர்களுக்கும்—ஒரு புது விருந்தாகும் என்பது எமது நம்பிக்கை.]

## பூ, குழந்தை புஸ்தகம்

ஹிரணியன் கொடுந் தவம் செய்துகொண்டிருக்கிறான். கொடுமையான வரங்களைப் பெற்று ஹிம்ஸை நெறியில் அகில லோக சக்ரவர்த்தியாகவும், ஸர்வாதிகாரியாகவும் விளங்க வேண்டும் என்ற ஒருமையுள்ளத்துடன் தவம் கிடக்கிறான். அப்போது ஹிரணிய பத்தினி அரண்மனையில் கர்ப்பமாக இருக்கிறாள். கணவனிடம் காதலுள்ளவள்தான்; ஆனால் அந்த நோக்கங்களில், லட்சியங்களில், ஆசையில்லை, அனுதாபமில்லை. தன் வயிற்றிலுள்ள குழந்தை க்ஷேமமாயிருந்து நல்ல வழியில் உலகப் பிரசித்தமாக விளங்க வேண்டும் என்பதுதான் இப்பெண்ணரசியின் ஒருமையுள்ளம்.

காட்டிலே அசுர ஆவேசத்துடன், ஆதிக்க வேட்கையுடன், அவன் தவம் கிடக்க, அந்தப்புரத்திலே இவள் தோழியருடன் வீணாகானம், வாய்ப்பாட்டு முதலான பொழுது போக்குகளில் ஈடுபட்டு இசை வெள்ளத்திலே மூழ்கிக் கிடந்தாள். இவளது நன்னோக்கத்தையும் சங்கீதப் பிரேமையையும் அறிந்துகொண்ட தேவமுனியாகிய நாரதர் வந்து தோன்றினார் வீணையும் கையுமாக. ஹரிநாம சங்கீர்த்தனம் செய்தார் ஆனந்தமாக. செவி குளிர, உளம் குளிர, உடல் குளிர அனுபவித்தாள் மகாராணி. தேவகீதத்தை, இசையிலே மிதந்துவந்த பகவத் பக்தியை.

நாரதர் நல்லுரைகள் வழங்கினார்: பகவானுடைய திருவிளையாடல்களைக் கதை கதையாக எடுத்துக் காட்டினார். அன்பு நெறியைப் பக்குவமாக வெளியிட்டார். "சத்தியமே ஜயம்" 'தர்மம் தலை காக்கும்' என்பதை வசீகரமான சுலோகங்களாலும் உவமைகளாலும் உபதேசித்தார். அமுதமாய்ப் பருகினாள் ஹிரணியமகிஷி. எப்படியோ கருவிலுள்ள சிசுவும் அந்த ஊட்டம் பெற்று வளர்ந்தது.

## கருவிலே திரு

ஹிரண்யதேவி பெற்றெடுத்தாள் பிரகலாதன் என்ற குழந்தையை. கருவிலே திருவாளனாகி விட்ட ஹிரண்யபுத்திரன், தன் உயிரினும் அதிகமாக மன்னுயிரை நேசிக்கும் தாயுள்ளம் பெற்றான். பக்திவெள்ளத்திலே மூழ்கி மூழ்கி; பக்தர்களுக்கெல்லாம் ஓர் இலக்கியமானான். இக்குழந்தையை அந்தத் தாய் தான் எவ்வளவு நன்றாகச் சிறந்தமுறையில் வளர்த்திருக்க வேண்டும்!

நிலத்தின் தன்மை பயிருக்கு உண்டு; நூலின் தன்மை சேலைக்கு உண்டு; தாயின் தன்மை குழந்தைக்கும் உண்டு. கருவுற்றிருக்கும் தாயின் மனநிலை, பொழுது போக்கு, விருப்பம், லட்சியம் எல்லாம் குழந்தையைப் பாதிக்கின்றன, பெரிதும் பாதிக்கின்றன. லோகபயங்கரனான ஹிரணியனது மனைவி பண்பட்ட உள்ளத்தாலும், தூய இனிய சிந்தனைகளாலும் கேள்விகளாலும் பொழுதுபோக்குகளாலும், கருவிலுள்ள குழந்தையை ஞான உருவாக்கி விட்டாள். ஹிட்லரின் தாயோ, பண்பட்டுப் பக்குவமாகாத உள்ளத்திலே, கண்ட கண்ட கனவுகளுக்கிடையே பேராசைகளைப் பேணி வளர்த்து ஒரு லோக பயங்கரனை ஈன்றெடுத்தாள். ஹிரண்யதேவியின் தூய குழந்தையுள்ளம் பிரகலாதனை ஞானக் குழந்தையாக்கி, பக்தியின் சிகரத்திலே தூக்கி வைத்தது; தன் கணவனுடைய பயங்கர ஸர்வாதிகார மனப்பான்மையோடு முற்றும் முரண்பட்ட கருவிலே திருவுடைய ஒரு மனப் பண்பைச் சிருஷ்டித்துவிட்டது. ஹிட்லரின் தாயோ வீணான கனவுகளாலும் அசுர ஆவேச நினைவுகளாலும் நவீன ஹிரணியன் என்றுசொல்லத் தக்க ஹிட்லரைப் படைத்துவிட்டாள்.



## இயற்கையில் தெய்விக அழகுச் சக்தி

தாய் பக்தியுள்ளவளாக இருப்பதென்றால், அதற்கு ஒரு விரிந்த பொருள் கொள்ளவேண்டும். தெய்வபக்தி மட்டும் போதாது. உண்மையான தெய்வபக்தி, உலகத்திலும் இயற்கையிலும் தெய்வத்தைப் பார்ப்பதுதான்; தெய்விக அழகுகளைக் கண்டு களிப்பது தான்; கலைகளில் மனுஷ்ய ஹிருதயங்களின் தெய்விக அழகுகளை அனுபவிப்பதுதான்.

நிலவிலே கடற்கரை ஏதோ ஒரு தேவலோகத்திலிருந்து வந்து இறங்கி விட்டது போலத் தோன்றும் ...ற்றால மலையருவி மண்ணுலக அழகோடு விண்ணுலக அழகையும் எப்படியோ இசைத்துக் காட்டுகிறது. பூங்காவனத்திலுள்ள பூக்கள் தேவதூதர்களைப் போல் முகங்காட்டிச் சிரிக்கின்றன. இத்தகைய இயற்கையழகுகளுக்கிடையே, அழகிய, சக்தி வாய்ந்த, லட்சியங்களுடன், கலைச் செல்வத்துடன் பொழுது போக்குவது கர்ப்பஸ்திரீக்கு ஒரு நல்ல பயிற்சி; கருவிலுள்ள சிசுவுக்கும் நல்ல பயிற்சிதான்!

இயற்கை யழகுகளுக்கு இடையே, இயற்கையின் நிசப்தத்திலே தியானம் எளிதில் சித்திக்கும். இத்தகைய தியானத்திலே, மனோபாவம் உருவாக்கும் நல்விருப்பங்களும் லட்சியங்களும் அபார சக்தி பெறுகின்றன. செங்கல்-சுண்ணாம்பு வீட்டிலே அல்லது ஸிமெண்ட் மாளிகைகளிலே, மோட்டார்—டிராம் கூச்சல்களுக்கு இடையே ரேடியோ சங்கீதம், ஸினிமாக்காட்சி, பத்திரிகைச் சிறுகதை முதலிய கலைச் சாதனங்களாலும் கிடைக்கமுடியாத சாந்தியும் ஆத்மசுகமும், இயற்கையின் மாளிகையாகிய மலைக்காட்டிலே பூஞ்சோலையிலே, இயற்கையன்னையின் மடியிலே கிடைப்பது சுலபம். இத்தகைய சூழல்களில் கர்ப்ப ஸ்திரீ தனக்கும் தன் குழந்தைக்கும் உரிய ஞான உணவைப் பெறக்கூடும். இத்தகைய சூழல்கள் உள்ளொளியைத் தூண்டிவிடும்; தாயின் தியானத்தைக் குழந்தைக்குத் தரிசனமாய்க் காட்டவும் கூடும்.

மேக சஞ்சாரமுள்ள மலைக் காடுகளையும், கண்ணுக்கெட்டிய தூரம்வரை அலைமேல் அலை எறியும் கடலையும், சிங்காரப் பூங்காவனத்தையும் உயிர் தரும் மும்மைப் பொருள்கள் என்று ஒரு மகாகவி கூறியுள்ளார். காதலனும், கடவுளும் இம்முப்பொருள்போல் இனியர் என்றும் அக்கவிஞர் குறிப்பிடுகின்றார். குறித்த இம் முப்பொருளும் கர்ப்ப ஸ்திரீகளுக்கு விசேஷ உயிரும் ஆரோக்கியமும் அளிக்கின்றன. கணவனுடைய தோழமையும்—சிற்றின்பக் கூட்டுறவல்ல—தாயாகும் பெண்ணின் மனப் பண்பிற்குத் தக்க துணையாகக் கூடும். பக்தியுள்ளம் மன அமைதியை விளைத்து உள்ளக் கோயிலைத் தூய்மை செய்யும்; ஆத்ம சுகத்திற்கு உற்ற துணையாகும். சமய உணர்ச்சியைப்போல் கலை உணர்வும் இன்றியமையாதது. கலையுணர்ச்சி சௌந்தரிய உணர்ச்சியைத் தூண்டி உள்ளக் கோயிலை அழகு செய்யும்.

## நவீன நாரதர்

இந்நாளில்,—நாரதர் வந்து நல்லுரை வழங்க இயலாத இப்பகுத்தறிவுயுகத்தில்— பத்திரிகைகளும் புஸ்தகங்களுமே நாரதர்களாக வந்து கலையுணர்வைத் தூண்டுகின்றன.

நாரதரைக் கலகப்பிரியர் என்று வர்ணிக்கும் புராண கதைகள் உண்டு. இத்தகைய நாரதர்களாகக் கலகம் விளைக்கும் பத்திரிகைகள் நமது நாட்டிலும் காணப்படுகின்றன. நாரதர் வெளிப் பார்வைக்குக் கலகம் விளைத்த போதிலும் நன்மை செய்வதையே தேர்ந்த நோக்கமாக உடையவர் என்பர். பற்பல வாதங்களைக் கிளப்பி உண்மை காண முயலும் பத்திரிகைகளும் நற்பயனை விளைப்பனவேயாகும். ஆனால், கலகத்தையும் கலக்கத்தையுமே விளைக்க முயலும் பத்திரிகைகளையும், புஸ்தகங்களையும் பாராமலிருப்பதே நல்லது, பெண்களுக்கு விசேஷமாக நல்லது. நல்ல புஸ்தகங்களை—அறிவையும் மன அமைதியையும் தூண்டி வளர்க்கும் புஸ்தகங்களை —முக்கியமாக, அழகான கவிதைப் புஸ்தகங்களை வாசிப்பது, தாயாகும் பெண்மணிக்கு மிகச் சிறந்த பொழுதுபோக்குகளில் ஒன்று.

## கவியின்பமும் தாய்மைப்பண்பும்

எல்லாருக்கும் கவிதையில் விருப்பம் ஏற்படுவதில்லை. சித்திரப் பார்வை இல்லாதவர்களுக்குச் சித்திரம் வெறும் கோடுகளாகவும் நிறக்கலவைகளாகவும் தோன்றலாம். இயற்கையழகுகளில் ஈடுபடாத உள்ளத்திற்கு ஒரு பூ சாதாரணப் பூவேதான்; பூமகளின் புன்னகையன்று; தேவ முகங் காட்டி நகை புரியும் காட்சியும் அன்று. இப்படியே கவிதை-நாட்டம் இல்லாதவர்களுக்குக் கவிதை என்பது வெறும் சொல்லடுக்கே—கவிஞன் கற்பனைதான், புலவன் சொல்லும் பொய்யுரைதான்! உப்பு, புளி, அரிசி, விறகு வாங்க உதவாத செல்லாக் காசு! ஆனால், கவிதையுள்ளம் வாய்ந்த ரஸிகர்களுக்குக் கவிதை என்பது புலமைப் பேரின்பம்—கலா மோகினியின் சப்த சொரூபம். கவிதையில் ஈடுபடும் ரஸிகர்கள் பாக்கியசாலிகள். உத்தமக் கவிதையை ரஸித்துப் படிப்பது மிக மிக உயர்ந்த பொழுது போக்கு. கவிதையில் ஈடுபடும் தாய்மார்கள் —கர்ப்ப ஸ்திரீகள்-தங்கள் குழந்தைகளின் உள்ளொளியைத் தூண்டி, மனோபாவத்திலே உயர்ந்த லட்சியங்களை எளிதில் விதைக்கக் கூடும்.

## குழந்தைச் செல்வம்

தாய்க்குக் குழந்தை, உருவமெடுத்து வரும் கவிதை. காதலின்பமும் கவிதையின்பமும் குழந்தையின்பமும் ஸாராம்சத்தில் ஒன்றே.

பிள்ளைக் கனியமுதே!—
கண்ணம்மா!
பேசும்பொற் சித்திரமே!
அள்ளி அணைத்திடவே—
என் முன்னே
ஆடி வரும் தேனே!

என்று பாரதியார் தாயாகிப் பாடும் குழந்தைப்பாட்டை, அப் பாட்டின் தொடக்கக் குறிப்பு சொல்லுகிறபடி "பரா சக்தியைக் குழந்தையாகக் கண்டு சொல்லிய பாட்டு" என்று கருதவேண்டிய அவசியமில்லை. குழந்தைக் கண்ணனை நோக்கி அவன் தாய் பாடிய பாட்டாகக் கருதவேண்டிய நிர்ப்பந்தமும் இல்லை. எந்தக் குழந்தையும்—அழகில்லாத குழந்தைகூட—அதன் தாய்க்குக் கண்ணம்மா தான். பரா சக்திதான்!—தெய்வக்காட்சி தான்!

தாயைப் புதியதொரு அன்பு-வெள்ளத்திலே ஆழ்த்திவிடுகிறது குழந்தை. பிள்ளைமைச் செல்வத்திற்கு மேல் வேறு எந்தச் செல்வத்தையும் தாயுள்ளம் அதிகமாக மதிப்பதில்லை.

சின்னஞ் சிறு கிளியே!
—கண்ணம்மா!
செல்வக் களஞ்சியமே!

என்று கொஞ்சும் தாயின் ஹிருதயம்,

சீர் பெற்று வாழ்வதற்கே
—உன்னைப்போல்
செல்வம் பிறிது முண்டோ?

என்று உள்ளபடியே நம்பிப் புது வாழ்வு பெற ஆசைப்படுகிறது,—தன் குழந்தையை நோக்கி தன் குழந்தைக்காக.

இத்தகைய செல்லக் குழந்தையைக் 'கர்ப்ப ஸ்ரீமான்'

(கருவிலே திருவுடையவன்) ஆக்குவதற்கு ஒவ்வொரு தாயும்-தாயாகும் ஒவ்வொரு பெண்ணும்-இயன்ற வரையில் முயல வேண்டியது அவசியம் அல்லவா?

(பால்கள் ஜீ-பார்)

## வெங்காயத்தின் முன்னேற்றம்

★

(சகோ வரதராஜன்)

கோபாலனும், கமலாவும் ஓடி வந்து, "பாட்டீ, இன்று ஒரு கதை சொல்லு" என்றார்கள். உடனே பாட்டி "சரி. அமைதியாக இருந்தால் சொல்லுகிறேன்" என்றாள். "சரி, பாட்டி." என்றார்கள் கோபாலனும், கமலாவும்.

பாட்டி சொல்லத் தொடங்கினாள்.

முன்னொரு காலத்தில் இமயமலைச் சாரலில் ஒரு வெங்காயம் தவம் செய்து வந்தது. அதன் பக்திக்கு மெச்சி மும்மூர்த்தி முன் தோன்றி "உனக்கு என்ன வரம் வேண்டும்?" என்று கேட்டார். வெங்காயம் சட்டென்று "எனக்கு உங்களைப் போல் மூன்று தலைகள் வேண்டும்" என்றது. உடனே வெங்காய் மூன்று வெங்காய்கள் ஒட்டிக்கொண்டிருப்பதுபோல் தோன்றியது.

மறுபடியும் வெங்காயம் சிவபெருமானை நோக்கி தவம் செய்தது. சிவபெருமான் அதன் முன் தோன்றி. "உனக்கு என்ன வரம் வேண்டும்?" என்று கேட்டார். உடனே வெங்காயம் "என்னை யாராவது நறுக்கினால் அவர்கள் கண்ணில் ஜலம் வர வேண்டும்" என்றது. சிவபெருமான் வரம் தந்து மறைந்தார்.

வெங்காயத்தின் ஆத்திரம் இன்னும் தீரவில்லை. அது விஷ்ணுவை நோக்கி. தவம் செய்தது. விஷ்ணுவும் அதன் பக்திக்கு மெச்சி அதன்முன் தோன்றி "என்ன வரம் வேண்டும்?" என்று கேட்டார். வெங்காயம் "என்னை யார் உரித்தாலும் உரிக்க உரிக்கத் தோலாக மாற வேண்டும்" என்றது. விஷ்ணு அந்த வரத்தைக் கொடுத்துவிட்டு மறைந்தார்.

அன்று முதல் வெங்காயத்திற்கு மூன்று தலைகள் உண்டாயிற்று. அதை யார் நறுக்கினாலும், அவர்கள் கண்ணில் ஜலம் வரத் தொடங்கியது. உரிக்க உரிக்கத் தோலாகவும் மாறத் தொடங்கியது." என்று பாட்டி கதை சொல்லி முடித்தாள்.

## ஞாபகப்படுத்துகிறோம்

★

'சுதேசமித்திரன்' வாரப் பதிப்பில் வெளிவரும் கதைகள், கட்டுரைகள், கவிதைகள், இவற்றில் வரும் பெயர்கள், சம்பவங்கள் முதலியன எவரையும் குறிப்பிடுவன அல்ல. அவை முற்றிலும் கற்பனையே.

—ஆசிரியர்



# ஸ்ரீ ஸ்வாதித் திருநாள் ஸாஹித்யங்கள்

'ராஜ்ய ஸேவா நிரத' பசுர்மநகுடி
ஸ்ரீநிவாஸஐயர் ஸ்வரப்படுத்தியது

பல்லவி

ஸ்மரஜனக ! சுபசரிதாகில லோகநாயக ! மாமவ (ஸ்மர)
4 2

அனுபல்லவி

தருண ஸாரஸ தளநயன ! தபனீயருசி வஸனதர !
3 4
தனுவினிந்தித நீரதாத்ருத நாரதானதபூரித ; (ஸ்மர)
3 3 3 3 4 3

சரணங்கள்

பாபதஹன ! ஸுரவிமத பாடனப்ரஸித !
3
ஸ்ரீபதே ! ஜலநிதிசயன! பவதாபனுசனபடுதர ! (ஸ்மர)
4 4
பாவனஸுகுண ! நிருபம ! பானுசசிநயன !
3 4
தேவ தேவ ! புராரி கமலஜநி விஷுதி பதிவந்தித ! (ஸ்மர)
3 3 3 34 3
பாலிதபுவன ஸமுதய ! பரமபுருஷ ! ஹரே !
4 3
பாலசோபித ஸுரபிம்நக மத ! பத்மனப ! ஜகன்னுத ! (ஸ்மர)
2 4 4 3 3 3 4 3

| | |
|---|---|
| ஸ்மரஜனக | —மன்மதனுடைய தந்தையே |
| சுப சரித<br>4 | —நன்மை பயக்கும் சரித்திரத்தையுடையவனே |
| அகிலலோக<br>2 | —எவ்வுலகத்திற்கும் |
| நாயக | —தலைவ! |
| மாம், அவ | —என்னைக் காத்தருள்புரிவாயாக. |
| தருண ஸாரஸதள<br>3 | —அன்று மலர்ந்த தாமரையிதழை யொத்த |
| நயன | —கண்களையுடையவனே! |
| தபனீயருசி | —பொன் போன்று அழகிய |
| வஸனதர<br>4 | — வஸ்திரமணிந்தவனே |
| தனுவினிந்தித நீரத<br>3 3 | —நீருண்ட மேகத்தைப் பழிக்கும் சரீரகாந்தியையுடையவனே |
| ஆத்ருதநாரத<br>3 3 | —நாரதனுக்கு நன்மைகளைச் செய்தவனே. |
| ஆனதபூரித<br>4 3 | —(தன்னை) வணங்கும் ஜனங்களுக்குக் கோரிய வரங்களையளிப்பவனே |
| பாபதஹன<br>3 | —பாபத்தை அறவே யொழிப்பவனே |

| | |
|---|---|
| ஸுரவிமத | —தேவர்களின் பகைவர்களான அசுரர்களைக் |
| பாடனப்ரவித | —கொல்வதில் நிகரற்று விளங்குவோனே |
| ஸ்ரீபதே | —ஸ்ரீ தேவியின் நாயகனே |
| ஜலநிதிசயன 4 | —பாற்கடலில் பள்ளிகொண்டவனே |
| பவதாப நாசனபடுதர 4 | —இல்வாழ்க்கையிலுள்ள தாபங்களையகற்றுவதில் ஈடுபட்டிருப்பவனே |
| பாவனஸுகுண 3 | —புனிதமான நற்குணங்கள் அமைந்தவனே |
| நிருபம | —நிகரற்றவனே |
| பானுசசிநயன 4 | —சூரியன், சந்திரன் இவர்களைக் கண்களாகக் கொண்டவனே |
| தேவ தேவ 3 3 | —தேவர்களிற் சிறந்த தேவனே |
| புராரி, கமலஜ | —திரிபுரத்தை சிவன், பிரமன் |
| திவிஷத்திபதி 3 3 4 | —தேவேந்திரன் (இவர்களால்) |
| வந்தித 3 | —வணங்கப்படுவோனே |
| பாலிதபுவன ஸமுதய 4 3 | —எவ்வுலகங்களையும் காத்தருள் புரிபவனே |
| பரம புருஷ | —புருஷர்களிற் சிறந்தவனே |
| ஹரே! | —(பக்தர்களின் பாபங்களை) தீர்ப்பவனே |
| பாலசோபி 2 4 | —நெற்றியில் |
| ஸுரபிம்ருக மத 4 3 3 | —கஸ்தூரி, முதலிய வாசனைத் திரவியங்களைத் திலகமாயணிந்தவனே |
| ஜகன்னுத 3 | —எவ்வுயிர்களாலும் துதிக்கப்படும் |
| பத்மனுப 3 4 | —ஹே பதுமனுபப் பெருமானே (என்னைக்காத்தருள் புரிவாயாக) |

**ராகம் : பெஹாக்** **தாளம் : சாபு**

ஆ: ஸகமபநிதநிஸ் — அ: ஸ்நிதபமகமகாரிஸ.

(29—வது மேளத்தில் ஜன்யம்.)

### பல்லவி

1. ; ; ; — ; ; ஸா ஸா ‖ மா கா மா — பா பா நீ தா ‖
. . . . . ஸ்ம ர ஜ ன க ஸு ப ச ரி

ஸா ; ; — ; நிரி ஸா நீ ‖ த ப பா ; மா — கா மா ரீ கா ‖
தா . . . அ . ‍கி ல லோ . . . க நா . ய க

பா மா பா — கா மா ரீ மக ‖ ரி ஸ ஸா ; ; — ; ; ; ; ‖
மா . . . . . ம . வ . . . . . . . .

2. க ம ப த நி த — ப ம க ரி ஸா ஸா ‖ மா கா மா — பா பா நீ தா ‖
. . . . . . . . . . ஸ்ம ர ஜ ன க ஸு ப ச ரி

ஸ் ம் ம் க் ரி க் — . ரி ஸா தா ஸ் நி ‖ த ப பா ; மா — கா மா ரீ கா ‖
த . . . . . . . அ கி ல . லோ . . . க நா . ய க

க ம ப த நி த — மபதப மக கா ரிஸநீ ‖ ஸா ; ; — கமபதநிஸ்ரிக் ‖
மா . . . . . . . . . . . ம . . வ . . . . . . . . . . .

ம் க் ரி ஸ் நி த — . . ம க ரி ‖
. . . . . . . . . . .

“ஸ்மரஜனக சுபசரித”

### அனுபல்லவி

1. ; ம க மா — பா நி த நீ ஸா ‖ க்ரி ஸ்நி ஸ்ா — ஸ்ஸ் நித பா பநி ‖
. த ரு ண ஸா . . ர ஸ த . ள . க ய . ன . த ப .

த நீ ; ; — ; ; நி ஸ் நி த ‖ ப ம தா பா — ; ; ; ; ‖
நீ . . . . . . . . . ய . . . . . . . .

2. ; மக மா — பா நித நீ ஸா ‖ க்ரி ஸ்நி ஸ்ா — ஸ்ஸ் நித பா மா ‖
. தரு ண ஸா . . ர . ஸ த . ள . ந ய . ன . த ப

பா ; ; — பா மா பா தா ‖ கா பாதப மா — கா ஸஸா கா,ப ‖
நீ . . ய ரு சி வ ஸ ன . . த ர . . தப . .

மா பா ; — பா மா பா தா ‖ கா பாதப மா — கா ; ; ; ‖
நீ . . ய ரு சி வ ஸ ன . . த ர . . .

; மக மா — பா நித நீ ஸா ‖ க்ரி ஸ்நி ஸ்ா — ஸ்ஸ் நித பா மா ‖
. தல வி நி ந் . தி த நீ . . ர ந . . . த்ரு த

பா ; பா — பா ; பா ஸ்நி ‖ தபபா ; மா — க ம க ரி ‖
நா . ர தா . ந த . பூ . . . ரி த . . .

“ஸ்மரஜனக”

### சரணம்

பா ; ; — ; ; பா ஸ்நி ‖ தா பா மா — கா மா ரீ கா ‖
பா . . . . லி த . பு வ ன ஸ மு த ய

கம தப மக — கரி மக ரிஸ ஸா நீ ‖ ஸா ; ; — ; ; கஸகப ‖
ப . ர . ம . பு . ரு . ஷ . . ஹ ரே . . . . . . . .

ம பா ; — ; ; பரி ரிஸ் ‖ நித பா மா — கா மா ரீ கா ‖
பா . . . . லி . த . பு . வ ன . ஸ மு த ய

கம பத நித — மபதப மக ரிக ரிஸநீ ‖ ஸா ; ; — ; ; ; ; ‖
ப . ர . ம . பு . . . ரு . ஷ . ஹ . . ரே . . . . . .

; மக மா — பா நித நீ ஸா ‖ க்ரி ஸ்நி ஸ்ா — ஸ்ஸ் நித பம பா ‖
. பா . ல சோ . . பி த ஸு . ர . பி ம்ரு . க . ம . த

பா ; பா — பா ; பா ஸ்நி ‖ தப பா ; மா — கம கரி ‖
ப த் ம நா . ப ஜ . க ன் . . னு த . . .

“ஸ்மரஜனக சுபசரித”

+ இந்த அடையாளம் ப்ரதி மத்யமத்தையும் கைசிகி நிஷாதத்தையும் குறிக்கும்.




# காளிங்கனின் கைகள்

'கௌசிகன்'

அன்று அரசர் வந்து உட்கார்ந்தவுடன் சபையில் நிம்மதி நிலவவில்லை ஒருவரோடு ஒருவர் ஏதோ மெதுவான குரலில் பேசிக்கொண்டனர். அவர்களின் கண்கள் அரசரின் அருகில் விருந்தாளிகளுக்கென்று போடப்பட்டுள்ள ஆசனத்தில் அமர்ந்திருந்த அந்தப் புது மனிதனைப் பார்த்தபடி இருந்தது. அவனைப் பற்றி அறிய அவர்களுக்குள்ள ஆவல் நன்றாக வெளிப்பட்டது. அந்தப் புது மனிதனின் கூரிய கண்களும், நீண்ட மூக்கும் அலட்சியமான புன்னகையும் அவனிடம் ஏதோ விசேஷத் தன்மை இருக்கிறது என்பதைப் புலப்படுத்தியது.

அரசர், சபையோரின் பொறுமையை அதிகநேரம் சோதிக்க விரும்பவில்லை. "சபையோர்களே! இன்று நமது சபையை அலங்கரிக்கும் இப்பெரியார் கருணாகரர். ஜோதிஷத்தில் மகா நிபுணர். வடநாட்டவரான இவர் யாத்திரா மார்க்கமாக நம் நாட்டை அடைந்துள்ளார். இவரை, சிலகாலம் நமது விருந்தாளியாக ஏற்கும் பாக்யம் நமக்குக் கிடைத்திருக்கிறது. இவரது ஜோதிஷ வல்லமையை நான் என்னென்று சொல்வது. இவர் முக்காலங்களையும் அறிந்து சொல்கிறார். ஒரு மனிதனின் கைரேகையும், முகத்தையும் பார்த்தே அவனது வாழ்நாளில் நடந்ததையும், நடக்கப்போவதையும் சொல்லிவிடுகிறார்...ஒரு சந்தோஷகரமான செய்தி...இன்று இவர் தன் திறமையை உங்கள் முன்பு காட்ட இசைந்துள்ளார். நீங்கள் உங்கள் வருங்காலத்தை அறிய ஆவலுடையவர்களாக இருப்பீர்களென்று நினைக்கிறேன்" கருணாகரர் பக்கம் திரும்பி "தங்களுக்கு ஆட்சேபனை ஒன்றுமில்லையே" என்றார் அரசர்,

★

"அரசே! இதில் ஆட்சேபனை என்ன இருக்கிறது. எனது தொழிலே இதுதானே. அதோடு இத்தனை பெரிய சபையில் எனது வல்லமையைக் காட்ட சந்தர்ப்பமளித்ததற்கு நான் கடமைப்பட்டிருக்கிறேன்" என்றார் கருணாகரர்.

உடனே சபையில் கலகலப்பு உண்டாயிற்று. ஒவ்வொருவருக்கும் தங்களைப்பற்றி அறிந்துகொள்ள ஆவல்தான். ஆனால் காரணமற்ற ஒரு கூச்சம். பிறர் என்ன நினைப்பார்களோ என்ற பிரமை; எவருக்கும் கருணாகரரிடம் செல்வதற்குத் துணிவில்லை.

இதை அறிந்த அரசர் "சீலரே! ...ஏன் யோசனை? வாரும்...முதலில் உமது கையைக் காண்பியும்" என்று மந்திரியை அழைத்தார். மந்திரி சீலரும் புன்சிரிப்புடன் எழுந்து கருணாகரரிடம் கையை நீட்டினார்.

கருணாகரர் மந்திரியின் ரேகை பார்த்து அவர் சந்தேகங்களைத் தெளிய வைத்தார். மந்திரியின் ஆச்சரியத்திற்கு அளவே இல்லை. "என் சிறு பிராயத்தில் நடந்த சம்பவங்களை—நான் மறந்துவிட்டவைகளைக்கூட சொல்லிவிட்டாரே" என்று வியந்தவாறிருந்தார். பிறகு ஒவ்வொருவராகத் தங்கள் கைகளைக் காண்பிக்க ஆரம்பித்தனர். ஜோதிடரும் எல்லோருக்கும் திருப்திகரமாகச் சொல்லிக்கொண்டு வந்தார். சபை முழுதும் அவரைப்பற்றி புகழுரைகள் மிதந்தவண்ணமிருந்தது.

சட்டென்று மூலையில் ஒரு குரல் எழுந்தது. "ஏன் காளிங்கர் தன் கையைக் காண்பிக்கவில்லை? தன் ரகசியங்கள் பிறருக்குத் தெரிந்துவிடப் போகிறதென்றா?"

அப்போதுதான் எல்லோருக்கும் காளிங்கனின் நினைவு வந்தது. அரசரும் உடனே வேடிக்கையாக "அடாடா மறந்தேவிட்டேன் காளிங்கரே, வாரும் வாரும். முதலில் உமது வருங்காலத்தை அறிய நான் ஆவலுடையவனாய் இருக்கிறேன்" என்று அழைத்தார்.

காளிங்கன் பிரதம சேனாபதி, ஹேமாங்கதரின் மகன். இளவயதுதான். "அரசே! ஜோதிஷங்களில் எனக்கு நம்பிக்கையே கிடையாது. இனி நடக்கப் போவதைப்பற்றி நாம் ஏன் கவலைப்பட வேண்டும்? ......ம்......தாங்களே அழைக்கும்போது..." என்று புன்னகையுடன் கருணாகரரிடம் தன் கையை நீட்டினார் காளிங்கன்.

காளிங்கனின் வார்த்தைகள் கருணாகரருக்கு என்னவோ போலிருந்தது. அரசரும் இத்தகைய பதிலை எதிர்பார்க்கவில்லை. ஆதலால் கருணாகரர் ஏதாவது நினைத்துக்கொண்டுவிடப் போகிறாரே என்று "இளமை முறுக்கல்லவா? இதிலெல்லாம் மனம் செல்லாதது இயற்கைதானே" என்று மழுப்பினார்.

கருணாகரரும் சிரித்த வண்ணம் காளிங்கரை ஒரு தடவை பார்த்துவிட்டு "நல்ல ரேகை...உயர்ந்த குடும்பம்...பரம்பரையாகவே போர்த்தலைமை....பராக்கிரமசாலி எடுத்த காரியத்தை முடித்தே திருவார். 'இவர் பதவி ஏற்ற மறுவருடமே தன்பெயர் விளங்கச் செய்துகொண்டிருப்பார் ... ஆம்... ஒரு போரை...வெற்றிகிட்டாது' என்று கலங்கிய போரை வெற்றி முரசு ஒலிக்கும்படி செய்திருப்பார்...அரசே உண்மைதானே ?"

அரசர் சிரித்த வண்ணம் "உண்மை...உண்மை.... சென்ற ஆண்டு நடந்த சம்பவம். ஆனால் இவை எல்லாம் அவரைப்பற்றி எல்லோருமறிந்த விஷயங்கள்



தானே. அவர் பராக்கிரமத்தை அறியாதவரும் உண்டா? அவரைப்பற்றிய—ஏதாவது—புதிய விஷயங்களைச் சொல்லுங்கள்.

"புதிய விஷயங்கள்..." காளிங்கனின் கையைக் கூர்ந்து கவனித்தார். "இன்னும் இவருக்கு மணமாகவில்லை என்று சொல்லி காளிங்கனின் கையை அநேக கோணங்களில் திரும்பிப் பார்ப்பதும் அவர் முகத்தைப் பார்ப்பதுமாக இருந்தார். ஒன்றும் பேசவில்லை. அவர் இப்படித் தயங்கியது சபையோருக்கு—அரசர், காளிங்கன் உட்பட—ஆச்சரியத்தையும் ஆவலையும் அதிகப்படுத்தியது. கருணாகரர் காளிங்கன் கையைப் பார்த்தபடி புருவத்தை நெளித்தும், நெற்றியை சுருக்கியும் ஏதோ ஆழ்ந்த யோசனையில் இருந்தார். சலனமற்றிருந்த அவர் சட்டென்று புன்னகையை வரவழைத்துக்கொண்டு, நமது சேனாபதி நல்ல அதிருஷ்டசாலிதான். அரசர் இவரைத் தன் மருகராக்கிக்கொள்ள நினைத்திருக்கிறார்... என்று அரசரைத்திரும்பிப் பார்த்தார்.

அரசருக்கு உண்டான சந்தோஷத்துக்கு அளவே இல்லை. அது உண்மைதான். தன் மகள் பரிமளாவை காளிங்கனுக்கு மணம் செய்விக்க நினைத்திருந்தார். அவர் மனதிற்குள் தீர்மானித்தது வேறு யாருக்கும் தெரியாது. இதைக் கருணாகரர் சொல்லிவிடவே சபையோர் காளிங்கன் உட்பட ஆச்சர்யமடைந்தனர். காளிங்கனுக்கு ஜோதிஷத்தில் அக்கரை உண்டாகிவிட்டது. மிகுந்த ஆவலுடன் அவர் சொல்லப்போகும் ஒவ்வொரு வார்த்தையையும் எதிர்பார்த்தான். சட்டென்று கருணாகரர் முகம் மங்கிற்று. மெதுவாக தாழ்ந்த குரலில் 'ஆனால்.' என்று ஏதோ சொல்ல வந்தவர் சட்டென்று சமாளித்துக்கொண்டு சற்று உரத்த குரலில் "காளிங்கர் அரசருக்கு ஏற்ற மருகர்தான். நல்ல ஜாதகம். எல்லா வகையிலும் அரசரின் எண்ணத்திற்குப் பொருத்தமானவர்" என்று முடித்துவிட்டு எழுந்திருந்து அரசரின் விடை பெற்றுக்கொண்டு தன் விடுதிக்குச் சென்றார்.

ஆனால் காளிங்கனின் கண்களுக்கு கருணாகரரிடம் ஏற்பட்ட அதிசய மாறுதல் தப்பவில்லை. ஏதோ சொல்ல வந்த அவர் சட்டென்று மாற்றிக்கொண்டது மன்றி, உடனே அவ்விடத்தை விட்டுப்போனதும் அவன் மனதில் ஒரு பெரும் புயலைக் கிளப்பிவிட்டது. அவர் சொல்ல வந்தது என்ன? அதன் உண்மையை முழுதும் அறிய காளிங்கன் துடித்தான். அவன் மனம் நிலை கொள்ளவில்லை. ஜோதிஷத்தில் நம்பிக்கை இல்லாத காளிங்கன் கருணாகரரின் வீட்டை நோக்கி ஓடினான். பரிமளா தன் மனைவியாகப் போகிறாள் என்ற சந்தோஷச் செய்தி வேறு; அதைப்பற்றி இன்னும் விவரமாக அறிய வேறு அவன் மனம் துடித்தது.

காளிங்கன் உள்ளே நுழைந்தபோது கருணாகரர் ஏதோ சுவடிகளைப் புரட்டிக்கொண்டிருந்தார். இவனது வருகையை அவர் விரும்பவில்லை என்பது அவரது முகபாவத்திலிருந்து நன்றாகத் தெரிந்தது.


"காளிங்கரா...? வரவேண்டும்... வரவேண்டும்...ஏது என்னைத் தேடி இவ்வளவு தூரம்..." என்றார் கருணாகரர் புன்னகை பூத்த முகத்துடன்.

"ஒன்றுமில்லை...தங்களிடம்... இல்லை சபையில் என்னைப்பற்றி ஏதோ சொல்ல ஆரம்பித்த நீங்கள் சட்டென்று நிறுத்திக்கொண்டுவிட்டீர்கள். அதை விவரமாக அறிந்து போகவே வந்தேன் என்றான். காளிங்கன், தான் வந்த காரியத்தை உடனே சொல்லிவிட்டான். அதை அறிவதில் அவ்வளவு ஆவல், துடிப்பு.

'ஒன்றுமில்லையே! நான் எதையும் மறைத்துப் பேசவில்லை! களைப்பாக இருந்ததால் உடனே புறப்பட்டு வந்தேன்." "அவ்வளவுதான்.

"கருணாகரரே ... நான் அதை நம்பமுடியாது. நீர் எதையோ என்னிடமிருந்து மறைக்கிறீர். நான் என்னைப்பற்றி எந்தவிதமான செய்தியையும் கேட்கத் தயாராய் இருக்கிறேன்!"

காளிங்கரே உமக்குத்தான் ஜோதிஷத்தில் நம்பிக்கை இல்லையே! பின் ஏன் நடக்கப் போவதைப்பற்றி அறிந்துகொள்ள இப்படிப்பதறுகிறீர் என்றார் கருணாகரர், அவன் முதலில் சொன்ன வார்த்தையை மனதில் கொண்டு வியுமப் புன்னகையுடன்



"தாங்கள் நான் சொன்னதை மனதில் கொள்ளக்கூடாது; நான் தங்களை நன்றாக அறியவில்லை. எல்லோரையும் போல எண்ணினேன் தாங்கள் அதை மன்னித்து வருங்காலத்தைப் பற்றித் தயவுசெய்து உண்மையாக-ஒன்றையும் ஒளிக்காமல் சொல்லுங்கள். சொல்லித்தான் ஆகவேண்டும்' என்று பிடிவாதமாக மன்றாடினான்.

கருணாகரர் எவ்வளவோ சொல்லித் தட்டிக்கழிக்கப் பார்த்தார்

அவன் வாழ்க்கையில் நடந்த பல ருசிகரமான சம்பவங்களை எல்லாம் நினைப்பூட்டித் திருப்திப்படுத்தப் பார்த்தார். இதனுலெல்லாம் அவரிடம் அவனுக்கு நம்பிக்கை பலப்பட்டதே ஒழிய, ஒளித்த விஷயத்தை அறியாமல் போக அவன் விரும்பவில்லை.

அவன் விதி அவனை அவ்விதம் ஆட்டிவைத்தது.

"காளிங்கரே! நான் உண்மையாகச் சொல்கிறேன். வீணுக மனதைத் துன்பப்படுத்திக் கொள்ளாதீர்கள். உமது வருங்காலத்தைப்பற்றி அறிவதைவிட அறியாமலிருப்பதுமேல்" என்ருர். கருணுகரர்.

"நான்தான் எதையும் வரவேற்கத் தயாராக இருக்கிறேனே. தாங்கள் மட்டும் எதையும் ஒளிக்காமல்..."

"சரி உமது இஷ்டம்....விதி யாரைவிட்டது? ஆனுல் சொன்ன பிறகு.... பரிமளாவை உமக்குக் கொடுப்பதாகத்தான் அரசர் நிச்சயித்திருக்கிருர். ஆனுல்......" கருணுகரர் சற்று நிறுத்தினுர். அவர் மனம் மேலே சொல்ல இடந்தரவில்லை. வார்த்தைகள் வெளிவர மறுத்தன.

"கருணுகரரே தயங்கவேண்டாம், உண்மையைச் சொல்லுங்கள்" என்று துடித்தான் காளிங்கன்.

"ஆனுல்...நீர்...அதற்குள் ஒரு கொலை செய்யப்போகிறீர்" கருணுகரர் மட மடவென்று சொல்லிக்கொண்டே போனுர். "ஆம்...இந்தக் கைகள் ஒரு கொலை செய்யப் போகிறது" இதைச் சொல்லிவிட்டு அவர் வேறு அறைக்குச் சென்று விட்டார்.

காளிங்கனுக்கு அவர் வார்த்தைகள் பேயறைந்ததுபோல இருந்தன. ஒரு நிமிஷம் மூச்சே நின்றுவிட்டது. எங்கோ அதபாதாளத்தில் போய்க்கொண்டிருப்பது போன்ற உணர்ச்சி உண்டாயிற்று. ரத்தம் உறைந்தது. குபீரென்று உடல் முழுதும் வியர்த்தது. நாக்கு உலர்ந்தது. அவனுல் நிற்கக்கூட முடியவில்லை. உலகமே சுழல்வதுபோன்ற உணர்ச்சி உண்டாயிற்று. அப்படியே உட்கார்ந்து விட்டான்.

* * * *

அவன் அம்மாதிரி எவ்வளவு நேரம் உட்கார்ந்திருந்தானே, அவனுக்கே தெரியாது. வேலைக்காரன் விளக்கேற்றியபோதுதான் தன் நினைவடைந்தான். முகம் வெளுத்திருந்தது. மனம் குழம்பிக்கிடந்தது. நடைப் பிணம்போல போய்க்கொண்டிருந்தான். மனதில் பெரிய போராட்டம் "கருணுகரர் சொன்னது உண்மைதானு..., உண்மையாகவே எனது கைகள் கொலைகாரக் கைகள்தானு" அதை நினைத்தபோது அவன் உடல் சிலிர்த்தது.

காளிங்கன் உருத்தெரியாமல் மாறிவிட்டான். எப்போதும் ஏதோ சிந்தனை, ஏக்கம், பயம் நிறைந்த பார்வை, முகத்தில் களையே இல்லை. முதலிலெல்லாம் அவர் வார்த்தைகளில் அவனுக்கு நம்பிக்கை இல்லைதான் ஆனுல் மற்றவர்களுக்கு அவர் சொன்னபடி எல்லாம் நடக்கவே அவரைப்பற்றி எல்லோரும் புகழ்ந்து பேச ஆரம்பிக்கவே நமக்குச் சொன்னது மட்டும் பொய்யாக இருக்குமா? உண்மையாகத்தான் இருக்கவேண்டும் என்று அவர் வார்த்தைகளில் அவனையுமறியாமல் ஒரு நம்பிக்கை விழ ஆரம்பித்தது, அதை மறக்கவும் அவனுல் முடியவில்லை. அந்த வார்த்தைகள் அவன் காதுகளில் ஒலித்துக்கொண்டே இருந்தன.

"கொலை..." அதை நினைக்கும் போதே அவன் தலை சுற்றியது. தன் கைகளைப் பார்க்கவே பயப்பட்டான். இரண்டு பெரிய கைகள் ஒன்றில் சொட்டச்சொட்ட ரத்தம் பார்க்க பயங்கரமாக இருந்தது. மற்ருெரு கையில் பளபளவென்ற குத்துவாள். இதுதான் அவன் கண்களை மூடினுல் எதிரே வந்து நிற்கும் காட்சிகள். மன நிம்மதியை இழந்தான். எப்போதும் தனிமையில் பரந்த பொட்டலை வெறித்துப் பார்த்துக் கொண்டு வெகுநேரம் உட்கார்ந்திருப்பான். அப்போது அவன் மனதில் என்னென்ன குரூரமான எண்ணங்களெல்லாம வந்து போய்க்கொண்டிருக்குமோ தெரியாது! நாளுக்குநாள் நிலைமை மோசமாகிக்கொண்டு வந்தது. கண்ணைத் திறந்தாலும், மூடினுலும் கோரக்காட்சிகள் தோன்றி அவனை வதைத்தன. தன் கைகளை நினைத்தாலே நடுக்கமாயிருந்தது.

காளிங்கனின் இந்த மாறுதல் எல்லோருக்கும் ஆச்சரியமாயிருந்தது. மற்றவர் சேர்க்கையையே அவன் வெறுத்தான்.

நாளாக ஆக, இதை நினைத்து நினைத்து, மனதைக் குழப்பிக்கொண்டு "நாம் கட்டாயம் ஒரு கொலையைச் செய்துதான் ஆக வேண்டும். அப்போதுதான் நமக்கு நிம்மதி, சுகவாழ்வு பரிமளா...! எல்லாம் கிடைக்கும்" என்ற நிலைக்கு வந்துவிட்டான்.

ஒருநாள் நிலையற்ற நோக்குடன் குதிரைமீது சென்றுகொண்டிருந்தான் காளிங்கன். காரணமின்றி குதிரையை வெருட்டி வெகு வேகமாக நகரத்தின் எல்லைக்கும் வந்துவிட்டான். ஏன் எதற்காக அங்கே வந்தோமென்று அவனுக்கே விளங்கவில்லை, நன்ருக இருட்டிவிட்டது. தூரத்தில் வானளாவி நிற்கும் கோட்டையிலிருந்து மங்கிய வெளிச்சம் வந்துகொண்டிருந்தது. ஏதோ சிந்தனையுடன் அதையே உற்றுப்பார்த்துக்கொண்டிருந்த காளிங்கனுக்கு முகம் பிரகாசமடைந்தது.

கோட்டைக் காவலாளி மாதவன் தனியாக இருப்பது அவன் நினைவுக்கு வந்தது. "நான்செய்யவேண்டியதென்ன...? ஒரு கொலை! அவ்வளவுதானே...பிறகு மன நிம்மதி" ஏதோ ஒரு முடிவுக்கு வந்தான். மறு நிமிஷம் அவன் குதிரை மாதவனின் இருப்பிடத்தை நோக்கிச் சென்றுகொண்டிருந்தது.

கிழவன் மாதவன் இப்போதுள்ள அரசனின் தகப்பன் காலத்திலிருந்து இருப்பவன். கிழவனறிய வளர்ந்தவன் காளிங்கன். இப்போது காளிங்கனின் குரூரச் செய்கைக்கு இலக்காக இருந்தான் காளிஙகன்.

கிழவன்தானே, எப்படியும் இன்னும் சிறிது நாளில் சாகத்தான் போகிருன்...அதை நானே.. இப்போதே...மன நிம்மதியாவது ஏற்படும் என்றவன் வாய் முணுமுணுத்தது.

காளிங்கனின் வருகையால் கிழவன் திக்குமுக்காடிவிட்டான்! என்ன குறறமோ ஏதோ, வராதவர் வந்திருக்கிருரே என்ற நடுக்கத்தில் அவனுக்குக் காளிங்கனை எப்படி உபசரிப்பது என்றுகூடத் தெரியவில்லை. பாவம் காளிங்கனின் எண்ணத்தைக் கிழவன் அறிவானு?

கிழவன் அறையில் ஒரு அகல் விளக்கு மினுக்கிட்டுக் கொண்



டிருந்தது. அந்த மினுமினுப்புச்சி இருளின் தன்மையை அதிகப்படுத்திக் காட்டிற்று. அதன் மங்கலான வெளிச்சம் காளிங்கனின் ஆகிருதியை பூதாகாரமாகச் சுவரில் நடமாட வைத்தது

"எசமான் ஏது ஏளையைத் தேடிக்கிட்டு இம்புட்டு தூரம்? உட்காருங்க,..." என்று கையைப் பிசைந்தபடி பல்லைக் காட்டித் தன் உடலை அஷ்டகோணமாக்கிக் கொண்டான் கிழவன்.

காளிங்கன் அந்த அறையை சுற்றும் முற்றும் வெறித்துப் பார்த்துக்கொண்டிருந்தான். முகத்திலே பேய்க்களை... ஒன்றுமில்லை இந்தப் பக்கம் சுற்றிப் பார்க்க வந்தேன். அப்படியே இங்கே நுழைந்தேன். அவன் வாய் யந்திரம்போலச் சொல்லிற்றே ஒழிய அவன் கிழவனைப் பார்க்கவே இல்லை. கிழவனைப்பார்க்க மனம் ஒப்பவில்லை.

சட்டென்று "தாகத்திற்கு ஏதாவது தருகிருயா?—" என்ருன்.

'இதோ கொண்டுவரேனுங்க.... என்று கிழவன் பக்கத்திலுள்ள ஒரு சிறு அறையில் நுழைந்தான். சிறிதுநேரத்தில் கையில் பாலுடன் பக்கத்துஅறை வழியே வெளிவந்த கிழவன், காளிங்கனின் நிலையைப் [illegible] திடுக்கிட்டுவிட்டான்" [illegible] எசமான்.... என்னது.... [illegible]ங்க பாலு—" என்ருன் [illegible]நகமான குரலில்.

"அவன் கண்டதென்ன....?"

'காளிங்கன் கிழவன் உள்ளே நுழைந்த அறையில் வெளியில் வாயிற்படியின் அருகே நின்றுகொண்டு இருந்தான். அவனது தாங்கிய கைகளில் ஒருவலுவான தடி இருந்தது. அவன் கிழவனின் குரல் பின்னுல் கேட்கவே காளிங்கன் பதறிப்போய்த் திரும்பினுன். அவன் உடல் நடுங்கிக் கொண்டிருந்தது. முகம் கோரமாக மாறியது. விழிகள் பிதுங்கிவிடுவன் போல கிழவனை நோக்கியது. முகத்தில் முத்து முத்தாக வியர்வை. "வந்து......இல்லலே......இங்கே" என்று ஏதோ குளறினுன். கிழவனின் சந்தேகமான பார்வை அவனை நிலைகுலையச் செய்துவிட்டது. அனுபவப்பட்ட கிழவனுக்கு காளிங்கனைப்பற்றி ஜனங்கள் கொஞ்சநாளாகப் பேசி வருவதைக் கேட்ட கிழவனுக்கு, காளிங்கனின் செய்கை வியப்பாக இருந்தது. இதற்குள் காளிங்கன் வெளியே பாய்ந்து குதிரை மேலேறி இருளில் மறைந்துவிட்டான். கிழவனுக்கு அவன் செய்கை விளங்கவே இல்லை.

* * * *

காளிங்கன் நிலைமை இப்போது மிகவும் மோசமாகி விட்டது. தனது முதல் முயற்சி இப்படி அலங்கோலமாக முடியவே அவனுக்குப் பயம்பிடித்து விட்டது. கருணுகரரின் வார்த்தைகள் அவன் காதுகளில் சதா ஒலித்துக்கொண்டே இருந்தன.

ஏதோ சிந்தனையில் ஆழ்ந்திருந்த காளிங்கனை ஸ்வர்ணுவின் வரவு நினைவு உலகத்துக்குக் கொண்டு வந்தது. ஸ்வர்ணு பரிமளாவின் தோழி. மிகுந்த அழகுடையவள். அவள் கவர்ச்சி கண்டு பரிமளாவே ஓரோர் சமயம் பொருமைப்படுவதுண்டு. ஏன்— காளிங்கனே அவள் அழகில் மயங்கியதுண்டு. அப்படிப்பட்ட ஸ்வர்ணு சந்தோஷமாகக் குதித்துக்கொண்டு ஏதோ ஒரு பாட்டை முணுமுணுத்துக்கொண்டே அந்த வழியேவந்து கொண்டிருந்தாள். அவளுக்குக் காளிங்கன் அங்கிருப்பது தெரியாது. மற்ருெருநாளாயிருந்தால் காளிங்கன் அவள் அழகில் மயக்கங்கொண்டு அவளுடன் காதல் வார்த்தையாடி காதல் பிச்சை கேட்டிருப்பான்! ஆனுல் இப்போது அவளது அழகு, குறும்புத்தனமான சிரிப்பு, குதிப்பு, விளையாட்டு, பாட்டு இவை எல்லாம் அவனைப் பாதிக்கவே இல்லை. சிலைபோல அவளை உற்றுபபார்த்துக் கொண்டிருந்த காளிங்கனின் மனதில் அவளது செய்கை ஒரு கிளர்ச்சியை உண்டு பண்ணிற்று.

தன் போக்காக வந்துகொண்டிருந்த அவள் ஒரு அழகான ரோஜாவை...அன்றலர்ந்த வசீகரமான மலரைக் கண்டவுடன் சட்டென்று தன் பாட்டையும் குதிப்பையும் நிறுத்திவிட்டு கண்கள் ஆனந்தத்தால் அகல விரிய "எவ்வளவு அழகான பூ" என்று வெடுக்கென்று பறித்து அதை முகர்ந்தபின் தலையில் செருகிக்கொண்டு சென்ருள்.

'ஸ்வர்ணு அழகிற்கு அடிமை..." என்று அவன் வாய் முணுமுணுத்தது. மறுபடியும் சிந்தனைத் திரை. எழுந்து குறுக்கும் நெடுக்கும் உலாவினுன். 'ஆம்; சரியான யோசனை' என்று தனக்குத்தானே கூறிக்கொண்டான். ஏதோ ஒரு முடிவுக்கு வந்துவிட்டான் என்பதை அவன் முகக்குறி காட்டிற்று.

ஒரு அழகான வேலைப்பாடமைந்த பேழை. அதைப் பார்த்தவர்கள் நிச்சயம் அதன் அழகில் மயங்கி, அதைக் கையில் எடுத்து ஸ்பரிசித்துப் பார்க்க விரும்புவார்கள். அப்படிப்பட்ட பேழையில் காலனை வைத்து—ஆம்; ஒரு பூநாகத்தை வைத்து அதை ஸ்வர்ணுவின் கண்களில் படும்படி வைத்தான். பேழையின் அழகில் மயங்கி அதை ஆவலுடன் திறக்கும் ஸ்வர்ணுவின் முடிவைஎ திர்பார்த்திருந்தான் காளிங்கன். அவள் சேடிதானே! அவள உயிர் அவனுக்கு மதிப்பற்றதாகப்பட்டது.' எப்படி 'ஒரு கொலை' என்ற ஒரே நோக்கந்தான், இப்போது காளிங்கனுக்கு அவனுல் இந்த மனமும் மதயற்ற நிலையில் எத்தனை நாள் இருக்க முடியும்?

ஆனுல் விதி அவனை வேறுவிதமாக ஆட்டி வைக்க காத்திருந்தது. அவன் ஸ்வர்ணுவைக் கொல்ல நினைத்தான்; ஆனுல் நடந்ததோ...

ஸ்வர்ணுவைத் தேடிக்கொண்டு அங்கே வந்த பரிமளாவின் கண்களிலா அந்தப் பேழை படவேண்டும். விதி அவளை அங்கு இழுத்து வரும்போது அவளும், அவனும் அந்தப் பேழையும் என்ன செய்யும்? மேலே சொல்ல என்ன இருக்கிறது. ஸ்வர்ணுவின் முடிவைக் கேட்கக் காத்திருந்த காளிங்கனுக்கு-மனநிம்மதி அடைய மனப்பால் குடித்துக்கொண்டிருந்த காளிங்கனுக்கு-இடிபோல பரிமளாவின் இழவோலை வந்தது. அவன் நிலை எப்படி இருக்கும்! தன் நிலைவிழந்தான். தலை மயிரைப் பிய்த்துக் கொண்டான். வெறி பிடித்தவன் போல பயங்கரமாகக் கூச்சலிட்டான். அவன் மூளை கலங்கிவிட்டது. திடீரென்று பயங்கரமாகச் சிரிப்பான். மறு நிமிஷம் மௌனமாக சிந்தனை செய்வான்.

பரிமளாவை நான் மணம் செய்து கொள்ளப்போவதாகவல்லவா கருணுகரர் சொன்னுர்.... ஹ...ஹ...ஹா...மணமல்ல...மரணம் கொலை...கொலை...கொலை கொலைகாரக் கைகள்" தொண்டை கிழிய இடி இடி என்று உரக்கப்

பேய் போலச் சிரித்தான். அவனைப் பார்க்கவேபயங்கரமாக இருந்தது. வெறி பிடித்தவன்போல் வெளியே ஓடினான். நேரே கருணாகரரின் வீட்டை அடைந்தான். அவனது தோற்றத்தைக்கண்ட கருணாகரர் நடுநடுங்கி விட்டார்.

"கொலை...கொலை..கொலை காரக் கைகள்...ஹ...ஹ கருணாகரரே...!சரியான ஜோதிஷம்... அபாரமான ஜோதிஷம்...முக்காலு மறிந்தவரல்லவா...ஹா... ஹா...நான் பரிமளாவை மணமல்ல...மரணம் அடையச் செய்துவிட்டேன்...இனி எனக்குப் புகழ் கீர்த்தி...நிம்மதி...பரி...மளா? எல்லாம் உண்டல்லவா? ஹ...ஹ...ஹா என்று பேய்ச்சிரிப்பு சிரித்தான். அவன் கண்கள் ரத்தமாகச் சிவந்திருந்தன. உரோமம் குத்திட்டு நின்றது. முகம் 'ஐயோ' அதை நினைக்கவே முடியவில்லை.

"காளிங்கா-இது என்ன?...... ஐயோ...இது வேண்டாம் காளிங்கா...காளிங்கா என்று கருணாகரர் குழறினார். அவர் வாயிலிருந்து வார்த்தைகள் வெளிவரவில்லை. ஓடலாமென்றாலோ கால்களும் எழவில்லை,

வெறிபிடித்த காளிங்கன், இந்தக் கைகளால் ஒரு கொலை...ஹ.... ஹா...என்று இரண்டு கைகளையும் அகல விரித்துக்கொண்டு கருணாகரரை நெருங்கினான்.

* * * *

தனது மகளின் திடீர் மரணம் அரசருக்குப்பெரும் கலக்கத்தை உண்டாக்கியது. இது யார் செய்த வேலை என்று அவருக்கு விளங்கவில்லை. அந்தமாதிரிப் பேழையை அவர் இதுவரை பார்த்ததுமில்லை. கருணாகரர், தன் மகளுக்கு இவ்வளவு சீக்கிரத்தில் சாவு உண்டென்று சொல்லவில்லையே. ஒருவேளை வேண்டுமென்றேதான என்னிடம் அவ்விஷயத்தை ஒளித்துவிட்டாரோ என்று எண்ணமிட்டது அவர் உள்ளம். எதற்கும் அவரைச் சென்று பார்ப்போம். அவள் மரணத்தின் காரணத்தை அவர் ஒருவேளை சொல்லக்கூடும் என்று கருணாகரனைக் காணப் புறப்பட்டார் அரசர். பரிமளாவிற்குச் சிகிச்சை நடந்து கொண்டிருந்தது!


குதிரையிலிருந்து கீழே இறங்கி பரபரப்புடன் கதவைத் தள்ளிக்கொண்டு 'கருணாகரரே........" என்று கூப்பிட்ட வண்ணம் உள்ளே நுழைந்தார். உடனே திடுக்கிட்டு 'ஹா' என்று இரண்டடி பின்வாங்கினார்.

அங்கே அவர் கண்ட காட்சி ?

காளிங்கனின் இரண்டு கைகளுக்கும் இடையில் கருணாகரரின் கழுத்து இருந்தது. கருணாகரனின் நாக்கு வெளியே வந்து தலை தொங்கிக் கொண்டிருந்தது. காளிங்கன் அவர் இறந்ததுகூடத் தெரியாமல் இன்னும் அவர் கழுத்தை நெறித்துக்கொண்டிருந்தான். அவனது வெறி கொண்ட முகத்திலிருந்து வழியும் வியர்வை கருணாகரரின் ரத்த ஓட்டமற்ற கறுத்த முகத்தை பளபளக்கச் செய்தது.

இந்தக் கோரக் காட்சியைக் கண்ட அரசர் திகைத்து நின்றுவிட்டார். திடீரென்று கதவு திறககப்பட்டவுடன், காளிங்கன் கருணாகரரைவிட்டு விட்டு 'அமானுஷ்யமான குரலில்,

......கொலைகாரக் கைகள்......ஹா ஹா...கொலை...கொலை இந்தக் கைகள் ஒரு கொலை செய்யப் போகிறது: ஹா...ஹா...என்று உரக்கச் சிரித்தவண்ணம்வெளியே ஓடினான்.



மதுரையிலுள்ள சர்க்கார் பாலிடெக்னிக் இண்டஸ்டிரியல்ஸ்கூலின் வருடாந்திர விளையாட்டுப் பந்தயக் கொண்டாட்டம் 26-3-47-ம் தேதி மதுரை ஜில்லாகலெக்டர் ஸ்ரீ டி. ஐ. ஆர். மூர் ஐ. ஸி. எஸ். தலைமையில் சிறப்பாகக் கொண்டாடப்பட்ட சமயம் எடுத்த படம், பள்ளியின் சூப்பிரண்டெண்டு ஸ்ரீ கே. சீனிவாச அய்யங்கார் அவ்வமயம் ஸ்தாபன அபிவிருத்தி நிர்வாகத்தை விளக்கினார்.



# உக்ரோதயம்

வரகூர் வேங்கடதாஸன்

46

## 'ஒரு வார்த்தை'

[illegible]வனுடைய கோபத்தைக் கண்டு யாவரும் திடுக்கிட்டவர்களாய் எழுந்து நின்றார்கள்.

விக்கிரமாதித்தன் மட்டிலும் ஆதனத்தில் அமர்ந்திருந்தவாறே கம்பீரமான நோக்கிலே பாண்டியனை ஏறிட்டுப் பார்த்தான்.

கோபத்தால் ஏற்பட்ட பதற்றத்துடன் நின்றபடியே பாண்டியன் ராஜஸிம்மன் சில வார்த்தைகள் கூறலானான் :

"விக்கிரமரே, தாங்கள் இவ்விதம் யோசனை சொல்லுவீர்கள் என்று எதிர்பார்க்கவில்லை; என்னை அவமதிக்கும் இந்த யோசனையை நான் ஏற்றுக்கொள்ள முடியாது... தாங்கள் இப்படி...பகைவர் சூழ்ச்சியில் மனம் மாறிவிடுவீர்கள். என்று நினைத்திலேன்!...."

இவ்விதம் பாண்டியன் கூறி முடித்துவிட்டுப் பெருமூச்சுவிட்டான். அவன் உடல் பதறிக்கொண்டிருந்தது.

சில்லென்ற காற்றுச்சீறி வீசியது. கூடாரத்துக்குள். 'படபட' வென்ற சத்தத்துடன் கூடாரத்தின் திரைகள் காற்றால் மோதுண்டு அசைந்தன. கூடாரத்துக்குள் இருந்த அனைவரும் பேச்சவிந்து நின்றனர்.

"இது என் யோசனை!...நான் செய்த முடிவு! நியாயமான முடிவு! என் யோசனையை ஏற்றுக்கொள்வது தான் முறை!" என்று மீட்டும் விக்கிரமாதித்தன் தீவிரமான குரலில் கூறினான்.

"தாங்கள் விரும்பியதைச் செய்து கொள்வதுபற்றி நான் தடைசொல்லவில்லை;...ஆனால் தங்கள் யோசனையை நான் ஏற்றுக் கொள்ள முடியாது..." என்றான் பாண்டியன்.

விக்கிரமன் சற்று கோபக் குரலில் கூறலானான்:

"ராஜஸிம்மரே,.....நாகரிகமான செயல் எதுவோ, அதுவே உயர்ந்தது; உலகத்தால் பாராட்டுதற்குரியதுமாகும்...கங்க கன்னிகை தங்களை விரும்புகிறாள் என்பது உண்மையா?..."

"ஆம்!...கங்கபாடியில் நானும் அந்தக்கன்னிகையும் உள்ளம் கலந்தபின் இந்த விவாதம்...வீணல்லவா?"

"அவ்விதமானால் வலிதில் அவளை ...அடைய வேண்டுவது ஏன்?"

'அவளைச் சிறை செய்துள்ள... பல்லவனைச் சிறை செய்து அவளை எளிதில் அடைவேன். நான் வலிதில் அடைபவன் அல்ல!......இப்போது என் நோக்கம் முற்றும் பல்லவனையும், கங்கவேந்தனையும் சிறை செய்வதுதான்; அதன்பின் விடுதலையடைந்த கங்ககன்னிகை என்னை, தானாக அடைவாள்!..."

"ராஜஸிம்மரே....இது....அநீதமானது. உமக்குப் பகையாக நிற்கவில்லை நான்; ஆனால் தலைவணங்கி நிற்கும் பல்லவனை ஒறுப்பதில் காரி[illegible]ல்லை என்றுதான் சொல்கி[illegible]ன். உமக்கு லட்சியம் கங்க[illegible]ன்னிகை!...பலர் கூடிய பொது மன்றத்தில் அவளை நீர் வரித்துக்கொள்வதில் பெருமையேயன்றி அவமானமல்லவே!..பல்லவன் அதற்கு உடம்பட்டிருக்கிறான்; உம்மைப்போல் அவனும் மற்றவர்களும் அரசகுலத்தில் பிறந்தவர்கள், ஓர் அரசகுமாரியை மணப்பதில்...இந்த முறை நியாயமானது..."

"நான் மறுக்கிறேன் தங்கள்... யோசனையை!...என்னை விரும்பும் ராஜகுமாரியை நான் விடுதலை செய்வது என் கடமை! வீர பரம்பரையில் தோன்றிய எனக்கு...... பகைவென்று அவளை விடுதலை செய்வதே மேலென்று தோன்றுவதாய்...நான்...போரை நிறுத்த விரும்பவில்லை;.,....கங்ககன்னிகைக்காகச் சுயம்வரத்தையும் அனுமதிக்க முடியாது."

"ராஜஸிம்மரே, உம்முடைய பேச்சு என்னை வருத்தத்துக்கு ஆளாக்குகின்றது:...நான் சமாதான நிலையை விரும்புபவன்; போர்முறைகளில் பழகி வெறுப்புக்கொண்டுவிட்டேன். எனக்கு தலை வணங்கும் பல்லவனை நான் எதிர்ப்பது கொடுமையல்லவா?...'

"விக்கிரமரே,...தங்கள் நட்பு ஒன்றே எனக்குப்போதுமானது: தாங்கள் என் பொருட்டு இதுவரையில் எதிர்த்து நின்றதே என்

பாக்கியம்! என்னிடமுள்ள படைகளைக்கொண்டே நான் பல்லவனுடன் போர் புரிகின்றேன். தாங்கள்...விருப்பம்போல்...செய்க!...'' —இவ்விதம் ராஜஸிம்மன் சொல்லி முடித்தான்.

விக்கிரமன் நகைத்தான்.

''ராஜஸிம்மரே, நான்......என் படைகளுடன் என் நாடு திரும்புகின்றேன்,...ஆனால் ஒன்றுமட்டும் நிச்சயம்;...நாளைக்காலையில் காஞ்சி நகர் அரண்மனை சென்று பல்லவனுடன் பேசிவிட்டே போவேன். என் வரவை அவன் எதிர்பார்த்துக்கொண்டிருக்கிறான்; நாளை அவனைச் சந்தித்தபின்...என் நாடு திரும்பிவிடுவேன், என்னுடைய உதவி உமக்கு...இல்லாததற்காக வருந்த வேண்டாம்;...'' என்று கூறினான் விக்கிரமாதித்தன்.

சட்டென்று அப்போது கீர்த்திவர்மன் குறுகிட்டுக் கூறினான்.

''தந்தையே!...தாங்கள் திரும்பிச் செல்லுங்கள்!...நான் நிச்சயம் பாண்டிய வேந்தருக்கு உதவியாக நின்று பல்லவனை எதிர்க்கப் போகின்றேன்;......பாண்டியப் படைகளுக்கு உதவி புரிவது...... என் கடமை!...உதவிபுரிவதாக உறுதி கூறியபின்...பின்னடைவது நேர்மையல்ல: பல்லவனின் வலியை ஒடுக்காவிட்டால்...சளுக்கிய ராஜ்யத்திற்கே...கேடு விளையும்...''

இவ்விதம் கீர்த்திவர்மன் மொழிந்தான்.

''நல்லது!...என் நோக்கத்திற்கு மாறாக நீ செல்வதால் நான் வருந்தவில்லை;....நீ..பாண்டிய வேந்தனுக்கு உதவியாக நிற்பதால் நான்...கலங்கவில்லை; வருங்காலத்தில் பல்லவ சாளுக்கியர்களுக்குள் பகை பெரிதாக வளரும் என்பது ஒன்றே இதன் பயன்! தெரிந்ததா?'.

''பல்லவனை வலி ஒடுக்கி விட்டே நான் நாடு திரும்புவேன்!...'' என்றான் கீர்த்திவர்மன்.

''உன் வார்த்தைகள்....கனவு...''

''உண்மையில் நடக்கப்போவது ...''

இவ்விதம் கீர்த்திவர்மன் கூறவே பாண்டியன் கைகவித்தான்:

''விக்கிரமரே, தங்கள் புதல்வன் எனக்குத் துணையாக நிற்பது... என் பாக்கியம்; ஏனென்றால்.;.. வருங்காலத்தில் சளுக்கிய ராஜ்யத்து முடிமன்னனல்லவா!... ஆகவே...பல்லவன் வலி ஒடுக்கப்படுவது உறுதி!...நந்திவர்மனை வலி ஒடுக்கி விட்டபின்...இதோ சித்திரமாயனைச் சிங்காதனத்தில் ஏற்றுவேன்!''

''ராஜஸிம்மா!......இந்த வார்த்தைகள் பொய்யாகாமல் பார்த்துக் கொள்!...கங்க கன்னிகையை நீ அடைவதும், சித்திரமாயனைப் பல்லவ முடிமன்னனாக்குவதும்...மகத்தான காரியங்கள்! எளிதில் நிறைவேற்றக்கூடியன அல்ல!...தெரிந்ததா?'' என்றான் விக்கிரமாதித்தன். அவன் முகத்தில் குறு நகை துளும்பியது.

''வேந்தர் பிரதிக்ஞைகளை நிறைவேற்றி வைப்பதற்கு நாங்கள் ஆயத்தமாக இருக்கிறோம். நிச்சயம்...பல்லவனைச் சிறைப்பிடித்துக் கொணர்வோம்!...'' என்றார்கள்மாறன்காரியும், மற்றவர்களும்.

சித்திரமாயன் மனம் பொங்கிச் சில வார்த்தைகள் சொன்னான்.

''விக்கிரமரே,...நான் பல்லவச் சிங்காதனத்தில் வீற்றிருக்கும் உரிமையுடையவன்; இதை ராஷ்டிரகூட வைரமேகன்...உணர்ந்தும்...என்னை அவமதித்து விட்டான். ஆனால்,......பாண்டிய வேந்தர் எனக்கு அபயம் அளித்துள்ளார்: நான் உயிரை இழக்கவும் உறுதி கொண்டுள்ளேன்; எவ்விதமேனும் என் மனம் குளிர,...என் ஜன்மத் துரோகியான நந்திவர்மனைச் சிறைப் பிடித்து அவமதிக்க வேண்டுமென்பதே பிரதிக்ஞை! உயிருடன் இருந்தால் நிச்சயம் ஒரு நாளேனும் பல்லவச் சிங்காதனத்தில் வீற்றிருக்கும் பாக்கியத்தை எனக்குப்பாண்டிய வேந்தர் அளிப்பார்!...''

சித்திரமாயன் இவ்விதம் கூறியவுடன் பாண்டியன் கைகவித்தான்.

''விக்கிரமரே....இனி...பேசிப் பயனில்லை. என் படை வலி கொண்டும், என் துணைவர்களின் தோள்வலி கொண்டும் நான் பல்லவ சார்வபௌமத்தைத் தகர்த்து விடுவேன்!...இது உறுதி. என் உள்ளம் கவர்ந்த கங்ககன்னிகையையும் அடைவேன்;...இனி நடக்கப் போகும் போரால் தமிழ் நாட்டின் பெருமையை மிக மிக வளர்த்தவனாவேன்!..சோழ நாட்டில் வேரூன்றி விட்ட பல்லவாதிக்கத்தைச் சிதற அடிப்பதும் என் கடமை!..... தமிழரின் தனிப் பெரும் நாகரிகத்தைக் காப்பதும் என் பொறுப்பல்லவா!''

''ராஜஸிம்மரே......நன்றாகப் பேசுகின்றீர்!...உம்முடைய நோக்கம் வெற்றி பெறுமானால், நான் முதலில் உவகை அடைபவன்!... இனி நான் போய் வருகிறேன்;... அனைவருக்கும் என் நன்றி, கீர்த்திவர்மா!......கடமையைச்செய்து... விரைவில்...நாடு திரும்பு!......'' என்று கூறிவிட்டு எழுந்து நின்றான் விக்கிரமாதித்தன்.

அப்போது சற்று மனம் பதறியவனாய்க் கீர்த்திவர்மன் கூறினான்:

'தந்தையே! தாங்கள்... நாளை பல்லவனைச் சந்திக்கும்போது...... நியாயமாக நடந்துகொள்ள வேண்டுகிறேன்;...... சளுக்கியரின் பெருமையை மறக்கவேண்டாம்.''

'கீர்த்திவர்மா!...நீ நினைப்பது போல் நான் மாறுதலாக நடந்து கொள்ளமாட்டேன். என்னுடைய தலைமையைப் பல்லவன் ஏற்றுக்கொண்டான் என்பதை நீங்கள் அனைவரும் அறிந்துகொள்வீர்கள்: அவ்விதமே என் தலைமையை நிலைநிறுத்தி வருவேன்!...'' என்றான் விக்கிரமாதித்தன்.

''விக்கிரமரே !...நான் கூறியதாக நந்திவர்மனுக்கு ஒரு வார்த்தை கூற வேண்டுகிறேன். கங்க கன்னிகையை என்னிடம் அனுப்பிவிட்டு தன் குற்றத்திற்கு என் முன் தலை வணங்குவதாக இருந்தால் நான் போரை நிறு[illegible] அவனுடன் சமாதானம் [illegible] கிறேன் என்று உணர்த்த வ[illegible]டும்; இது என் வேண்டுகோள்'' என்றான் பாண்டியன் ராஜஸிம்மன்.

நகைப்புடன் விக்கிரமாதித்தன் தலையசைத்தான்.


''ராஜஸிம்மரே. ... உம்முடைய வேண்டுகோளை நான் உணர்த்த தவறமாட்டேன்!.........போய்வருகிறேன்'' என்று கூறிவிட்டுச் சரேலென்று கூடாரத்தைவிட்டு வெளியேறினான். பாண்டியனுடன் அனைவரும் பின் தொடர்ந்து வெளி வந்தார்கள்.

கூடாரத்தின் வாயிலில் நின்ற தேரின்முன் சென்று நின்று கொண்டான் விக்கிரமாதித்தன். ஒருமுறை அவன் மகனை கீர்த்திவர்மனை அமைதியாகநோக்கினான். உடனே தேரில் ஏறியமர்ந்தான். தேர் புறப்பட்டது.

அடுத்த சில கணங்களில் குதிரை வீரர் பலர் பின் தொடர்ந்துவர, விக்கிரமாதித்தனின் தேர் கடுகிச் சென்றது.

(தொடரும்)





லண்டன் நாடகப் பயிற்சி முறைகளில் இது ஒன்று. இப்படிப் பயிலுவதால் பெண்கள் ஒரே சீராக நடனமாடுவது சாத்தியமாகிறது.



பிரிட்டிஷ் மாதர் உடைகளில் வெகு சமீபத்தில் ஏற்பட்ட 'பாஷன்' இது.


# நீரழிவினால் அவதியுற்றவரின் உண்மைக் கதை

''ஐயா:

நீரழிவுக்காக நான் வைத்தியரைத் தேடியது இரண்டு வருஷ முன்பாகவே. அதற்கு முன்பிலிருந்தே வெகு நாட்களாக அவஸ்தைப்பட்டேன். வியாதியின் சின்னங்கள் **தாகம், காலில் வலி, அயர்வு, ஜீவசக்தியின்மை** இவைகளே. டாக்டர் காலையில் 30 யூனிட்டும் இரவில் இருமடங்கு சக்தியுமாக இன்சுலின் கொடுத்தார். இதுபோல 12 மாதங்கள் மருந்து பிரயோகிக்கப்பட்டு அவதியுற்றேன். அதன் பிறகு தான் **டயமெலின்** மருந்தைப்பற்றி நியூஜிலந்து ரேடியோ ரிகார்டில் கேள்வியுற்று உடனே, இம்மாத்திரைகளை வாங்கினேன்.

முதல் சில தினங்கள் உடம்பு ஒரு மாதிரியாகவிருந்தது. முதல் வாரம் முடிவடைந்தவுடன் உடம்பு தேற ஆரம்பித்தது. உடம்பு தேறி வருவதுபற்றிய உணர்ச்சியை நானே தெரிந்து கொண்டது தவிர. பார்ப்பவர் அனைவருக்கும் நன்கு புலப்படுமாறு உடம்பு சொஸ்தமடைந்து வந்தது.

**டயமெலின்** சிகிச்சையின் மூலம் இப்பொழுது நான் பூரண குணம் பெற்றுள்ளேன். நீர் பரிசோதனையின் மூலம் நீரில் துளியளவுகூட சர்க்கரை இல்லை என்பது தெரிகிறது.

(ஒப்) —F. மிச்சல்.

மேற்சொன்ன கடிதம், எம்மிடம் தினசரி குவியும் ஏராளமான நற்சாட்சிகளுள் ஒன்றாகும். இன்றே ஒரு புட்டி மாத்திரை வாங்கிச் சாப்பிட்டால் அதன் அற்புத குணத்தை அறிவீர்கள். எல்லா முக்கிய மருந்து வியாபாரிகளிடமும் புட்டி 1-க்கு ரூ. 5 வீதமும் அல்லது தபாற்செலவில்லாத வி. பி. பி மூலம் கீழ்க்கண்ட விலாசத்திலும் கிடைக்கும்.

**DIAMELIN**

Post Box No. 107, CALCUTTA

அநேக வருஷகால ஆராய்ச்சியின் பலன்


"ஸ்ரீவிஸ்-ஆம்லா" ஹேர் ஆயில்

• குளிர்ச்சிக்கும் ஊக்கத்திற்கும்.
• கேசத்தை வளரச்செய்கிறது.
• கருப்பு நிறமாக்குகிறது.




பாலிய சக்தியை மீண்டும் அடையுங்கள்

வாலிபரின் சொத்தை, நீண்ட நாள் அனுபவிக்கலாம்



விஞ்ஞானம் முதுமைக்கு மாற்றில்லை என்கிறது. உங்கள் 30 அல்லது 40-வது வயதில் இளமையில் விளைந்த தவறுகள் உச்ச நிலையை அடைகின்றன. ஆண், பெண் சரீர தத்துவ நிபுணரின், ஆச்சரியமான, ஈடில்லாத விஞ்ஞான பூர்வமான சிகிச்சையினால் ஆயிரக்கணக்கான ஆடவரும் பெண்டிரும் அமோகமான, ஆனந்தமான, வாழ்க்கையை நிரந்தரமாக அனுபவித்து வருகின்றனர். வீரியத்தளர்ச்சி, ஆண் தன்மை இழத்தல், நரம்புத் தளர்ச்சி, நம்பிக்கை இழந்ததால் மனவெறுப்பு, ஸிபிலிஸ், கனோரியா, குதக ச... இன்னும் சரீர தத்... வியாதிகளுக்கும் ஆலோசனை கேளுங்கள்.

கோஷாக்களுக்கும், இதர ஸ்திரீகளுக்கும் பிரத்தியேகமான ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது.

எல்லா சிகிச்சைகளும் உத்திரவாதம்.

கன்ஸல்டிங் நேரம்:

காலை 8-மணி முதல் 12-மணி வரை. மாலை 4-மணி முதல் 7-மணி வரை. ஞாயிற்றுக்கிழமை காலை மாத்திரம்.

டாக்டர் நாரு

ஸரீர தத்வ நிபுணர்,

நாரு ஹாஸ்பிடல்,

24, பிராட்வே, சென்னை.

கடிதப்போக்குவரத்துகள் ரகசியமாக இருக்கும்.

சாஸ்திரீக ஜோதிஷம்

★

உமது வாழ்க்கையின் முக்கிய அம்சங்களாகிய உத்தியோகம், வியாபாரம், விவாகம், ஆரோக்கியம், தனப்பெருக்கு இவைகளை உமது ஜாதகத்தைக் கொண்டு சாஸ்திர ரீதியாகப் பரிசோதித்து, நம்பத் தகுந்த பலன்கள் சொல்லப்படும். ஒவ்வொரு அம்சத்திற்கும் ரூ. 2.

**Scientific Predictions,**
No. 9, Dandapani Road,
T. NAGAR :: MADRAS 17.

மாதவிடாய் நின்றுவிட்டால் எக்காரணத்தினால் ஆனாலும் ரிதுபிரபர்தினி கவர்ன்மெண்ட் ரிஜிஸ்டர்ட் ஒரே நாளில் ஹானியில்லாமல் வெளிப்படுத்தும். ரூ. 3. பர்பதி கர்ப்பத் தடைக்குச் சிறந்தது. தாற்காலிகம் ரூ. 2. நிரந்தரம் ரூ. 4-8-0. வி. பி. அணா 13.

விரை வீக்கம்

ஹர்னியா, யானைக்கால், முடக்குவாதம் முதலியவற்றை எளிதில் குணமாக்குவது பிஷேஹர தைலம். தடிப்பு, வலி, வீக்கம், விரைவில் மாயமாய் மறையும் ரூ. 3. உள் மருந்து ரூ. 2. வி. பி. அணா 13.

மகரத் பஜா— தோலா. ரூ. 8-0-0
சியவனப்ராஷ் டின் விலை ரூ. 2-8-0
திராக்ஷாரிஷ்டா புட்டி ரூ. 2-8-0
அசோகாரிஷ்டா புட்டி ரூ. 2-8-0
ஸரிபாத்யாரிஷ்டா புட்டி ரூ. 2-8-0
தசன சன்ஸ்கர் (பல்வலிக்கு) ரூ. 1.

KAVIRAJ
R. N CHAKRAVORTY (S.W.)
BHOWANIPORE. CALCUTTA 25.
Stockist: APPAH& Co. 286, China Bazaar Rd. MADRAS.

லிவர்க்யூர்

2 தனி மருந்துகள்

வியாதி அதிகம் முற்றியிருக்கும் சாதாரண ஸ்திதியில் உபயோகிக்க.

வியாதி மிகவும் பலப்பட்டு அபாயகரமாய் இருக்கும் சிக்கலான ஸ்திதியில் உபயோகிக்க.






ஸ்தாபிதம் 1924.

பிரபல ஜோதிஷர்



மஹா ராஜாக்களால் தங்க மெடல்கள் பரிசு பெற்றவர். ஒரு ஜாதகம் கணிக்க ரூ. 2. (ஜனன தேதி, டயம் தேவை) நேரில் ஒரு ஜாதகம் பார்க்க ரூ. 5. மாதவாரி ஒரு வருஷ பலன் எழுத ரூ. 5. ஷை பலனை வாரா வாரம் விவரமாக எழுத ரூ. 10. முஹூர்த்தம் அல்லது விவாக பொருத்தம் விவரித்து எழுத ரூ. 2. ஆரூடம் 3 கேள்விகளுக்கு ரூ. 1. மேல் கேள்வி 1-க்கு அணா 8. ஜாதகம் அல்லது எழுதும் நேரம் தேவை.

பண்டித காழியூர். ம. ஸ்ரீனிவாஸாச்சாரியார்,
"சந்திரிகை" எல்டாம்ஸ்ரோட், தேனாம்பேட்டை போஸ்டு, மதராஸ்.




சர்வதமான யௌவனத்தையும், வீரிய விருத்தியையும் உண்டாக்கி, புதிய இரத்த விருத்தியையும், ஞாபக சக்தியையும், இல்லற இன்பத்தில் நீண்ட போக சக்தியையும் தரும். 40-நாள் மருந்து ரூபாய் 3-12-0 வி.பி. செலவு வேறு.

ஜமதக்னி ஔஷதாலயா,
20, வடக்கு மாடவீதி
மயிலாப்பூர் :: சென்னை.

மாதவிடாய் நின்று விட்டதா? கவலை வேண்டாம்.

சாஸ்திரீக முறை தவறிய அபாயகரமான மருந்துகளை உபயோகிக்காதீர். புகழ்பெற்ற கவர்ன்மெண்டு ரிஜிஸ்டர்ட் ராஜ நியமோனி ஒரே தினத்தில் போக்களிக்கும். தீங்கற்றது. கடுமையான தற்கும் சிறந்த ஔஷதம். விலை ரூ. 3-8-0. ஸ்பெஷல் ராஜ நியமோனி நாள்பட்ட கேஸ்களுக்கு மட்டும் விலை ரூ. 10. உத்தரவாதம்பெற்றது. தபால் செலவு அணா 12. ரோதனி கர்ப்பத்தடைக்கு சிறந்த திங்கற்ற மருந்து. மாதவிடாய் ஒழுங்காயிருக்கும். நிரந்தரம் ரூ. 5. தாற்காலிகம் ரூ. 2-8-0. தபால் செலவு அணா 12.

Kaviraj. M. BHATTACHARYA (S. W.)
Kavya Vyakarantirta, Vishagacharya,
120/1/1. UPPER CIRCULAR ROAD, CALCUTTA 9.

தந்தி விலாசம்: "கோகுல்" ஸ்தாபிதம் 1909. டெலிபோன் நெ. 57

டி. எஸ். ஆர். & கோ.,

கும்பகோணம்.

(பிராஞ்ச / மன்னார்குடி)

சந்தனாதித் தைலம் — அரைக்கீரை விதைத் தைலம்

கோகுல் கூந்தல் தைலம்

கூந்தலுக்கு வளர்ச்சியையும், குளிர்ச்சியையும் கொடுப்பதில் நிகரற்றவை.

வத்திகளுள் சிறந்தது "கோகுல்" வத்திகள்

பல காய்கறி ஊறுகாய், கோகுல் வாசனைப் பாக்கு முதலிய இதர வாசனை சாமான்களும் கிடைக்கும்.

சோல் ஏஜெண்டுகள்:—
புஷ்பவனம் ஸ்டோர்ஸ்,
பைகிராப்ட்ஸ் ரோட்,
திருவல்லிக்கேணி, மதராஸ்.

(கோவை & பாலக்காடு ஏஜெண்டு)
B. Balapattabi Chettiyar,
246, Vysyal St.,
COIMBATORE.

# லோகோபகாரி

தமிழ் நாட்டில் சென்ற ஐம்பது ஆண்டுகளுக்கு மேலாகச் சிறந்த முறையில் தொண்டு புரிந்துவரும் லோகோபகாரி வாரப்பத்திரிகை பரலி. அ. நெல்லையப்பரையும், ஆ. கு. பூங்காவனத்தையும் ஆசிரியராகக்கொண்டு, அடுத்த சித்திரைத் திங்கள் முதல் தேதி 14—4—47 முதல் பல புதிய விஷயங்களுடன் அழகிய புதிய வடிவில் வெளிவரும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறோம். எல்லா இடங்களுக்கும் ஏஜண்டுகள் தேவை; விவரங்களுக்கு எழுதவும்.

மானேஜர், லோகோபகாரி,
17, கிடங்கு தெரு, சென்னை.

நிவாரணத்திற்கு — உத்தரவாதம்

## ரூ. 1000 இனாம்

எங்களுடைய

## “லெப்பர் க்யூர்”

18-வித குஷ்டங்களையும், வெண் குஷ்டம், வெட்டை, வெள்ளை முதலிய வியாதிகளையும் குணப்படுத்தாது என்று நிரூபிப்பவர்களுக்கு:
இலவச காட்லாக் (24 பாஷைகளில்)

தலைமை ஆபீஸ்:
வால்டேர், ஆர். எஸ்.

லக்ஷ்மி & கோ.,
2/135, பிராட்வே, மதராஸ்.

ஸ்திரீகளின் வியாதிகளுக்கு கேசரியை உபயோகியுங்கள்.

வாழ்க்கையில் இன்பம் எப்போதும் இருக்க


## ஆனந்த குசுமாகர லேகியம் (Registered)

சாப்பிடுங்கள்

தாது விருத்தி, இரத்த சுத்தி, ஜீரணசக்தி முதலியவைகளை ஏககாலத்தில் கொடுக்கக்கூடியது
தேகத்தின் உஷ்ண நோய்களுக்கு அற்புத பலனை அளிக்கக்கூடிய ஓர் உயர்ந்த ஔஷதம்

விலை ரூ. 2—8—0 :: விபரமான காட்லாக் இனாம்.

மலையாள மெடிகல் ஹால் (REGD)
189, வக்கீல் புது தெரு, — Post Box 27 — மதுரை.



★ ★ ★

ஸ்திரீகளின் ஆரோக்கியத்திற்கு





பண்டிட் டி. கோபாலாச்சார்லுவின்

# அருணா

கர்பாசயரோக நிவாரணி

அருணா ஸ்திரீகளின் தேக சுகத்திற்கு அவசியமான சிறந்த டானிக்-முறைப்படி தவறாமல் உபயோகித்தால் ஆரோக்கியத்தை விருத்தி செய்து வாழ்க்கையை நன்கு ரஸிக்கச் செய்யும்.





ஆயுர்வேதாஸ்ரமம் லிட்.
தி-நகர். . . மதராஸ்.

EASTERNS STE.

★ ★ ★





## கண்ணில் பூவிழுதல்

டிகான்ஸ் ஐக்யூர் (ரிஜிஸ்) ஒரு உத்தரவாதமான நிவாரணி. கண் வியாதிகள் எதற்கும் சிறந்தது. அபாயமற்றது. 1000-க் கணக்கான பேர் ஆபரேஷனில்லாமல் சொஸ்தமாயுள்ளனர். உலகப் பிரசித்தி பெற்றது. வெற்றிக்கு உத்தரவாதம். விவரம் இலவசம். விலை ரூ. 3. தபால் செலவு அணா 12.

## செவிடு

முழுச்செவிடு அல்லது அரைச்செவிடு, காதில் இரைச்சல், மற்றும் எக்காரணத்தினாலும் எவ்வித நோயானாலும் நாலே வாரத்தில் சொஸ்தப்படுத்துவதற்கு உத்தரவாதம். ஹானியற்றதும் உடனே பலனளிப்பதுமான மருந்து. கியாதிபெற்ற மூலிகை மருந்து. விவரங்கள் கேட்டால் எழுதுவோம்.

## குஷ்டம், வெண்குஷ்டம்

தீராத நோயும் தீரும். உடம்பு முழுவதுமோ அல்லது பாகத்தில் மட்டுமோ இருந்தாலும் சரி, எமது கியாதிபெற்ற ஹானியற்ற மூலிகைகளினால் நாலே வாரத்தில் பூரண குணம் காண்பீர்கள். விவரங்கள் கேட்டால் எழுதுவோம்.

KAMALA WORKS,
6, Panchpota, BENGAL.

## ரூ. 100 இனாம்

ஆச்சரியகரமான சக்தி வாய்ந்த சித்த யந்திரம்
(Govt. Regd.)

சக்தி வாய்ந்தது. “குப்த வசீகரண யந்திரத்தை” வைத்திருப்பதாலேயே கஷ்டமான காரியங்களிலும் வெற்றி பெற்றுவிடலாம். பலன் அளிக்கச் செய்வதில் எவ்வித கடின சாதனமும், தேவைகளும் அவசியமில்லை. இதனால் (ஆண், பெண்) நீர் விரும்பும் எவராகினும் உனக்கு அடங்கி வருவர். அசுப நட்சத்திரங்கள், விரோதி பகை இவைகள் நீங்கி, பரீட்சை, வர்த்தகம், வழக்கு, லாட்டரி, ரேஸ், உத்தியோகம், சந்தானம், ஐசுவரியம், கடன் நிவாரணம், பயங்கர வியாதிகள் இவைகளில் வெற்றி பெறுவதோடு, அதிருஷ்டசாலியாகவும் இருப்பீர்கள். பொய் என்று நிரூபிப்பவர்களுக்கு ரூ 100 இனாம். செம்பு ரூ. 2-8-0. வெள்ளி ரூ 3-0-0. சுத்த தங்கம் ரூ. 13-0-0.


## நரையை ஒழியுங்கள்.

சாயம் மூலம் இல்லை எமது ஆயுர்வேத வாசனைத் தைலம், நரை மயிரை நிரந்தரமாகக் கருப்பாகச் செய்து, மீண்டும் நரை ஏற்படாமல் பாதுகாக்கும். மூளை பலவீனம், மந்தம் முதலியவற்றைப் போக்கி, தலைவலியைக் குணப்படுத்தும், பார்வையை சீர்படுத்தும். நம்பிக்கையில்லையேல் தொகை வாபீஸ் என்ற உத்தரவாதம் பெறுங்கள். சொற்ப நரைக்கு ரூ. 2-8-0. அதற்கு மேற்பட்டது ரூ 3-8-0. எல்லா நரைக்கும் ரூ. 5.

Shree Kamrup Kamachhya Ashram.
No. 6. (P. O Katrisarai, Gaya)

## கைத்தறி கலர் புடவைகள் வேஷ்டிகள், அங்கவஸ்திரங்கள்

80நெ. 100நெ. நூலில் தயாரிப்பவர்கள்


S. M. S. R.
பாலசுந்தரம் செட்டி
உறையூர் P. O. திருச்சி.

# யோடிசால்

:(ரத்த சுத்தி திராவகம்):

தேகத்தில் உஷ்ணம் அதிகமாகி அதனால் ஏற்படக்கூடிய வெள்ளை, வெட்டை, மோழி முடக்கு சூலைகள், வாத மேகரோகங்கள், படை, சொறி முதலியவைகளைக் குணப்படுத்தி தேகத்திற்கு ஆரோக்கியத்தைக் கொடுப்பதுடன் ரத்த விருத்தியை உண்டாக்கும்.

பாட்டில் 1-க்கு விலை ரூ. 2.

# CIBOL: சைபால்

முகப்பரு, சொறி, சிரங்கு, வேனல்கட்டி, சேத்துப் புண், தீப்பட்ட புண், நமைச்சல் முதலிய சர்ம வியாதிகட்கு சிறந்தது.


டின் 1-க்கு விலை 0-6-0

எல்லாக் கடைகளிலும் கிடைக்கும்.

ஏஜெண்டுகள்:—
சென்னை நகர் & ஆந்திரா:
மெஸர்ஸ். ராஜன் டிரக் ஸ்டோர்ஸ், பி. டி., மதராஸ்.

தயாரிப்பவர்கள்:—
தி சௌத் இந்தியன் மானுபாக்சரிங் கம்பெனி, மதுரை.

# சிறந்த கூந்தல் உணவு



உங்கள் சரீரத்திற்கு நல்ல உணவு அவசியமானதுபோல் கூந்தலுக்கும் நல்ல உணவு அவசியமாகும். உங்கள் கூந்தலின் வசீகரம் நீங்கள் உபயோகிக்கும் கூந்தல் தைலத்தைப் பொறுத்ததே.

## காமினியா ஆயில் (ரெஜிஸ்டர்ட்)

மூளைக்குக் குளிர்ச்சியூட்டி, கூந்தல் வளர அவசியமான பலவித சத்துக்கள் சேர்ந்தது. மயிர்க்கால்களுக்கு அவசியமான போஷாக்கு அளிக்கையில், ஆரோக்யமாக வளரவும் உதவுகின்றது. பொடுவன்களைப் போக்கி, கூந்தல் உதிர்வதை நிறுத்தும்.

ஆயிரக்கணக்கானவர்கள் **காமினியா ஆயில்** உபயோகித்துப் புகழ்ந்துள்ளனர்.

இன்றே பரீக்ஷித்து திருப்தி அடையுங்கள்.
எல்லா ஸ்டோர்களிலும் விற்கப்படுவது.
எப்பொழுதும் உபயோகியுங்கள்.

## ஆடோ டில்பஹார் (ரெஜிஸ்டர்ட்)

இணையற்ற வாசனையுள்ளது., நீடித்த நறுமணம் உள்ளது. தபால் முதலிய சார்ஜிற்கு 4 அணா ஸ்டாம்பு அனுப்பி சாம்பிள் வாங்கிப் பாருங்கள்.

*Sole Agent:*—ANGLO INDIAN DRUG & CHEMICAL CO., 285, Jumma Musjid P. O. Box 2085, Bombay 2.

---





# Rgd. No. 2221.

27 வருஷமாய் தென்னாடு முழுவதும் பிரசித்தி பெற்று வரும்

## சேலம் மூன்று தாமரை பீடிகளை

உபயோகித்து சந்தோஷமடையுங்கள்.

Prop: S. அஹமத் உசேன், கோட்டை, சேலம். S.I.R.

---

# கணேஷ் காப்பிக்கொட்டை

சுவை, நறுமணமுள்ளவை





## கணேஷ் & கம்பெனி

39, தம்புசெட்டி தெரு, மதராஸ்.

பிராஞ்சு: சைனாபஜார், மதராஸ்.

---

இண்டோ பாம்

ஜுரத்திற்கு

உபயோகியுங்கள்

KARNIK BROS. BOMBAY 4.

---



# நம்பிக்கையே நாணயம் தரும்

...ட்டிமந்தி (தென்குடகு)
ஜனவரி 2, 1947.

நான் முதன் முதல் சில வைரங்களும் ரத்னங்களும் வாங்க நினைத்தபோது மனதிற்குள் ஒரு பெரிய போராட்டம் நிகழ்ந்தது. ஏனெனில், ரத்னப்பரீட்சையில் தேர்ந்த நிபுணர் உதவியின்றி ரத்னங்கள் வாங்கினால் ஏமாற்றமடைய வேண்டுமென்பதாக ஓர் எண்ணம் வேரூன்றும்படி செய்துவிட்டனர் சிலர். ஆனால் உங்கள் விளம்பரத்தைப் பார்த்தபின் அவ்வெண்ணம் சிறிது மறைந்து தபால்மூலமாக உங்களிடம் ஓர் ஆர்டர் கொடுக்கத் துணிந்தேன். எனினும் கொஞ்சம் பயத்துடன்தான். இதுவரை உங்களுடன் நேரடியான தொடர்பு இல்லாததே காரணம்.

இப்பொழுது தங்களிடம் ஆர்டர் கொடுத்ததுபற்றி மிகவும் சந்தோஷப்படுகிறேன். எனக்குத் தேவையான நகைகளையும், உத்தேச மதிப்பு அளவையும் குறிப்பிட்டெழுதியவுடன் மூன்று நகைகள்-நெக்லஸ், பிரேஸ்லட், மோதிரம் அனுப்பியதைப் பெற்றுக்கொண்டு பூரண திருப்தியடைகிறேன். சிறந்த ரத்னங்கள் பதித்து அழகிய மோஸ்தர் வேலைப்பாடுள்ள இந்நகைகள் ஒன்றையொன்று தூக்கியடிக்கின்றது. இவ்வளவு சீக்கிரமாகவும் சிறப்பாகவும் ஆர்டர்களைப் பூர்த்தி செய்வீர்கள் என்று நான் முதலில் நினைக்கவேயில்லை.

உங்களைப்போன்ற கியாதிபெற்ற ஸ்தாபனங்களில் நேரடியாக வியாபாரம் செய்வதுதான் உத்தமம் என்பதை நான் திட்டமாகச் சொல்வேன். உங்கள் விளம்பரத்தில் குறிப்பிட்டிருப்பது அனைத்தும் உண்மை. சுலபமானதுடன் நம்பிக்கையானதும்.

வந்தனம்.

உங்கள் அன்பன்,

(ஒப்பம்) N. சிட்டியப்பா.

ருசுப்பிக்கப்பட்டது

# ஸூரஜ்மல்ஸ்

நம்பிக்கையான நகை வியாபாரிகள்
"1895 ஸு முதல்"

313, எஸ்பிளனேட்,
மதராஸ்.

199455

...ஸால் — ...றெந்த கர்ப்பசய டானிக்

ஜிம்சுலின் — நீரழிவுக்கு அரிய ஔஷதம்

எக்ஸ்டென்ஸா... — க்ஷயம் காசத்துக்கு நிவாரண...

குமுதா — குழந்தை நோய்களுக்கு ஒப்பற்றது

அச்வா — சுக்குவாஸ் இருமலுக்கு நிகரற்றது

கோல்டன் ஸிரப் — விடமின் B-யுடன்

## தி இண்டிஜினஸ் ரிஸர்ச் பார்மஸி, லிமிடெட்.

48, அருணாசல நாயக்கன் தெரு, சிந்தாதிரிப்பேட்டை, மதராஸ்.
(பிராஞ்ச்: மாயவரம் S. I. Ry.)

இந்தியாவுக்கும் வெளிநாட்டுக்கும் ஏஜண்டுகள் தேவை.

எல்லாவிதமான நவீன

## ஆயுள், நெருப்பு இன்ஷூரன்ஸ்களுக்கு

எங்களைக் கலந்து ஆலோசிக்கவும்:

## சௌத் இந்தியா பயர் & ஜெனரல் இன்ஷூரன்ஸ் கம்பெனி, (கோயமுத்தூர்) லிமிடெட்.

தலைமை ஆபீஸ்: கோயமுத்தூர்.

★

கப்பல் மற்றும் எல்லாவிதமான விபத்து இன்ஷூரன்ஸ்களும் சீக்கிரமே ஆரம்பிக்கப்படும்.

Printed and published by S. Chakrapani Iyengar, at the Swadesamitran Power Press 3 & 4 Whites Road, Mount Road, Madras. Editor: C. R. Srinivasan, B. A.

...ஜைதை

...மார்வ...
...னர்.

...மலேகளை யொழிப்
மட்டுமெள, கீட
இப்போது எண்
...ய நோய்களைத்
...ன் அபார வல்
...இய நிபுணர்கள்
...கடந்து மதிக்கின்
...நாசினிகள்; கொடிய
...ய ச, கொசு, பேன்
...ள நிர்மூல நாசம்

...ன் போராட்டத்தில்
...விகள் பிரதானமானவை
...த்ரமும். DDT யென்பது,
...ரனட்கள் நிரந்தரமாக உப
...ங்களைக்கொல்லும் முந்திய
...று முற்றிலும் மாறுபட்டது.
... எண்ணை ஸொலுஷன் நீடித்த
சிறந்து விளங்குவது, ஏனெ
உபயோகித்த பின்னர் அதன்
...ம நெடுநாள் கெடாமலிருக்
...வர்கள், கூரைகள், கதவுகள்,
... முதலிய புறங்கள்மீது அதைத்
...தும், எண்ணை ஆவியாக எழும்
...று மீது ஓர் மெல்லிய, நாசகர
...ம் மீந்து நிற்கிறது. கீடங்கள்
...த்தை ஸ்பரிசித்ததும், அவைகள்
...யாக கூவரணையற்று, முடிவில்
...ன. DDTக்கு தீவிர சக்தி கிடை
...ரமதித்தே வேலை செய்கிறது.

...யைப்போலன்றி பிரீத்ரம் கீடங்களை
...யே கொல்லுகிறது. பிரீத்திரத்
...செயற்கை கலவைப் பொருட்கள்
...யமாகக் கலந்து, யுத்தத்திற்கு
...ந்த பிரீத்ரம் நீர்த்தாவிகளைவிட
...யா மேலான, தீவிர வன்மை
கீடநாசினிகள் இப்பொழுது
...யாக்கப்பட்டுள்ளன. ஒரு பிரீத்ரம்
...வில் அகப்பட்டுக்கொள்ளும் கீடங்
...டனேயோ கூவரணையற்று கீழே
...து சடுதி மடிகின்றன. ஒரு பிரீத்ரம்
...யால் அறையினின்று தொந்தரை
...யும் கீடங்களையெல்லாம் க்ஷணத்
...அகற்றமுடியும்.

...டியிருந்து கீடங்களை நிர்மூல நாசம்
...ய DDT பிரீத்ரம் இரண்டையும் சேர்ந்
...போல் உபயோகிப்பதே மேலென கீட
...த்திர நிபுணர்கள் கூறுகின்றனர்.

## கீடநாசினிகள்...




ப்ளிட் ஸர்பேஸ் ஸ்ப்ரே (FLIT Surface Spray) நிச்சயமாகக்கிடைக்க, அணிபா கச்செல்லும் போர் வீரர்களோடு கூடின பச்சை டப்பா கேளுங்கள். ப்ளிட் வாங்கும்போது மஞ்ச டப்பாட்டு போர்வீரன் இருக்கிறானு வெனக் கவனியுங்கள்.

நீடித்த பாதுகாப்புக்கு
**ப்ளிட்**
ஸர்பேஸ் ஸ்ப்ரே
உபயோகியுங்கள்

சடுதி சாகு அடிக்கும் வன்மைக்கு
**ப்ளிட்டை**
நம்புங்கள்

CF-5 TM

Printed and Published by S. Chakrapani Iyengar at the Swadesamitran Power Press. 3 & 4, Whites Road, Mount Road, Madras. Editor: C. R. Srinivasan, B. A.

Regd No 2514

# உடனடியாக

ராவ் பகதூர்

**S. R. கிருஷ்ணமூர்த்தி, B.E., M.I.E. (Ind.)**

*சார்டர்ட் என்ஜினியர்,*
*எலக்ட்ரிஸிடி டிபார்ட்மெண்ட்.*

ராயப்பேட்டை, மதராஸ்.
14 ஜூன் '47

ஐயன்மீர்,

*தாங்கள் சென்றவாரம் எனது பெண்ணிற்காக தயாரித்துக்கொடுத்த வைர நெக்லேஸின் மாதிரியையும், வேலைத் திறனையும் எல்லோரும் புகழ்ந்தனர் என்பதை யறிய நீங்கள் சந்தோஷப்படுவீர்கள்.*

*நெக்லேஸை 12 நாட்களுக்குள் தயாரித்து, வாக்களித்த நாளுக்கு ஒருநாள் முன்னதாகவே அது தேவையான வைபவத்திற்குச் சரியாகக் கொடுத்ததுபற்றி நான் குறிப்பாக உங்களுக்கு வந்தனமளிக்கின்றேன்.*

தங்கள் அன்புள்ள,

(ஒப்பம்) **S. R. கிருஷ்ணமூர்த்தி.**

# சேவை

அவ்வளவு நம்பிக்கையான

# ஸுரஜ்மல்ஸ்

**வைர வியாபாரிகள்.**

**313, எஸ்பிளனேட்,**
**மதராஸ்.**